# செம்மண்

நிலம் 1 துகள் 12 வள்ளுவர் ஆண்டு 2051 03 - 09 ஐப்பசி வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-




# இந்த உலகின் முதல் பெண்ணியவாதி யார்?

■ காயா

பூமியில் மனிதன் எவ்வாறு தோன்றினான்...? குரங்கிலிருந்து தோன்றினான் என்றும் நீரில் மிதக்கும் வகையிலான நுண்ணுயிர்களிலிருந்து தோன்றினான் என்றும் பல அனுமானங்களை முன்வைக்கின்றது அறிவியல். மெய்ஞானத்தின்படியும் மனிதனின் தோற்றம் குறித்துப் பல ஆருடங்கள் - ஐதீகங்கள் முன்வக்கப்படுகின்றன.

இதில் முதன்மையானது, கடவுளால் தோற்றுவிக்கப்பட்டதாக, எழுதப்பட்ட வரலாறாகப் பிரபல்யம் பெற்றிருக்கின்ற ஆதாம் - ஏவாள் கதை. கடவுள் தோற்றுவித்த முதல் மனிதர்கள் அவர்களே என்பது பலரது வாதமும்கூட. ஆதாமை ஆண் என்றும் ஏவாளைப் பெண் என்றும் குறிப்பிடுகின்ற சமயத்தவர்கள், அவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைகளே இன்றைக்குப் பூமி முழுதும் நிறைந்து கிடக்கின்ற மனிதர்கள் என்கிறார்கள்.

கடவுளால் நிர்வாணமாகப் படைக்கப்பட்ட இந்த ஆண் - பெண் இருவரும், படைக்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட அப்பிள் கனி ஒன்றைக் கடவுளின் சொல்லை மீறி உண்டதால் ஒருவர் மீது ஒருவருக்கு ஈர்ப்பு உண்டாகித் தமது நிர்வாண உடலைக் கண்டு வெட்கம் பூண்டனர் என்றும், அதனால் ஆடையைத் தேடினர் என்றும் அதன் பின்னரே ஒருவரோடு ஒருவர் இணைந்தனர் என்றும் ஆதாமும் ஏவாளும் குடும்பம் நடத்திய கதை நீள்கிறது.



சாவுகள் 20 லட்சத்தை தொடலாம் 03


சி வளர்ப்பு 06

தமிழருக்குத் தடை தமிழரே 11

மறக்க முடியாத மண்ணித்தலை தேர் 20

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# ஏன் எதிர்க்கவேண்டும்?

இலங்கை அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்து இரு தரப்பட்ட கருத்துக்கள், வாதங்கள் வெளியாகின்றன. ஒரு தரப்பு இந்தத் திருத்தம் வரவேகூடாது என்கிறது. மற்றொரு தரப்போ இந்தத் திருத்தம் வருவதால் ஒன்றும் கெட்டுவிடப்போவதில்லை, பாதிப்பேதும் இல்லை என்கிறது. அது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணையிலும் உள்ளது. அந்த வழக்கில் திருத்தத்திற்கு எதிராக தீர்ப்பு வரக்கூடும் என்கிற ஆழ்ந்த நம்பிக்கை எதுவும் இருக்காதபோதும், கொஞ்ச நஞ்ச ஆசையோடு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமது தரப்பு நியாயத்தைச் சொல்லி வருகின்றார்கள்.

இந்த நிலையில்தான் அதிபர் கோட்டாபய ராஜபக்சவினால் சிறப்பு அரசிதழ் (வர்த்தமானி) ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு மூலம் ஏற்கனவே அவரது வசம் இருக்கும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மேலும் சில அரச துறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் 7 அரச துறைகள் அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. அதாவது அதிபர் செயலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இப்போது அது 13ஆகி அதிகரித்துள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ள ஆறுமே அண்மையில் உருவாக்கப்பட்ட அதிபர் ஆணைக்குழுக்கள்தான். ஆனால், கடைசி இரண்டும்தான் மிக முக்கியமானவை. இலங்கைக் கல்வி விவகாரங்கள் தொடர்பான அதிபர் ஆணைக்குழு மற்றும் வறுமை ஒழிப்புடன் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அதிபர் ஆணைக்குழு. இத்தோடு கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் இடங்களை முகாமை செய்வதற்கான அதிபர் ஆணைக் குழுவும் அடங்குகின்றது. மற்றைய மூன்றும் படையினர் மற்றும் கொவிட்-19 தீநுண்மி (வைரஸ்) தொடர்பாக உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள்.

அதிபரின் தலைமையில் இந்த நாட்டில் ஒரு அமைச்சரவை இருக்கின்றது. அதற்கு உதவுவதற்கெனத் துணை அமைச்சர்களும் உள்ளனர். அவர்களுக்குரிய பணிகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கின்றபோதும் நாட்டின் மிக முக்கிய துறைகளான பாதுகாப்பு, கல்வி, பொருளாதாரம் ஆகியன அதிபரின் கொள்கை வகுப்பின் கீழேயே இயங்கவேண்டும்; இயங்கும் என்பதையே இந்த அரசிதழ் அறிவிப்பு கூறுகின்றது.

அடிப்படையில் பார்த்தால், இந்த நாட்டில் பாதுகாப்பு (நாட்டின் ஒருமைப்பாடு), கல்வி, பொருளாதாரம் ஆகிய இந்த மூன்று துறைகளிலும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கள், தாக்கங்கள், பின்னடைவுகளே 30 ஆண்டுகள் நீடித்த ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தன. நாட்டின் முன்னேற்றத்தைப் பாதித்தது.

இந்த மூன்று துறைகளிலும் பௌத்த சிங்கள மேன்மைவாதம் மட்டுமே கோலோச்சியதன் காரணமாகவே தமிழ், முஸ்லிம் இனங்கள் இந்த நாட்டில் தாம் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றோம் என்று எண்ணுகின்ற நிலைமை ஏற்பட்டது. அதன் விளைவாக ஆயுதப் போராட்டமும் பிரிந்து செல்லும் எண்ணமும் உருவானது.

மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள், அதிகாரத்தைப் பிடித்தவர்கள் இந்த மூன்று துறைகளையும் பௌத்த சிங்களவர்களுக்கு மட்டும் ஏற்றவகையில் கட்டமைத்ததன் காரணமாகவே இனங்களுக்கு இடையில் பிணக்கும், சண்டையும், ஆயுத மோதலும் உருவானது.

இப்போதும் இந்த மூன்று துறைகளும் அதிபர் என்கிற தனி மனிதனால், அதிலும் முழு அதிகாரங்களும் வழங்கப்பட்ட ஒரு தனி மனிதனால் அவரது கொள்கைக்கு ஏற்பக் கையாளப் படப்போகின்றது. முழுக்க முழுக்க அவரது கட்டுப்பாட்டில் மட்டுமே இந்தத் துறைகளின் போக்கும் செல்நெறியும் தீர்மானிக் கப்படப்போகின்றன. தன்னை ஒரு சிறந்த பௌத்த சிங்களவனாகவும் தான் பௌத்த சிங்களவர்களால் மட்டுமே தெரிவு செய்யப்பட்ட அதிபர் என்று எண்ணுபவராலும் மட்டுமே இவை கையாளப்படப்போகின்றது என்பதே அதன் எதிர்காலத்தைக் கூறப் போதுமானது. அத்தகையதொரு நிலையில் அந்த மனிதரிடம் மேலும் அதிகாரங்களைக் குவிப்பதற்கு இடமளிக்கும் ஒரு திருத்தம் இந்த நாட்டை மீண்டும் குட்டிச்சுவராக்கிவிடக்கூடும். எனவே அதற்கான வாய்ப்பைத் தவிர்ப்பதற்கு 20ஆவது திருத்தத்தை எதிர்ப்பது தமிழ், முஸ்லிம் மக்களின் தலையாய கடமை.

இவர்களிலும் முதலில் கடவுள் படைத்தது ஆதாம் ஆகிய ஆண் என்றும். ஆதாமைப் படைத்த கடவுள் அவனுக்குத் துணையாகப் பெண் ஒருத்தி தேவை என்பதை அறிந்து அவனது விலா என்பிலிருந்து ஏவாள் என்கிற பெண்ணை உருவாக்கினார் என்பதும் கதை. இப்படியிருக்க ஆதாமின் இரண்டாவது மனைவிதான் ஏவாள் என்பது பலரும் அறியாத இன்னொரு கதை.

### ஆதாமுக்கு இரண்டு மனைவிகளா...?

கடவுள் படைத்த உலகின் முதலாவது மனிதன் ஆதாமின் பெயரை இணையத்தில் தட்டச்சுச் செய்து அவன் குறித்துத் தேடியபோது, அவனுடைய வாழ்க்கைத் துணை என்று இரண்டு பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அதில் ஏவாளின் பெயர் இரண்டாவதாகத்தான் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு முதலில் இன்னொரு பெயர் இருந்தது. அது சுவாரசியமூட்டியது. அப்படியாயின் யார் அந்த ஆதாமின் முதல் மனைவி என்று தேடியபோதுதான் ஆதாமின் இரண்டாவது மனைவி தான் ஏவாள் என்கிற கதை கண்ணுக்கு எட்டியது.

கடவுள் முதலில் படைத்த மனிதன் ஆதாம் என்றிருக்க, அவனுக்காகக் கடவுள் படைத்த பெண் ஏவாள் என்றிருக்க, ஏவாள் ஆனவள் ஆதாமின் இரண்டாவது மனைவி என்கிறது இந்தக் கதை. ஏவாள் இரண்டாவது மனைவி என்றால், அவனது முதல் மனைவி யார்? முதல் மனைவி வேறொருத்தியாக இருந்தால், அவள் தானே உலகின் முதல் பெண்ணாகவும் இருக்க வேண்டும்? ஏவாள் எப்படி உலகின் முதல் பெண் ஆவாள்...?



கடவுள் படைத்த முதல் ஆண், ஆதாம். முதல் பெண் ஏவாள் அல்ல, லிலித். தரையில் கிடந்த தூசிகளைச் சேகரித்து ஆதாம், லிலித் இருவரையும் உருவாக்கிய கடவுள் அவர்களுக்கு சுவாசத்தை வழங்கி உயிர் வாழச் செய்தார். இருவரையும் ஒன்றாக, ஒரே விதத்தில்தான் கடவுள் படைத்தார் என்றாலும் இருவரும் சிறிது காலம்தான் ஒன்றாக வாழ்ந்தனர்.

இப்படிக் கேள்விகள் நீளத்தான் செய்கின்றன. இதனால், ஆதாம் - ஏவாள் படைப்புக் கதையைப் போல இந்த இரண்டாவது மனைவியின் கதையை யும் நோக்க வேண்டியிருக்கிறது. ஆதாமின் முதலாவது மனைவி லிலித் என்கிற பெண் என்கிறது இந்தக் கதை.

### எங்கே போனாள் லிலித்?

கடவுள் முதன் முதலில் படைத்த பெண் ஏவாள் இல்லை. லிலித்தே. இது ஒரு சில இடங்களில் எழுத்திலும், யூதர்கள், அவர் தம் புராணங்களில் செவி வழியாகவும் கடத்தப்படும் கதையாக இருக்கிறது. இந்தக் கதையின்படி லிலித் யாருக்கும் அடங்க மறுத்தாள். கணவன் ஆதாமையே எதிர்த்துக் கேள்வி கேட்டாள். இதனால் கடவுள் லிலித்தை அழித்துவிட்டு, ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஒரு பெண்ணை உருவாக்கினார். அவள்தான் ஏவாள். இதுவும் புராணம் சொல்கின்ற கதைதான். ஆனால், பிற்காலத்தில் புராணத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

லிலித் பற்றிய ஒரு குறிப்பு விவிலியம் பழைய ஏற்பாட்டில் உள்ள ஏசாயா எனும் நூலில் (34:14) இடம்பெற்றுள்ளது என்று சுட்டுகின்றனர் சிலர். இதன்படி, ஆந்தைகள் வாழும் இடம் என்று அழைக்கப்படும் ஒரு படு பயங்கரமான காட்டில் குள்ளநரிகள், கழுதைப்புலிகள் ஆகிய கொடூரமான விலங்குகளுடன் லிலித் என்னும் பெண் பேயும் குடியிருந்ததாம். அந்தப் பெண் பேய் பறவை வடிவில் இருந்தது என்று சிலரும் விலங்கு போல் காட்சியளித்தது என்று வேறு சிலரும் சொல்கிறார்கள். இரண்டும் அல்ல, லிலித் ஒரு சூழ்ச்சிக் கார தேவதை என்பது இன்னும் சிலரின் கருத்து.

இந்த லிலித்தின் வேலை என்ன? இரவில் உறங்கும் மனித உயிர்களை அழுத்திக் கொல்வது. குழந்தைகளைக் கவர்ந்து சென்று கொல்வது. ஆண்களை மயக்கிச் சாகடிப்பது. லிலித் பற்றிய விரிவான தகவல் யூத இதிகாசப் பிரதிகளிலும் வேறு சில ஏற்கப்படாத பைபிள் பிரதிகளிலும் இருக்கின்றனவாம்!

கடவுள் படைத்த முதல் ஆண், ஆதாம். முதல் பெண் ஏவாள் அல்ல, லிலித். தரையில் கிடந்த தூசிகளைச் சேகரித்து ஆதாம், லிலித் இருவரையும் உருவாக்கிய கடவுள் அவர்களுக்கு சுவாசத்தை வழங்கி உயிர் வாழச் செய்தார். இருவரையும் ஒன்றாக, ஒரே விதத்தில்தான் கடவுள் படைத்தார் என்றாலும் இருவரும் சிறிது காலம்தான் ஒன்றாக வாழ்ந்தனர். நீ எனக்கு சரிசமமான உயிர் அல்ல என்றான் ஆதாம். உண்மை தான், நான் உன்னைவிடப் புத்திசாலி என்றாள் லிலித். ஆதாமால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. நீ என்றென்றும் எனக்குக் கீழேதான் இருந்தாக வேண்டும் என்று வலியுறுத்தினான். நீயும் நானும் ஒரே கடவுளால் ஒன்றுபோல தூசியால் படைக்கப்பட்டோம் என்னும் நிலையில் நீ எப்படி என்னைவிட உயர்ந்தவன் ஆவாய் என்று அவனை எதிர்த்துக் கேள்வி எழுப்பிய லிலித் ஆதாமுடன் உடன்பட மறுத்துவிட்டாள். உடனே ஆதாம் பலாத்காரத்தைக் கொண்டு லிலித்தைத் தன் வயப்படுத்த முயன்றான். கோபமுற்ற லிலித் கடவுளின் பெயரை உச்சரித்தபடி காற்றில் பறந்து ஆதாமை விட்டுப் பிரிந்தாள்.

### லிலித்துக்குப் பதிலாக ஏவாள்


எனக்கு உதவியாக இருக்க வேண்டிய லிலித் என்னை விட்டு ஓடிவிட்டாள் என்று கடவுளிடம் ஆதாம் முறைப்படக் கடவுள் சில இறைத்தூதர்களை லிலித்திடம் அனுப்பி ஆதாமுடன் வந்து மகிழ்ச்சியாக இருக்குமாறும் உன் மூலம் அவன் தனது சந்ததியை விருத்தி செய்ய ஒத்துழைக்க

வேண்டும் என்றும் கோரினார். இதற்கு உடன்படாத லிலித்தை இறைதூதர்கள் மிரட்டியும் பார்த்தார்கள்.

லிலித் இறுதிவரை அதற்கு உடன்பட வில்லை. லிலித்தை ஆதாமுடன் சேர்க்கும் முயற்சியில் தோற்றுப்போன கடவுள் அவனுக்காக இரண்டாவது பெண்ணைப் படைத்தார். அவள்தான் ஏவாள். இப் போது ஏவாளை அவர் ஆதாமின் விலா எலும்பிலிருந்து படைத்தார். ஏவாள் ஆதாமுக்கு அடிபணிந்து - கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்தினாள். குழந்தைகளைப் பெற்றெடுத் தாள். இந்தப் புராணக் கதை யின்படி பார்த்தால், அவர்களின் குழந்தை களே இன்றைய இந்தச் சனத்தொகை.

### பிற்கால எழுத்துகளில் லிலித்

ஆணின் கட்டுப்பாட்டுக்கு அடங்க மறுத்த முதல் பெண் லிலித் என்கிற கோணத்தில் லிலித்தைக் கொண்டாடு கின்றனர் பிந்தைய எழுத்தாளர்கள். நான் உன்னைவிடப் புத்திசாலி என்று ஆணுக்கு அறிவித்த முதல் உயிர் லிலித். சமமாகப் படைக்கப்பட்ட நாம் இருவரும் சமமாகவே வாழ்ந்தாக வேண்டும் என்று தர்க்கம் செய்த முதல் பெண் லிலித். ஒரு பெண், பெண் என்ப தற்காகவே இரண்டாவது பாலினமாக இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதையும் ஒரு பெண் துணிச்சல்மிக்க வராகவும் வெளிப்படையானவராகவும் கலகக்காரராகவும் இருக்கமுடியும் என் பதையும் லிலித் உலகுக்குக் காட்டினாள் என்கின்றனர் பல எழுத்தாளர்கள். அத னாலேயே அவள் பேயாக மாற்றப்பட் டாள் என்கின்றனர்.



ஆதாமின் உதவியாளராக இருக்க வேண்டிய லிலித் ஆதாமைவிடவும் புத்திக்கூர்மை கொண்டவராகத் திகழ்ந்தது பலரைச் சங்கடப்படுத்தியது. நீயும் வேண்டாம் உன் ஏதேன் தோட்ட மும் வேண்டாம் என்று ஆதாமை உத றித் தள்ளிய லிலித்தை ஆந்தைகளோடும் ஓநாய்களோடும் குள்ளநரிகளோடும் அவர்கள் தள்ளிவிட்டார்கள். லிலித் பற்றிக் கிரேக்க, லத்தீன் மற்றும் ஹீப்ரு பதிவுகளையும் இதிகாசங்களையும் மறுவாசிப்பு செய்த பெண்ணியவாதிகள் லிலித் மீது படிந்திருந்த அவ தூறுகளை யும் தீய பார்வைகளையும் துடைத்தார் கள். அதற்குப் பிறகு லிலித் இவர்களின் எழுத்து களில் முற்றிலும் புதிய பெண் ணாகியுள்ளாள்.

# 20 லட்சம் சாவுகள்! நிகழாதென்றில்லை

கொவிட் - 19 தீநுண்மி (வைரஸ்) பெருந்தொற்றால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தைக் கடந்துவிட்டது. இந்த நோயைக் கட்டுப்படுத்தவதற்கான தடுப்பூசிகள் கண்டு பிடிக்கப்படுவதற்கிடையில் இன்னுமொரு 10 லட்சம் பேரின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டு விடும் என்று அஞ்சுகின்றார்கள் வல்லுநர்கள்.



உலகம் முழுவதும் 35 லட்சத்துக்கும் அதிகமான வர்கள் இந்தப் பெருந் தொற் றுக்குள்ளாகியுள்ளனர். அவர் களில் 25 லட்சத்துக்கும் அதிக மானவர்கள் ஏற்கனவே குண மடைந்துள்ளனர். அதாவது தொடர்ந்து சிகிச்சையில் இருப்பவர்களை விட்டு விட்டுப் பார்த்தால் பாதிக்கப் பட்ட வர்களில் 96 சதவீதம் பேர் குணமாகிவிட 4 சதவீதம் பேர் மட்டுமே உயிரிழந்திருக் கிறார்கள்.

உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் இதன் பாதிப்பு இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கையும் மிகப் பெரிதாகவே இருக்கின்றது. 7 லட்சத்துக்கும் அதிக மானவர்கள் இந்தப் பெருந் தொற்றின் மிதமான பாதிப்புக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். 65 முதல் 70 ஆயிரம் பேரின் நிலைமை அச்சத்துக் குரியதாக இருக்கின் றது.

இந்தத் தொற்று சீனாவின் வுகான் நகரில் முதன் முதலில் கண்டறியப்பட்டு அதன் மூல மான முதல் இறப்பு பதிவு செய்யப்பட்டதில்




இருந்து 9 மாத காலத்திற்குள் 10 லட்சம் உயிர் களைக் காவு கொண்டிருக்கின்றது.

சீனாவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட் டாலும் அடுத்துப் பரவிய ஐரோப்பாவில்தான் இதன் தாக்கம் கடுமையானதாக இருக்கின்றது. முதல் அலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளான பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் ஆகியவற்றில் அடுத்த அலையைத் தடுக்க இப்போது அதிகாரிகள் போராடிக்கொண்டிருக் கின்றார்கள். அங்கெல் லாம் மீண்டும் இறுக்க மான கட்டுப்பாடுகள் நடைமுறைக்குத் திரும்பியிருக்கின்றன.

கட்டுப்படுத்த முடி யாது பெருகிவரும் இந்தத் தொற்று மேற்கு நாடுகளில் தொடங்கி யுள்ள குளிர்கால நிலை யில் மீண்டும் பெரு மெடுப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிற அச்சம் நிலவுகின்றது.

அமெரிக்காவில் இதுவரையில் 2 லட்சத்துக் கும் அதிகமானவர்கள் இந்தத் தொற்றால் உயிரிழந்திருக்கிறார்கள். 70 லட்சம் பேர் பாதிக் கப்பட்டிருக்கின்றார்கள். அமெரிக்காவுக்கு அடுத்துக் கிட்டத்தட்ட 60 லட்சம் பேர் இந்தி யாவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகவும் இருக்க லாம் என்றும் சொல்லப்படுகின்றது.

தடுப்பூசி ஒன்றுதான் இந்தப் பெருந்தொற்றி லிருந்து மக்களைக் காப்பாற்றி உலகம் முழு வதும் இயல்பு நிலையைத் திருப்பவல்லது என்று கூறப்படுகின்றது. இதுவரையில் 35 தடுப் பூசிகள் மனிதர்களில் சோதனை செய்யப்பட்டுள்ளன. எனினும் அவற்றில் எது, எப்போது பொதுப் பாவனைக்கு அனுமதிக்கப்படும் என்பது இன்னும் உறுதியாகவில்லை.

மக்கள் கொரோனாவுக்கு முந்திய வாழ்க்கைக்கு மீள்வதற்கு 2022 வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கிறார் உலக சுகாதார அமைப்பின் தலைமை அறிவியல் அலுவலர் மருத்து வர் சௌமியா சுவாமிநாதன்.

அதேநேரம் இந்தப் பெருந் தொற்றால் உயி ரிழப்பவர்களின் எண்ணிக்கையோ மிக வேக மாக அதிகரித்து வருகின்றது. ஆனி (ஜூன்) மாத இறுதி வரையில் 5 லட்சமாக இருந்த உயிரிழப்பு எண் ணிக்கை அடுத்த மூன்று மாதங்களில் இரட்டிப்பாகி 10 லட்சத்தை எட்டியி ருக்கின்றது.

இந்தப் போக்கில் சென்றால் 20 லட்சம் பேர் உயிரிழக்க மாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது என்கிறார் உலக சுகாதார அமைப்பின் அவசரகால நிகழ்ச்சித் திட்ட தலை வர் மருத்துவர் மைக்ரேயன்.



# வெடுக்குநாறி மலை: ஆன்மிக வளநிலையம்

ஜொரா

சுயநிர்ணய உரிமை, கல்வி உரிமை, பொருளாதார உரிமை எனத் தமிழர்கள் கோரிய அனைத்து அரசியல் உரிமைகள் சார்ந்த விடயங்களும் இல்லாமலாக்கப்பட்டுவிட்டன. தற்போது நினைவேந்தலுக்கான உரிமை, வழிபாட்டுக்கான உரிமை, உணவு உரிமை என ஓர் இனத்தின் ஆன்மக்கூற்றைத் தீர்மானிக்கின்ற உரிமை சார்ந்த விடயங்களுக்கும் வேட்டுவைக்கப்படுகின்றது. முப்படையினர், காவல்துறையினர், புலனாய்வாளர்கள், அரச திணைக்களத்தினர் இதில் முன்னின்று உழைக்கின்றனர். அந்த வகையில் கடந்த வாரம் வரைக்கும் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டு வந்த இடமே வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் நெடுங்கேணி என்கிற சிறுநகருக்குள் வருகின்ற ஒலுமடு, பாலமோட்டை கிராமங்களுக்கு அரண்செய்யும் வனத்தின் நடுவிலேயே அமைந்திருக்கிறது வெடுக்குநாறி மலை. வெடுக்குநாறி மரங்கள் (அதன் பூக்களின் வாசத்தைக் குறித்து அந்தப் பெயர்) அதிகமாக இந்த மலைப் பகுதியில் காணப்படுவதால் இப்பெயரைப் பெற்றதாக கிராமவாசிகள் குறிப்பிடுகின்றனர். இப்பெயர் இப்போது உருவானதல்ல என்பதற்கு 18ஆம் நூற்றாண்டில் வெளிவந்த ஆங்கிலேயே வரலாற்று நூலொன்றிலும் ஆதாரம் உண்டு. இரண்டு மலைகளிலும் மூன்று குகைகளும், நீர்த்தடாகமும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதனோடு தொடர்புபட்ட வகையில் ஆதித் தமிழியில் (தமிழ் பிராமியில்) எழுதப்பட்ட நீள்வரிசையுடனான கல்வெட்டும் இங்கு காணப்படுகின்றது.

இத்தகையை தொல்லியல் எச்சங்கள் காரணமாகவே தொல்லியல் திணைக்களம் அந்தப் பகுதியில் அமைந்துள்ள சிவ அலயத்தை மக்கள் வழிபட தடைவிதித்து வருகிறது. அங்கு பௌத்த எச்சங்கள் உண்டென பௌத்த பிக்குகள் சிங்கள ஊடகங்களில் கட்டுரைகள் எழுதி வருகின்றனர். அந்த இடத்திற்கு வந்த சிங்கள அரசியல்வாதிகளும் அதனையே சொல்லி வருகின்றனர். ஆனால் அப்பகுதியில் மிக நீண்டகாலமாகவே சிவ, ஐயனார் வழிபாடுகள் இடம்பெற்றதாகவும், அதனைத் தொடர்ந்தும் செய்ய தொல்லியல் திணைக்களத்தினரும், காவல்துறையினரும் தடைவிதித்து வருகின்றனர் எனவும் தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒவ்வொரு முறை திருவிழாவிற்கும் ஏதாவதொரு தடையை நீதிமன்றம் ஊடாக எடுத்து வருகின்றனர் எனவும், இம்முறையும் அவ்வாறு தடைகோரி வவுனியா நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு மக்கள் வழிபட இடமளிக்க இடையூறு செய்யக்கூடாது என அமைந்தமையால் பெரியளவு திருவிழாவாக செய்யமுடிந்ததாகவும் ஆலயத்தினர் தெரிவித்தனர். ஆனால் என்றுமில்லாதளவிற்கு படையினர், காவல்துறையினரின் அட்டகாசங்கள் இருந்தன எனவும், கண்காணிப் பிற்கு மத்தியிலேயே மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டார்கள் எனவும், இனிவரும் திரு விழாக்கள் இங்கு நடக்குமோ என்ற அச்சம் நிலவுவதாகவும் மேலும் தெரிவித்தனர்.





**திருவிழாவிற்கும் ஏதாவதொரு தடையை நீதிமன்றம் ஊடாக எடுத்து வருகின்றனர் எனவும், இம் முறையும் அவ்வாறு தடை கோரி வவுனியா நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு மக்கள் வழிபட இடமளிக்க இடையூறு செய்யக்கூடாது என அமைந்த மையால் பெரியளவு திருவிழா வாக செய்யமுடிந்ததாகவும் ஆலயத்தினர் தெரிவித்தனர்.**

மிகவேகமாக அபகரிக்கப்பட்டுவரும் வவுனியா வடக்கின் எல்லைக் கிராம மக்களது வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டு வருதற்கு அண்மைய உதாரணம்தான் இது. எல்லா பக்கங்களிலும் திட்டமிட்ட குடியேற்றங்களால் நெருக்கப்பட்டுக்கொண்டிருக்கும் குறித்த எல்லைப் பகுதியின் தமிழர் சார்பான தொன்ம எச்சங்கள் இருக்கின்ற இடங்களையும் கபளீ கரம் செய்து பௌத்த மயப்படுத்தும் முயற்சி தான் கடந்த சில வருடங்களாகவே அங்கு நடைபெற்று வருகின்றது.



உண்மையில் இந்து மக்களுக்குரிய தியான இடமாக - பக்தி மேலோங்கும் ஆன்மிக வளநிலையமாக மாற்றுவதற்குரிய சகல பண்புகளையும் வெடுக்குநாறி மலை கொண்டிருக்கிறது. வடக்கு பகுதியில் காணப்படும் ஏனைய அனைத்து ஆலயங்களும் ஆகம முறைப்படியான வழிபாட்டு மரபுக்குள் நிற்க வெடுக்குநாறி மலை மட்டும் சைவ மரபுப்படியான பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஆன்மீக மையமாக இருக்கின்றது.

காடும் வனமும் உறையும் சூழலில் அமைந்திருக்கும் இந்த ஆலயத்தில் பக்தி வாசம் இயற்கையானதாகக் கிடைக்கின்றது. எனவே இவ்வாலயச் சூழலை இந்து மக்களது ஆன்மீகப் பண்பாட்டை வளப்படுத்தும் தியான வளநிலையமாக மாற்றுவதற்கு துறைசார்ந்தவர்கள் முயற்சிக்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அனுமதியுடன் இங்கு ஒரு ஆன்மீக வள நிலையம் அமைக்கப்படுமாயின் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும். தமிழர்களை விட்டுப் பிரிந்து காணப்படும் எல்லைக் கிராமங்களுக்கும் நகரங்களுக்குமான தொடர்பு மீள இணைக்கப்படும். இதற்குப் பின்னால் குறித்த எல்லைக் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சியிலும் மாற்றம் ஏற்படும். எனவே வடக்கு, கிழக்கு பகுதியை இந்து பூமியாக மாற்றப் போராடும் அமைப்புகள் இந்த விடயம் குறித்தும் கவனமெடுத்தல் வேண்டும்.

# ஒண்டாய் வந்தாத்தான் புள்ளடி எண்டு சொல்லுவமோ?

கதிரேசன் காத்தவராயன்

கடைக்கொருக்காப் போவமெண்டு வெளிக்கிட என்ரை பேரன், ''எங்கை தாத்தா போப்போறியள் இண்டைகக் குக் கர்த்தாளல்லே?'' எண்டான். சரிதான்ரா போடா...! எண்டபடி வெளியாலை வந்து றோட்டிலை ஏறப் பாருங்கோ பயம் பிடிச்சிட்டுது. ஒரு குருவி, காக்கா ஒண்டுமில்லை.. வழமையா அப்பிடியும் இப்பிடியுமா கால்க் கதவு அரைக் கதவு வியாபாரங்களும் இல்லை. அப்பிடியே அதாலை ஒரு சுத்துச் சுத்துவமெண்டு போனன். சீறிப்பாயிற மோட்டச்சயிக்கிளுகளும் இல்லை. றோட்டை அடைச்சுப் பிடிச்சபடி போற வாற பள்ளிக்குட, ரியூசன் பொடி - பெட்டையள் இல்லை என்னவோர் அமைதி?

கொரோனாக் காலத்திலைகூட கெல்மெற் பாவிக்காத ஆக்கள் திரிஞ்சவைதானே? அதுகூட இப்ப இல்லை. ஆனால் பாவங்கள் அரசாங்க வேலையாக்கள்தான். போறது தன்மானப் பிரச்சினை... போகாமல் விடுறது சட்டப் பிரச்சனையாயல்லே ஆகிப்போகிடும்? அங்கயொண்டு இஞ்சையொண்டாய்ப் போச்சினம்.. வந்தினம்.

அதிலை சந்தை முடக்கிலை தம்பிராசர் தலைமையிலை நிண்ட மேசையில்லாத மாநாடு நடந்துகொண்டிருந்துது. நிண்ட ஆறோடை நானும் சேந்து கொண்டன்.

சபாபதியர் என்னைக் கண்டவுடனை, ''என்ன கதிரேசண்ணை வழக்கத்தைவிடக் கர்த்தால் வலுஇறுக்கம்போலை?'' எண்டார். ''ஓமோம்...'' எண்டதோடை நிப்பாட்டினன். அதுக்கிடையிலை சங்கரியர் ''எல்லாக் கட்சிக்காறரும் சேந்தல்லே செய்யினம்?'' எண்டதுதான் தாமதம் பாத்துக்கொண்டிருந்த மாதிரி தம்பிராசர், ''கண்டறியாத சேர்க்கை சேந்திருக்கினம்.. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்தானே முடிஞ்சிருக்கு... மாகாண சபையும் முடிஞ்சிருந்தா உது நடந்திருக்குமோ? ஆராவது சொல்லுங்கோ பாப்பம்?'' எண்டார்.

''அதைத்தான் நானும் கேக்கிறன்... எப்பவாவது சேந்து நிண்டவையோ? மாவீரர் சம்மந்தமான நிகழ்ச்சியளையே ஆளுக்கொரு நேரம் ஆளுக்கொரு இடமெண்டல்லே செய்துகொண்டு திரிஞ்சவை... உந்தக் காணாமலாக்கப்பட்ட சொந்தங்களின்ர போராட்டங்களுக்குப் போக ஆயிரம் நாளுக்கும் கூடின காலம் நேரமில்லாமல் என்னத்தைப் பண்ணினவை? கைதியள் தினமண்டெண்டாலும் அவங்களைப்பற்றி ஒரு மூச்சு... விட்டிருப்பினமே?'' இப்பதான் மூச்செடுக்க இடைவெளி விட்டார் சபாபதியர்.

ஒருத்தரும் ஒண்டுங் கதைக்கேல்லை. தலையை மட்டும் ஆட்டி ஆமோதிச்சினம்.

''இதுகளுக்கும் தங்களுக்கும் சம்மந்தமேயில்லை எண்ட மாதிரியுமல்லே ஒராளும் தொண்டரடிப் பொடியளும் இருந்தவை கவனிச்சிருப்பியள்தானே?'' எண்டார் சம்பர்.

''சேருறது நல்லதுதான்... ஆனால் உண்மையான இனப் பற்றோடை முழு மனசோடை சேந்திருந்தா அதுதான் சேர்க்கை... வரப்போற மாகாண சபைத் தேர்தலிலை காட்டட்டும் பாப்பம் உந்த ஒற்றுமையை! அப்பதான் நான் உந்தச் சேர்க்கையை நம்புவன்'' எண்டார் தம்பிராசர். ''ஆனாலொண்டு, சனம் உவையின்ரை கதைக்காய்த்தான் கர்த்தால் செய்தது



எண்டதை நான் ஏற்கமாட்டன்'' எண்டார் சீவரத்தினம்.

''அதோடை சனம் தெளிவாத்தான் இருக்கு, உவையை விடக் கண்டியளோ...?'' எண்டன் நான்.


''மக்கள் எழுச்சியைக் குழப்புகிறவை உவைதான் எண்டதுக்குக் கன உதாரணங்களைச் சொல்லுவன்... ஏன்? அப்ப எழுக தமிழ் எண்டது நடந்ததல்லே அண்டைக்குத் தேசியத்தின்ர குரல் எண்டு மூச்சுக்கு மூச்சு சத்தம்போடுகிற பேப்பர் இண்டைக்குத்தான் கடைசிச் சனி விரதமிருந்து எள்ளெண்ணை எரியுங்கோ எண்டு முன்பக்கத்திலை செய்தியல்லே போட்டிருந்தது? ஞாபகமிருக்கோ?'' எண்டார் வல்லியர். ''ஓமோம்...நல்லா ஞாபகமிருக்கு... பேப்பர்காரனுக்குச் சனம் பாடம் படிப்பிச்சிருக்கல்லோ?'' எண்டார் தம்பிராசர்.

''செத்தும் கொடுத்தான் சீதக்காதி எண்ட மாதிரித் திலீபன்ரை தியாகம் இப்பதான் பயனைக் குடுக்கத் தொடங்கியிருக்குது. இப்பிடியே போனால் நல்ல மாற்றமொண்டு கட்டாயம் வரும். நம்புவம். நம்பிக்கைதானே வாழ்க்கை. என்ன நான் சொல்லுறது சரிதானே?'' கந்தசாமியர் நம்பிக்கை அது.

''சரி.. கூடுறதும் பிறகு பிரிஞ்சு நிண்டு ஆளையாள் தூத்துறதும் எதை நம்பி நடக்குது? எங்கடை வோட்டை நம்பியல்லே? அது விளங்குதல்லே? பிழை எங்களிலைதான். சேந்து வாங்கோ புள்ளடி போடுறம் எண்டு சொல்லுற தெம்பு எங்களுக்கு எப்ப வருகுதோ அண்டைக்குத்தான் விடிவு.. அப்ப வரட்டே'' எண்டபடி நான் வீட்டை வந்திட்டன். என்ன நான் சொன்னது சரிதானே? ■







# ஈ வளர்க்கின்ற பெண் தொழிலதிபர்!

■ க.மிருணாளினி

குலையிலிருந்து தனியாகப் பிடுங்கப்பட்ட வாழைப்பழத்தின் காம்பு அகற்றப்பட்டால், அந்த வாழைப் பழத்தின் தசைப் பகுதி வெளியே தெரியும். அந்தச் சிறுபகுதியில் அத்தனை ஈக்கள் மொய்த்தபடியிருக்கும். நன்கு கனிந்த வாழைப்பழமாக இருந்தாலும் ஈக்கள் அதை வட்டமடிக்கத் தொடங்கிவிடும். பழங்கள் கனிந்து - கசியத் தொடங்கிவிடுகிறபோது ஈக்கள் வாழைக் குலையையே சுற்றி வட்டமடித்தபடியே இருக்கும். வாழைப்பழம் மாத்திரமல்ல எந்தப் பழமாக இருந்தாலும் அவை நன்கு கனிந்து கசியத் தொடங்கினால் அதிலிருந்து எழுகின்ற வாசனையின்பால் ஈக்கள் ஈர்க்கப்பட்டு அதைச் சுற்றி வட்டமிடுகின்றன.



ஈக்கள் மெய்த்துள்ள வாழைப்பழத்தில் ஒன்றைப் பார்த்தால்கூட நமக்கு அருவருப்புத் தொற்றிவிடுகிறது. ஆனால், இதையே பெரிய தொரு தொழில் முயற்சிக்குரிய வழிமுறைகளில் ஒன்றாக மாற்றியிருக்கிறார் ஒரு பெண். அழுகிய மற்றும் கனிந்த பழங்களை நாடுகின்ற ஈக்களின் புத்தியை அறிந்த அவர் அந்த நாட்டத்துக்கான காரணத்தைக் கவனித்து, அதை மூலதனமாக வைத்துப் புதியதொரு தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

சூழலுக்கும், இயற்கைக்கும் பாதகமற்ற சுழற்சி முறையிலான உணவுற்பத்தி மற்றும் உணவூட்டலாக அதை அவர் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார். அழகுத் துறை மற்றும் அலங்கரிப்புத் துறைகள் எனப் பெண்களில் பெரும்பாலானோர் நாட்டம் கொள்கின்றபோது இந்த வித்தியாசமான தொழில் முயற்சியில் குதித்து அதில் வெற்றி பெற்றதோடு உச்ச சம்பாத்தியத்தையும் பெறுகின்றார் அந்தப் பெண்மணி. இதனால் அவர் கவனம் பெற்றார்.

## புதுவிதத் தொழில்


அழுகிய வாழைப்பழங்கள் உட்பட மனிதர்களால் கழித்துவிடப்பட்ட, கைவிடப்பட்ட, பழுதடைந்த, வீசப்பட்ட அனைத்துப் பழக்கழிவுகளையும் ஒன்று திரட்டி - அதற்கெனத் தனி யாகத் தயாரிக்கப்பட்ட தொட்டி ஒன்றுக்குள் அவற்றைக் கொட்டி "கறுப்பு சிப்பாய் ஈ" எனப்படுகின்ற ஈ இனத்தைச் சேர்ந்த வளரிளம் குடம்பிக்கு அதை உணவாக்குகிறார் கென்யாவைச் சேர்ந்த பண்ணை வளர்ப்பாளரான 25 வயதுடைய ஹூய்பெர்ஸ் என்கிற பெண்.

அழுகிய பழங்களைத் தின்று கொழுக்கின்ற அந்தக் குடம்பிகள் வளர்ந்து நிறையுடலியாகும் வரை இதையே செய்து அவற்றை வளர்த்தெடுகின்ற இவர், பின்னர் அந்த நிறையுடலிகளை கால்நடைகளுக்கான தீவனமாக மாற்றுகிறார். இவ்வாறு கழிவுப் பழங்களை ஊட்டி வளர்க்கப்படுகின்ற குடம்பிகள் வளர்ந்து கால்நடைத் தீவணமாக்கப்படுவதில் இருக்கின்ற செயற்பாட்டு முறைமையில் இயற்கை - சூழலுக்கு எவ்வித பாதிப்போ, அந்தக் கால்நடைத் தீவனத்தால் கால்நடைகளுக்குப் பாதகங்களோ இல்லை ஆகையால் இது பெருவர வேற்புப் பெறும் தொழிலாகிப் பெரும் சம்பாத்தியத்தையும் பெறுகிறார் அந்தப் பெண்.

## அதிக மதிப்புள்ள விலங்குப் புரதம் இது

கென்யாவின் தலைநகர் நைரோபியில் இருந்து 28 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விமுரு என்கிற இடத்தில் உள்ளது ஹூய்பெர்ஸ்ஸின் இந்தக் குடம்பி வளர்ப்புப் பண்ணை. தனது தொழில் குறித்துக் ஹூய்பெர்ஸ் கூறுகையில், “நாங்கள் நைரோபியில் உள்ள அனைத்துப் பச்சைக் கழிவுகளையும் எடுத்துக்கொள்கிறோம், அதை அதிக மதிப்புள்ள விலங்குப் புரதமாக மாற்றுகிறோம். அந்தக் கழிவுளை விரும்புகின்ற - உணவாக எடுத்துக்கொள்கின்ற ஈக்களைச் சிறுபராயத்திலிருந்தே (லாவாக்கள் - குடம்பிகள்) வளர்க்கிறோம். இந்தக் கழிவுகளை உண்டு அவை வளர 10 நாள்கள் எடுக்கின்றன. இதனால் லாவாக்களுக்கு 10 நாள்கள் வரை நாம் உணவளிக்க வேண்டும். நாளொன்றுக்கு 20 முதல் 30 தொன் வரையிலான பழக் கழிவுகளை உணவாக்கும் அளவிலான குடம்பிகளை வளர்க்கிறோம். 2.5 தொன் லாவாக்களை உற்பத்தி செய்கிறோம். பின்னர் அவை காய்ந்து விலங்குகளின் தீவனமாக மாறும். மீதமுள்ள அனைத்துக் கழிவுகளும் உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் சில பண்ணையில் உள்ளன, மீதமுள்ளவை அயலில் உள்ள பண்ணைகளில் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் நிலையான உணவு குறித்த கேள்விக்கு இது சிறந்த தீர்வு" என்றுள்ளார். கோழிகள் போன்ற பண்ணை விலங்குகளுக்கு இந்தப் புரத உணவு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

அதிக முதலீட்டைக் கொண்டிராத, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பளிக்காத இந்தக் குடம்பி வளர்ப்பு நிறுவனம் இன்று மிகப்பெரிதாகியிருக்கிறது. கழிவுகளில் இருந்து பெறப்படுகின்ற உற்பத்தி எங்கள் நாட்டுக் கால்நடைகளுக்கு உணவளிக்கிறது என்று நைரோபியைத் தளமாகக் கொண்ட பன்னாட்டுப் பூச்சி உடலியல் மற்றும் சூழலியல் மையத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி கிரிஸான்டஸ் எம்.பி. டங்கா கூறுகிறார். உணவுக் கழிவையும் வீணடிக்காமல், அந்தக் கழிவால் சுற்றுச் சூழலை மாசுபடுத்தாமல், நல்லதொரு பயன்மிக்க முறையில் அந்தக் கழிவுகளைக் கையாண்டு உழைக்கின்ற அந்தப் பெண் நிச்சயம் பாராட்டத்தக்கவரல்லவா?



**அகில்**

# பாழடைந்த நிலையில் தலைவர் அஷ்ரப்பின் வீடு! பாராமுகம்தான் ஏனோ?

முஸ்லிம்களின் தேசியத் தலைவர், இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியல் முகவரியைப் பெற்றுக் கொடுத்த பெருந்தலைவர் என்றெல்லாம் போற்றப்படும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிறுவுனர் எம்.எச்.எம்.அஷ்ரப் அகாலச் சாவடைந்து 20 ஆண்டுகளாகிவிட்டன. புரட்டாதி (செப்டெம்பர்) 16ஆம் நாள் அவரது நினைவுநாள். இந்த நாளை "தலைவர் தினம்" என்கிற மகுடத்திலும் "ஒரு மரம் தோப்பானது" எனும் தலைப்பிலும் இம்முறை நினைவேந்தினார்கள்.

புரட்டாதி 29ஆம் நாள் நடந்த கல்முனை மாநகர சபையின் 30ஆவது அமர்விலும் அஷ்ரப் நினைவுகூரப்பட்டார். சபை உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எம்.றொஷான் அக்தர் கொண்டு வந்த தனிநபர் பிரேரணை மீது கட்சிசார்பற்று அனைவரும் உரையாற்றினர். அஷ்ரப் மறைந்து 20 வருடங்கள் கடந்தும் "ஆளுமைமிக்க" அவரது தலைமைத்துவ வெற்றிடம் நிரப்பப்படவில்லை எனப் பல உறுப்பினர்கள் அங்கு சுட்டிக்காட்டினர்.

தலைவர் அஷ்ரப் மறைந்த இத்தனை ஆண்டு காலத்தில் அவரது கனவுகளில் எதையாவது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் நிறைவேற்றியுள்ளனரா? என்கிற சூடான கேள்வியை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சி.எம்.முபீத் எழுப்பி பரபரப்பை ஏற்படுத்தினார்.




**மறைந்த பின்**

தலைவர் அஷ்ரப் மறைந்த பின்னர் முஸ்லிம் காங்கிரசும், ஏன் மு.காவிலிருந்து பிரிந்து சென்று உருவாகிய ஏனைய "காங்கிரஸ்" கட்சிகளும் சந்தித்த தேர்தல்களில் அஷ்ரப்பின் நாமத்தையும் படங்களையும் பயன்படுத்தியே வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறெல்லாம் தமது அரசியல் வாழ்க்கைக்கு வளம் சேர்த்த தலைவர் அஷ்ரப்பிற்கு மு.காவினரும் சரி ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளும் சரி எந்தளவிற்கு நன்றிக்கடன் செலுத்தியிருக்கிறார்கள் என்கிற கேள்வியைச் செம்மண்ணில் ஏற்கனவே எழுப்பியிருக்கிறேன்.

**அஷ்ரப்பின் வீடு**

தலைவர் அஷ்ரப்பால் முஸ்லிம் அரசியல்வாதிகள் வாழ்ந்தாலும் அவரது பெயரை மட்டுமே அவர்கள் தமது அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதற்கு, அஷ்ரப் தனது அந்திம கால வாழ்வு மனையாகக் கொண்டிருந்த ஒலுவில் வீடு திகழ்கின்றது.



மு.காவை அஷ்ரப் தொடங்கியது முதல் அவரையும் கட்சியையும் முழுமையாக ஆதரித்த, உறுதிப்பாடான கட்சிப் போராளிகளைக் கொண்ட ஒலுவில் கிராமத்தையும் மக்களையும் தலைவர் அஷ்ரப் மிகவும் நேசித்தார். இதனாலேயே அந்தக் கிராமத்தில் தனக்கான சொந்த வீடு ஒன்றையும் கட்டினார். இதற்கான காணியை ஒலுவில் பிரமுகரும் சமூக சேவையாளரும் மு.காவின் முக்கிய புள்ளியுமான நூகுலெவ்வை (சேமன்) அன்பளிப்புச் செய்திருந்தார் என்றொரு தகவலுமுண்டு.

1995ஆம் ஆண்டளவில் அஷ்ரப்பால் அமைக்கப்பட்டு அவரது வருகையின்போதெல்லாம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்த இந்த வீடு இன்று பாராமுகமாகக் கிடக்கிறது. எந்தப் பராமரிப்புமன்றிக் கைவிடப்பட்டுப் பற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றது. தலைவர் வாழ்ந்த அந்த வீட்டின் இன்றைய நிலை மு.காவின் உண்மையான போராளிகளினதும் ஒலுவில் மக்களினதும் கண்களில் குருதியைக் கசிய வைத்துள்ளது.

அந்த வீடு அஷ்ரப்பின் சொந்தப் பயன்பாட்டில் இருந்தது, ஆனால் அது குறித்து அவரது குடும்பத்தினரும்கூட ஏன் அக்கறை எடுக்கவில்லை என்கிற கேள்வி எழுவது நியாயமானதே! ஆனால், மு.கா. மீது தாம் கொண்டிருந்த அதீத நேசம் காரணமாகத் தமது சொத்துக்கள் சிலவற்றை கட்சியின் நம்பிக்கை நிதியத்தின் பெயரிலேயே உயில் எழுதி வைத்திருக்கிறாராம் தலைவர். ஒலுவில் வீடும் அவ்வாறே கட்சியின் நம்பிக்கை நிதியத்தின் கீழ்தான் இருந்து வருகின்றது என்கின்றன அஷ்ரப்பின் குடும்ப வட்டாரங்கள்.

கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரே அதன் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களாகப் பதவி வழியாக நியமனம் பெறுகின்றனர். அப்படித்தான் அதனைத் தலைவர் அஷ்ரப் வரையறுத்துள்ளாராம். இந்த நிலையில்தான் அவரது வீடு பாராமுகமாகக் கைவிடப்பட்டுக் காடு மண்டிக் கிடக்கின்றது. 'பேய் வாழும் வீடோ' என்று எண்ணுமளவிற்குக் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கிறது.

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சட்டபீடம் ஒன்றைத் தொடக்கித் தனது இறுதிக் காலத்தில் அங்கு சட்ட விரிவுரையாளராகச் செல்ல வேண்டும் என்றும் அதுவும் ஒலுவிலில் தான் அமைத்த வீட்டிலிருந்தே செல்ல வேண்டும் என்றும் அஷ்ரப் கனவுகளைக் கொண்டிருந்தார் என்கிற கதைகளைக் கேட்கும்போது மெய்சிலிர்க்கிறது.

ஆனால் விதி? தலைவர் அஷ்ரப்பின் மறைவிற்குப் பின்னர் மு.கா. தலைவர்கள் எத்தனை தடவைகள் ஒலுவில் பக்கம் வந்திருப்பார்கள்? தலைவரின் ஒலுவில் வீடு கிடக்கும் அவலத்தை அவர்கள் திரும்பித்தானும் பார்க்கவில்லையா? இன்று மக்கள் இந்தக் கேள்விகளை எழுப்புகின்றார்கள். முஸ்லிம் அரசியல்வாதிகள் தம்மை வாழவைத்தவனுக்குச் செய்யும் கைமாறு இதுதானா என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தலைவர் அஷ்ரப்பின் மறைவிற்குப் பின்னர் மு.கா. தலைவர்கள் எத்தனை தடவைகள் ஒலுவில் பக்கம் வந்திருப்பார்கள்? தலைவரின் ஒலுவின் வீடு கிடக்கும் அவலத்தை அவர்கள் திரும்பித்தானும் பார்க்கவில்லையா? இன்று மக்கள் இந்தக் கேள்விகளை எழுப்புகின்றார்கள். முஸ்லிம் அரசியல்வாதிகள் தம்மை வாழவைத்தவனுக்குச் செய்யும் கைமாறு இதுதானா என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

**பேரியல் கவலை**

மறைந்த தலைவரின் பாரியாரான பேரியல் அஷ்ரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் இந்த வீட்டின் நிலை குறித்துக் கவலை தெரிவித்திருந்தார். "தலைவரின் இந்த வீடு, கட்சியின் நம்பிக்கை நிதியத்தின் கீழ் உள்ளதாலும் இந்த நிதியத்தின் உறுப்பினர்களாகக் கட்சியைச் சேர்ந்தவர்களே இருக்கவேண்டும் என்று அவர் வரையறுத்துவிட்டதாலும் என்னால் தலையிட முடியவில்லை. என்னைத்தான் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றிவிட்டனரே" என்று அந்த நேர்காணலில் பேரியல் தெரிவித்திருந்தார்.

மறைந்த அந்தத் தலைவரின் விருப்புக்குரிய இல்லம் இப்படிப் பாழடைந்து பரிதாபத்திற்குரிய தாகத்தான் திகழவேண்டுமா என்பதை மு.கா. தலைவர்கள் திரும்பிப் பார்க்கவேண்டும். கட்சியின் இதயமென வர்ணிக்கப்படும் அம்பாறை மாவட்டத்தில் கட்சிக்கென தனியான நிரந்தரமான மாவட்டக் காரியாலயம் ஒன்று இல்லாத நிலையில் ஒலுவில் வீட்டைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.




இந்த வீட்டை முழுமையாக மறுசீரமைப்புச் செய்து, கட்சியின் மாவட்டத் தலைமைக் காரியாலயமாக இயங்க வைப்பதன் மூலம், கட்சியின் கட்டமைப்புக்களை மறுசீரமைப்புச் செய்யவும் கட்சி நடவடிக்கைகளைக் காத்திரமாக முன்னெடுக்கவும் முடியும்.

தலைவரின் வீடு பாழடைந்து போகாமல் அவரது பெயரில் மிளிரவும் முடியும்.

மலையக மக்களின் தலைவரான சௌமிய மூர்த்தி தொண்டமானின் பெயரில் அவரது வீடு "சௌமியமூர்த்தி பவன்" என்று மிளிர்வது போன்று இந்த வீட்டையும் இயங்கச் செய்யலாமல்லவா? முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் தலைமைப்பீடமும் இந்த விடயத்தில் இனியும் அக்கறையற்று இருக்காமல் உடனடியாக ஒலுவில் நோக்கிப் புறப்படவேண்டும். ■

# எங்கே போகிறோம்? 13

எங்களை அழிக்க யாரும் புதிதாக வெளியில் இருந்து வரவேண்டிய அவசியம் இல்லை. அந்நியர் மீது அரசியல் பழிகள் சொல்வதில் அர்த்தமில்லை. எமது இளைஞர்கள் சிலரின் போக்கு அவ்வாறான பாதையில் பயணிக்கிறது. மோட்டார் சைக்கிள் மற்றும் விபத்துச் சாவுகள் போர்க் காலத்தை மிஞ்சி நிற்கின்றன.

மதுபானம், போதைப் பாவனை என்று பலரும் தமது வாழ்க்கையை இலக்கு இல்லாத வழியில் முன்னெடுக்கத் தலைப்படுகிறார்கள். தமது நண்பர்கள், உறவினர்கள், அப்பாவிகளையும் இந்த வழிக்கு இழுக்கிறார்கள். தவிர இத்தகைய மாபியாக்களுடன் வலுவான வியாபாரத் தொடர்புகளையும் பேணத் தலைப்படுகிறார்கள். தமது போக்கிற்குக் குறுக்கே வருபவர்களை வெட்டிச் சாய்க்கவும் துணிகிறார்கள்.

சமூக அக்கறை இல்லாத கட்டுப்பாடுகள் ஏது மற்ற வலுவான ஒரு எதிர்காலச் சந்ததியும் உருவாகத் தவறவில்லை என்பது ஆரோக்கியம் அற்ற விடயமாகிறது. இந்தக் கட்டுப்பாடற்ற தன்மை இவர்கள் குடியேறிய நாடுகளிலும் பரவத் தலைப்படுகிறது. பெற்றோர் ஆசிரியர்களுக்குக் கட்டுப்படும் போக்குப் பலரிடம் பிசகி வருகிறது. பணம் புரளும் பல குறுக்கு வழிகள் கண்முன்னே விரிந்து கிடக்கின்றன. இதனால் கிடைக்கும் வருமானம் அவரவர் வீடுகளிலும் வரவேற்பையே பெறுகிறது. பாடுபட்டு உழைப்பதை விடச் சுலபமாக வாழப் பல வழிகள் திறக்கவே செய்கின்றன.

இன்று சமூகத்தில் பெரியவர்கள் எதையும் கடந்துசெல்லப் பழகிவிட்டார்கள். அச்சம் காரணமாக நியாயத்தைத் தட்டிக் கேட்கும் திராணி பல இடங்களில் மடிந்து விட்டது.

இன்று வாழ்க்கை முறை வெகுவாக மாற்றம் கண்டு வருகிறது. இதனை முன்னேற்றம், நாகரீகம் என்றெல்லாம் கருத முடியுமா? என்கின்ற கேள்வி எழுகிறது.

ஊடகங்களில் அடிக்கடி வெளிவரும் செய்திகள் பகீர் தகவல்களே. திகில் காட்சிகளும் ஊடக மரபு மீறிப் பகிரப்படுவது சாதக, பாதக நிலமைகளைத் தோற்றுவிக்கிறது. விபத்து நடைபெறும் இடங்களில் இக்கட்டானவருக்கு உதவி செய்யச் சிலரே இருப்பினும் பலர் குருதி சொட்டுவதைப் படம் பிடித்துப் பகிரவே துடிக்கிறார்கள். எங்கள் இரக்க சுபாவம், மனிதாபிமானம் எல்லாம் எங்கே போய் விட்டன?

சந்தியில் நிற்கும் காவலர்கள் ஒருவர் என்ன தவறு செய்யப் போகிறார் என்று காத்துத் தவம் கிடப்பதை விடுத்துச் சைகைகளைச் சரிவர விடுத்தால் பல விபத்துகள் தவிர்க்கப்படலாம்.

முன்பு பல வீடுகளில் சைக்கிள்களே கிடையாது. மோட்டார் சைக்கிள்களைப் பார்ப்பதே மிக மிக அரிது. இப்போது கார், மோட்டார் பைக் வாங்குபவர்கள்கூட அவற்றின் தரம் திறன் பற்றி எல்லாம் அதிகம் விசாரிப்பதில்லை. கவர்ச்சி ஒன்றே அவர்களின் இலக்கு. ஆனால், அந்தக் காலம் பழைய சைக்கிள் வாங்குவது என்றால்கூட அவ்வளவு எச்சரிக்கையோடு விசாரிப்பார்கள். இப்போதும் றலி சைக்கிளைத் தேடுபவர்கள் இருக்கிறார்கள். அந்தக் காலம் இருநூறு ரூபாய்க்கு வாங்கிய ஒரு சைக்கிள் எண்பதினாயிரம் வரையிலும் போகிறது.

சைக்கிள் கடைகள் பெயர் போன திருத்துனர்கள் இருந்த காலம் மலையேறி விட்டது. இப்பொழுது பெற்றோர்கள், பிள்ளைகளைப் பெரும்பாலும் தாமே ஏற்றி இறக்குகிறார்கள். பிள்ளைகளுக்குப் பொழுது போக்குக்காகவும் உடல் ஆரோக்கியம் கருதியும்கூடச் சைக்கிள் ஓட்ட அவகாசம் கிடைப்பதில்லை. இதனால் தொலைவது எதிர்கால ஆரோக்கியமான சந்ததியே.

பாடசாலைகள் கல்வி நிலையங்கள் முன்னால் காத்து நிற்கும் ஏற்றி இறக்கும் தனித்தனி வாகனங்கள் அவரவர் விருப்பத்திற்கு வழியை மறித்து நிற்கின்றன. பாலர் வகுப்புக் குழந்தையை ஏற்ற தகப்பன் லொறியில் வந்து நிற்கிறார். பாவம் அவரிடம் வேறு மாற்று வழி அந்த நேரத்தில் இல்லை. பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களில் உள்ள காவலர் கண்காணிப்பு பாடசாலை முடிவடையும் நேரங்களில் கிடையாது. பிரபல தனியார் கல்வி நிலையங்கள் முன்பாகக் கூடும் கூட்டத்தை ஒழுங்குபடுத்த எவரும் இல்லை.

இன்று வாகனப் பெருக்கமும் தொலைபேசிப் பாவனையும் உச்சத்தில் இணைந்து பயணிப்பது உயிர்களின் மதிப்பினை கெடுத்து விடுகிறது. பிள்ளைகள் எது சரி எது பிழை எனத் தெரியாது அவசர உலகத்தில் வளர்க்கப்படுவது எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற ஊக்குவிப்பு கிடைப்பதில்லை. வளரும் துடுக்குத் தனமான குழந்தைப் பருவத்தில் அவர்களைச் சமாளிக்க அவசர உலகில் வேலைக்குப் போகும் பெற்றோர் கையில் எடுக்கும் ஆயுதம் தொலைக்காட்சி, கார்ட்டூண், தொலைபேசி, கேம்ஸ், இணையம் என்றால் அவை இல்லாமல் சாப்பாடே ஊட்ட முடிவதில்லை. இதனால் குழந்தைகள் வன்முறை விடயங்களைச் சர்வ சாதாரணமாக எடுக்கும் மனப்பாங்கு வளருகின்றது.



எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் தொடர்

ஏதோ அன்றைய பொழுதைச் சமாளித்தால் சரி என்கின்ற தூர நோக்கற்ற இன்றைய பெற்றோரின் சிந்தனைகள் எமது பேரன் பேத்திகளிடம் இருந்த தில்லை.

வசதியானவர்களின் குடும்பங்களில் பிள்ளைகள் எண்ணப்படி கேட்பது எல்லாம் கொடுத்து கெடுத்து வளர்க்கிறார்கள். வசதியற்றவர்கள் வறுமை நிலையில் பிள்ளைகளுக்கு இரந்தும் கரந்தும் வாழவும் அனுமதிக்கிறார்கள். இத்தகைய வசதி பேதங்கள் எவ் வழியிலும் பாதகமான எதிர்காலத்தை உருவாக்கவே முயலுகின்றன.

எனவே எங்கே போகிறோம் எப்படிப் போகிறோம் என்ற விடயத்தில் மறுசீரமைப்புக்களை இன்றே ஒவ்வொருவரும் வீட்டில் இருந்து ஆரம்பித்தாக வேண்டும். இன்றேல் இந்த அழகிய உலகத்தின் எதிர்காலம் சூனியமே. ■




# துலங்கியது மர்மம்


■ தீபபாரதி

## யானைகளைக் கொன்றது பக்ரீரியா!



கடந்த வைகாசி, ஆணி மாதங்களில் தெற்கு ஆபிரிக்க நாடான பொஸ்வானாவில் 350க்கு அதிகமான யானைகள் திடீரென உயிரிழந்து கிடந்த செய்தி பிரபலமாகிப் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் உலகம் முழுவதும் ஏற்படுத்தியது. பொஸ்வானாவின் ஒகவாங்கோ டெல்டா பகுதியில் உள்ளூரைச் சேர்ந்த பல்லுயிரினப் பாதுகாப்பு ஆர்வலர்கள் சிலர் அந்தப் பகுதியின் மேல் விமானம் மூலம் பறந்து கண்காணித்த போது யானைகளின் இந்த இறந்த உடல்களைப் பார்த்து, அந்நாட்டு அரசுக்கு தெரிவித்ததை அடுத்தே விவகாரம் வெளி உலகிற்குத் தெரியவந்தது.

மூன்று மணி நேரம் விமானத்தில் பறந்ததில் 169 யானைகளின் இறந்த உடல்களை அவர்கள் கண்டனர். அதன் பின்னர் நடத்தப்பட்ட ஆய்வுகளில்தான் 350க்கும் அதிகமான யானைகள் அங்கு உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. தந்தங்களுக்காக அவை வேட்டையாடப்பட்டிருக்கலாம் என்று பொஸ்வானா அரசு முதலில் சந்தேகப்பட்டது. அதேநேரம் இத்தனை பெரிய எண்ணிக்கையில் யானைகள் இறந்தமைக்கு நோய்ப் பரவலும் காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்துக் கொரோனாத் தொற்று விலங்குகளிடையே பரவி வருவது குறித்தும் பொஸ்வானா அரச தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.





இருப்பினும் இத்தனை யானைகள் எவ்வாறு ஒரே தறுவாயில் இறந்தன என்பது குறித்த ஆராய்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன. சிம்பாப்வேயில் உள்ள சிறப்பு ஆய்வகத்துக்கு இறந்த யானைகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 34 யானைகளின் உடல்கள் கொண்டு செல்லப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

### குருதிக் கசிவே காரணம்

பொஸ்வானாவில் இவ்வளவு யானைகளும் இறந்ததற்குக் காரணம் குருதிக் கசிவு என்றும் அது செப்டிசீமியா எனப்படும் ஒரு வகைப் பக்ரீரியாவால் பரவும் நோய் என்றும் சிம்பாவே ஆய்வு முடிவுகளில் தெரியவந்திருக்கிறது. அதுவும்கூட முழுமையான முடிவாகவில்லை. இதை உறுதி செய்வதற்குரிய மேலதிக சோதனைகளை மேற்கொண்டு வருவதாகச் சிம்பாவேயின் ஆய்வகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் யானைகளின் ஆயுள் மீது அழுத்தம் கொடுக்கக்கூடும், ஏனெனில் நீர் நிலைகள் குறைந்து வெப்பநிலை அதிகரிக்கும் போது நோய் கிருமிகள் பெருகுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என்றும் பொஸ்வானாவில் இறந்த யானைகளைப் பரிசோதனைக்குட்படுத்திய சிம்பாப்வேயின் பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு மேலாண்மை ஆணையகத்தின் இயக்குநர் ஜெனரல் ஃபுல்டன் மங்வான்யா தெரிவிக்கிறார். இந்த நோய் மட்டுமே யானைகளின் உயிர்வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று கூறிவிட முடியாது என்றும் அவர் கூறுகிறார்.

### திடீர் இறப்புகளால் கவலை

பொஸ்வானாவைப் போலதான் சிம்பாப்வேயின் வடமேற்குப் பகுதிகளிலும் யானைகள் ஏராளமாக உள்ளன, இந்த நோய் அங்கும் அநேகமாக உள்ளது. குறிப்பாக வெப்பமான, வறண்ட காலங்களில் யானைகளின் நீர் மற்றும் உணவு வளங்களுக்கான தேடல்களால் பாதிக்கப்படுகின்றன. இறந்த சில யானைகளின் உடல் பரிசோதனைகளில் வீக்கமடைந்த கல்லீரல் மற்றும் பிற உறுப்புகளைக் கண்டடைந்ததாக ஆய்வுத் தரப்புத் தெரிவிக்கிறது.

பொஸ்வானா அதிகாரிகள் ஆரம்பத்தில் யானை இறப்புகளுக்குக் காரணமாக மற்றொரு வகை பாக்ரீரியத்தால் உற்பத்தி செய்யப்படும் நச்சுகளை குற்றஞ்சாட்டினர். ஆனால், இப்போது சிம்பாப்வே ஆராய்ச்சி முடிவுகளின்படி செப்டிசீமியா நோயை ஏற்படுத்தும் என்கிற பக்ரீரியாவே காரணம் என்று சொல் லப்பட்டிருக்கிறது. ஆனால், அது மாத்திரமே இந்த யானைகளின் இறப்புக்குக் காரணமாகாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காரணம் இந்தப் பக்றீறியாக்களைவிட ஆபத்தானவர்களாகப் பொஸ்வானா, சிம்பாவேப் பகுதி வேட்டைக்காரர்கள் கருதப்படுகிறார்கள். ■

> “ யானைகள் இறந்ததற்குக் காரணம் குருதிக் கசிவு என்றும் அது செப்டிசீமியா எனப்படும் ஒரு வகைப் பக்ரீரியாவால் பரவும் நோய் என்றும் சிம்பாவே ஆய்வு முடிவுகளில் தெரியவந்திருக்கிறது. அது வும்கூட முழுமையான முடிவாக வில்லை. இதை உறுதி செய்வதற்குரிய மேலதிக சோதனைகளை மேற்கொண்டு வருவதாகச் சிம்பாவேயின் ஆய்வகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## படம் எடுக்கப்போகும் டோனி!

இந்தியத் துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவரும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான எம்.எஸ்.டோனியின் வாழ்க்கை தொடர்பில் ஏற்கனவே திரைப்படம் வந்திருக்கிறது. இப்போது டோனியே படம் எடுக்கப் போகிறார் என்பதுதான் புதிய தகவல். ஓர் இணையத் தொடர் திரைப்படத்தைத் தயாரிக்கப் போகிறாராம் டோனி. அவரது மனைவி சாக்ஸி இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறார். டோனி என்டர்டெய்ன்மென்ட் என்கிற பெயரில் இந்த இணையத் தொடர் தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# கவனம்... இது பேய்க் கதை

**சேனாதிராஜா - மானிப்பாய்**

**6 கதை**

1976ஆம் ஆண்டு ராஜங்கனைப் பகுதியில் (அனுராதபுரம் - புத்தளம் வீதியருகே இருக்கின்ற காட்டுப் பிரதேசம்) அப்போதைய ஆட்சியாளர்களால் குடியேற்றத் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டி ருந்தன. அப்போது நான் ஒரு காவலாளியாகக் காணி அபிவிருத்தி இலாகாவில் பணியாற்றினேன். பெரும் யானைக்காடு அது. நான் அனேகமாக இரவுக் காவலாளியாகத்தான் இருந்தேன்.

அந்த வீடமைப்புத் திட்டத்தில் பணியாற்றியவர்கள் அந்தப் பகுதியில் பெரிய வாடி ஒன்றை (தகரத்தால் ஆன தங்கு கூடாரம்) அமைத்து அதில் தங்கினார்கள். நானும் அதிலேயே தங்கினேன். அந்தப் பகுதியில் பொடி முதலாளி என்றழைக்கப்படுகின்ற சண்டியன் ஒருவர் கடைகள் வைத்திருந்தார். தேநீர்க் கடை, பலசரக்குக் கடை, வெதுப்பகம், சாராயக் கடை எனப் பலவற்றையும் வைத்து நடத்திய அந்தப் பொடி முதலாளியின் கையில் தமது உழைப்பு முழுதையும் கொடுத்துவிட்டு ஏழைச் சிங்கள விவசாயிகள் வாழ்ந்தார்கள். நான் அங்கு சென்றதும் அந்த ஊரைப் பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறினார்கள். இரவு பத்து மணிக்குப் பிறகு அந்த ஊரில் யாரும் வெளியே உலாவுவதில்லை. ஏனெனில் அதற்குப் பிறகு பேய் நடமாட்டம் இருக்குமாம். மீறி யாரும் வெளியேபோனால் அவர்களைப் போய் அடிக்கும். ஊரின் நடைமுறைகளை மீறிய பலர் பேய் அடித்துச் செத்திருக்கிறார்களாம். இந்த இடத்துக்குப் புதிதாக யார் வந்தாலும் பொடி முதலாளியைச் சந்திப்பது கட்டாயமாகும். பின்னர் அவரின் தயவில்தான் அங்கு சீவிக்க முடியும். பொலிஸார் கூட அவர் சொல்வதைத்தான் கேட்பார்கள் என அறிந்து கொண்டேன். நானும் பொடி முதலாளியைச் சந்தித்தேன்.

ஆளுக்கு 45 வயதிருக்கும்.



தடித்த மீசை, கறுத்த உருவம். கழுத்தில் பெரியதொரு தங்கச் சங்கிலி தரித்து, வெறும் மேலுடன் சாரம் கட்டிப் பெரிய கறுத்த இடுப்புப் பட்டியும் கட்டியிருந்தார். நான் எனது விடயத்தை அவரிடம் கூறினேன். "பொகொம கொந்தாய்" (மிகவும் நல்லது) என்று சிங்களத்தில் ஆரம்பித்து "இந்த ஊருக்கென்று சில நடைமுறைகள் இருக்கு. கேள்விப்பட்டிருப்பாய் என்று நினைக்கிறேன்" என்று சிங்களத்திலேயே கேள்வி தொடுத்தார். "கேள்விப்பட்டிருக்கிறேன். நான் இரவுக் காவலாளி. இரவு பத்து மணிக்கு மேல் பேயின் அட்டகாசம் இருந்தால் எப்படி வேலை செய்வது என்றுதான் யோசிக்கிறேன். ஆனால், எனக்குப் பேய்க்குப் பயமில்லை" என்று அவரது மொழியில் கூறினேன்.

பொடி முதலாளி சிரித்துவிட்டு, "அங்கதான் நீ பிழை விடுகிறாய். இரவு பத்து மணிக்குச் சுடலையில் ஒரு பெரிய விசில் சத்தம் கேட்கும். அந்தச் சத்தத்துடன் ஊர் அடங்கிவிடும். அதை மீறி யாராவது உலாவினால் அவர்களைப் பேய் அடிக்கும் என்பது இங்குள்ளவர்களின் நம்பிக்கை. இரவு பத்து மணிக்குப் பின் பிள்ளை பிறக்க அல்லது கடும் வருத்தம் என்றால் கூடப் பேய்க்குப் பயந்து யாரும் வெளியே வருவதில்லை" என்றார்.

நான் அந்த ஊருக்குப் போய் ஒரு வாரம் ஆகிவிட்டபோது, ஊரவர்கள் சொன்னதில் உண்மை இருப்பதை உணர்ந்தேன். இரவு 9 மணிக்கே பொடி முதலாளியின் கடை மூடப்படும். அதன் பின் ஊரில் எங்காவது சிறு விளக்கு வெளிச்சம் தெரியும். அவ்வளவுதான் பின்னர் மயான அமைதி. சுடலைப் பகுதியில் மிகப் பெரிய சத்தம் கேட்கும். அது அவ்வூர் அடங்குவதற்கான சைரன் போன்றது.

எனக்குப் பேய் விடயத்தில் அறவே நம்பிக்கை இல்லை. ஒரு நாள் பகல்பொழுதில் ஊரவர் ஒருவரின் பிணத்தைச் சுடலை நோக்கிப் பாடையில் வைத்துத் தூக்கிச் சென்றார்கள். பொடி முதலாளி அந்தப் பிணத்தை என்னிடம் காட்டி "இண்டைக்கு இரவு பத்து மணிக்குப் பிறகு யாராவது சுடலைக்குப் போய் இந்தப் பாடையைத் தூக்கி வந்து எனது கடையடியில் வைத்தால் 200ரூபா பணமும் 2 போத்தில் சாராயமும் தருவேன்" என்றார். நான் கூறினேன், "நான் அதைச் செய்து காட்டுகிறேன்" என்று. அருகில் இருந்தவர்களில் சிலர் "இது ஒரு விசப் பரீட்சை. சுடலைக்குப் போகாதே" என்றார்கள்.

அன்று மாலையே பொடி முதலாளியின் கடைக்குப் போய் கால்போத்தல் சாராயம் வாங்கினேன். பொடி முதலாளி சிரித்தபடி "இரவுக்குப் பாடை தூக்கப் போனால் உனக்குச் சாவுதான்" என்றார். நான் சிரித்துவிட்டுப்போய்ச் சாராயத்தைக் குடித்துவிட்டு இரவுச் சாப்பாட்டை உண்டுவிட்டுப் பத்து மணியளவில் சுடலைக்குச் சென்றேன். சரியாகப் பத்து மணியிருக்கும்போது மிகப் பெரிய விசில் சத்தம் கேட்டது. நான் கையில் வைத்திருந்த ரோர்ச் லைற்றை அடித்துக் கொண்டு கிறிஸ் கத்தியுடன் விசில் சத்தம் வந்த திசையை நோக்கிப் பாய்ந்தேன். ஒரு கறுத்த பெரிய உருவம் நிற்பதைக் கண்டேன் தகாத வார்த்தைகளால் பேசியவாறு அந்த உருவத்தைக் கத்தியால் குத்த முயன்ற போது, "ஐயோ குத்த வேண்டாம்" என்று சிங்களத்தில் கத்தியது அந்த உருவம். உருவத்தின் முகத்தை ரோர்ச் லைற் பிடித்துப் பார்த்த போது பொடி முதலாளி நடுங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டேன். என்னிடம் சரணடைந்த பொடி முதலாளி, தனது கதையைக் கூறினார்.

"நான் 20வருடங்களுக்கு மேல் இதைச் செய்து இந்த ஊரை அடக்கி வைத்து, களவு - கொலை - பாலியல் வன்புணர்வு எல்லாம் செய்திருக்கிறேன். இந்த ஊரவர்களும் பயத்தில் வாழ்கிறார்கள். அவர்களுக்குப் பேய் பற்றி இருக்கிற பயம் உனக்கில்லை. அது தான் நீ துணிந்து வந்திருக்கிறாய். தயவு செய்து இந்த விசயத்தை வேறு யாருக்கும் சொல்லாதே" என்று சத்தியம் செய்து தருமாறு கெஞ்சிக் கேட்டார். நானும் அதை ஏற்றுக் கொண்டேன்.

அன்று இரவு பொடி முதலாளியும் நானும் அவரது வீட்டில் சாராயம் குடித்தோம். மறுநாள் அவரது கடைக்குப் போனபோது அங்கிருந்தவர்கள், "இரவு சுடலைக்குப் போனாயா?" என்று கேட்டார்கள். "ஓம்! ஆனால், அந்தப் பாடையை என்னால் தூக்க முடியவில்லை. அங்கு பேய் நின்றது. அதனால் திரும்பி ஓடி வந்துவிட்டேன்" என்று கூறப் பொடி முதலாளியும் அவர்களும் சிரித்தார்கள்.

நான் பின்னர் பணியிடம் மாற்றாலகி நொச்சிகாமம் இகழ களங்குட்டி என்ற இடத்துக்குப் போகும் வரை பொடி முதலாளி என்கிற பேயுடன் நல்லுறவைப் பேணியிருந்தேன். மிகவும் துணிந்தவன் என்ற மன நிலையுடன் அவர் என்னை நடத்தினார். ■

## முகமிலிகளின் பாடல்....

*அவர்கள் எல்லோரும்*
*திரண்டிருந்தனர்.*

*கண்கள் மூக்கு இல்லாமலும்*
*பார்க்கத் தோன்றினார்கள்.*
*வெற்றுத் தலைகளென்பதை*
*பணிந்திருந்த தலைகள்*
*மறைத்திருந்தனவெனினும்*
*வெளிப்படையாய் அறியமுடிந்தது.*

*முள்ளந்தண்டு-*
*இருந்ததோ இல்லையோ*
*ஆய்ந்தறிய அவகாசமிருக்கவில்லை.*
*சுருள முடிந்திருந்தது*
*இயல்பாகவே அவர்களால்.*

*கடந்துபோன காலங்களின்*
*கதைகளை*
*கோபாவேசமாக*
*சொல்லிக்கொடுநரின்*
*மொழியிலேயே உரத்துப் பேசினர்.*
*சொல்லிக்கொடுத்ததையே ஒப்புவித்து*
*ஒரு முறுவலைப் பரிசாகப்பெற்று*
*கொண்டாடினார்கள்.*

*துரப் பார்வையாளருக்கான*
*கதைச் சுருக்கத்தை*
*எழுத முடிந்தோர் எழுதினர்.*

*முகமிழந்த மனிதர்களின்*
*அணிவகுப்பு முடிய*
*அமைதியாய்த் திரும்பினர்.*

*திரும்பியதை எண்ணிக்*
*கணக்கெடுத்துச் சரிபார்த்து*
*சொல்லிக் கொடுநரின் காதுகளில்*
*உரசிவிட்டும்*
*சில முகமிலிகள் திரும்பினர்.*

*திசையறியா முகமிலிகள்*
*சிதைந்தழிந்த திசைகாட்டிகளை*
*மறக்கத்தொடங்கி நீண்ட நாள்களாகவில்லை.*
*எனினும்*
*முற்றாக மறப்பதை சாத்தியமற்றதாக்கும்*
*பயணங்களின்*
*வலிகளைச் சுமக்கவும்*
*அலைவதற்குத் தயாராகவும்*
*பழகிவிட்டனர்.*

*முகமிலிகளின் காலம்*
*இவ்வாறு....ஒருவாறு*

*ந..க..ர்..கி..ற..து.......*

**- கை.சரவணன்.**

# தமிழருக்குத் தடை தமிழரே

> தமிழரின் போராட்டம் பயங்கரவாதம் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. தேசியப் பிரச்சினைக் குத் தீர்வு தேடுகின்ற இவர்களின் கைவசம் தமது தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சாதிய வேறுபாட்டைக் களைவதற்குக்கூட எந்தத் திட்டமும் இல்லை என்கிறபோது புலிகள் மீதான கறையை இவர்களால் துடைக்க முடியும் என்று எண்ணுவது பொருத்தமற்றது.

**வி.அருணாசலம்**

சிங்கள ஆட்சியாளர்கள் ஏறத்தாழ 2,000 ஆண்டுகள் அரசியலில் ராஜதந்திர ரீதியாக வெற்றி பெற்றவர்கள். அதற்கு அடிப்படையாக இருப்பது ஏனைய இனங்கள் குறித்து அவர்களின் இருந்து வரும் பயப்பீதியே (போபியா). அதேவேளை தமிழர் தரப்பிலுள்ள 2 காரணங்கள் சிங்களவர்கள் இனிமேலும் தங்கள் அரசியலைத் தடையின்றி எடுத்துச் செல்வதற்குச் சாதகமான சூழலை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

அதில் முதலாவது, தமிழர்கள் ஒருபோதும் தமக்குள் ஒற்றுமைப்பட்டுவிடாதபடி காத்து நிற்கின்ற சாதிப் பாகுபாடு. இரண்டாவது, ஐ.நா. சபை போன்ற உலக அரங்கில் விடுதலைப் புலிகளை ஒரு போராட்ட அமைப்பாக ஏற்றுக் கொள்ளத்தக்க சாத்தியங்கள் இல்லாதிருப்பது. இந்த இரு விடயங்களையும் தீர்க்க வேண்டியவர்கள் தமிழ்த் தலைவர்களே. ஆனால், அதற்கான ஆற்றலும் அர்ப்பணிப்பும் அவர்களிடம் இல்லை. அது எப்போதோ வளர்த்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் நடக்க வில்லை. அதற்குப் பதிலாகச் சாதிய அடிப்படையிலான தேர்தல் தெரிவு முறைக்குள்ளேயே அவர்கள் உழன்றுகொண்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும்விட தமிழரின் போராட்டம் பயங்கரவாதம் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு தமிழ்த் தலை வர்களுக்கு உண்டு. தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு தேடுகின்ற இவர்களின் கைவசம் தமது தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சாதிய வேறுபாட்டைக் களைவதற்குக்கூட எந்தத் திட்டமும் இல்லை என்கிறபோது புலிகள் மீதான கறையை இவர்களால் துடைக்க முடியும் என்று எண்ணுவது பொருத்தமற்றது.

### மூன்றில் இரண்டு பங்கு கடலும் மூன்றில் ஒரு பகுதித் தரையும்

இலங்கைத் தீவின் மூன்றில் இரண்டு பங்குக் கடலும் மூன்றில் ஒரு பங்கு நிலமும் தமிழரின் தாயகக் கோட்பாட்டில் அடங்குகிறது. இவ்வாறு அதிகமான கடற் பரப்பையும் நிலப்பரப்பையும் சனத்தொகையில் 12 சத வீதத்துக்கும் குறைவாகவுள்ள தமிழருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்குச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் விரும்பப்போவதில்லை. அதேவேளை தமிழருக்கு ஒரு தீர்வை முன்வைத்தால் முஸ்லிம்களும் அந்தத் தீர்வை மையமாக வைத்துத் தமக்கான பிறிதொரு தீர்வைக் கேட்க முனைவர். இவ்விரு இனங்களும் தமக்கான தீர்வுகளை எதிர்பார்த்தால், மீண்டும் மேலே கூறப்பட்டதுபோல பெரும்பகுதிக் கடலையும் நிலத்தையும் பெரும்பான்மை இனம் இழக்க வேண்டி ஏற்படும்.



### 13ஐ நடைமுறைக்கிட வேண்டும்

இந்தியப் பிரதமர் மோடிக்கும் இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் காணொலி மூலம் நடைபெற்ற பேச்சுக்களின்போது 13ஆம் திருத்தத்தை மாற்றமின்றி நடைமுறைப்படுத்திச் தமிழ், முஸ்லிம் இனங்களின் அரசியல் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று மோடி குறிப்பிட்டார். 1987இல் இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் மூலம் 13ஆவது திருத்தம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிர்வகிப்பதற்கு மாகாண சபை முறைமையை அறிமுகப்படுத்தியபோதிலும் அது வெறும் 2 வருடங்களே செயற்பாட்டில் இருந்தது (1988, 19889).

கடந்த 30 வருடங்களாக வடக்குக் கிழக்கு அல்லாத ஏனைய 7 மாகாணங்களிலே மாகாண சபைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திலும் 2013ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்திலும் மாகாண சபைத் தேர்தல்கள் வேறு வேறாக நடத்தப்பட்டன என்பது 13க்கு முரணான அணுகுமுறையே.

2008இல் கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தேர்தல் நடத்தப்பட்டபோது விடுதலைப் புலிகள் உயிர்ப்புடன் இருந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது குறித்து வாய் திறக்கவில்லை. இணைந்த வடக்குக் கிழக்கு என்பதை இந்தியாவும் வலியுறுத்தவில்லை.

2009இல் புலிகள் இல்லாமல்போனபின் 2012இல் கிழக்கு மாகாணத்துக்கான 2ஆவது தேர்தல் நடந்தது.

அதைத் தமிழ்த் தேசியவாதிகள் கண்டுகொள்ளவில்லை. 2013இல் வட மாகாணத் தேர்தல் கிழக்கைத் தவிர்த்துத் தனியாகத் நடத்தப்பட்டபோது "தமிழர் இலங்கையின் மூத்த குடிகள், தமிழ் மொழியே முதல் மொழி" என்று இன்றைக்கு நாடாளுமன்றில் சவால் விடுகின்ற விக்னேஸ்வரனே, அன்று முதன்மை வேட்பாளராகத் தேர்தலில் களமிறங்கி முதலமைச்சரானார். இணைந்த வடக்குக் கிழக்கில்தான் தேர்தல் நடக்க வேணடும் என அவர் தவம் கிடக்கவில்லை.

### ராஜதந்திரம் இது

வடக்கும் கிழக்கும் பிரிந்து செயற்படுவதற்காகக் கிழக்கு மாகாணத்தில் 2008, 2012 என இரு சந்தர்ப்பங்களில் கிழக்கு மாகாண மக்கள் தனியான மாகாண சபைக்கு வாக்களித்திருக்கிறார்கள். அவர்கள் தாம் வடக்கு மாகாணத்துடன் இணைய வேண்டும் என வாதாடவில்லை. 2013இல் வடக்கு மாகாணத்துக்குத் தனியான தேர்தல் நடந்தபோது, வடக்குக் கிழக்கை இணைக்கும் தற்காலிக ஏற்பாட்டை வலியுறுத்திய 13ஆவது திருத்தம் பற்றிக் கதைக்கும் தமிழ்த் தேசியவாதிகள் எவரும் அன்றைக்கு வாய் திறக்கவில்லை. தேர்தல் தொழிலில் உழைப்புத் தேடப் போட்டியிட்டனர்.

கிழக்கு மாகாணத்துடன் இணையவேண்டும் என முரண்டு பிடிக்காது வடக்கு மக்களும் அப்போது வாக்களித்தன் மூலம் வடக்குக் கிழக்கு தனியான இரண்டு அலகுகளாகப் பிரிக்கப்பட்டது. இது சிங்களத் தலைவர்களின் ராஜ தந்திரத்தையே காட்டுகிறது.

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் அடுத்தடுத்துள்ள மாகாணங்கள் அல்ல என்பதைப் பௌதீக ரீதியாகப் பிரித்துக் காட்டுவதற்காக அனுராதபுர மாவட்டத்துடன் இணைந்த வெலி ஓயாவை(மணலாறு) கிழக்குக் கடற்கரை வரை நீட்டியிருந்தார் முன்னாள் அதிபர் ஜே.ஆர். அதன் மூலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் வட மத்திய மாகாணம் செருகப்பட்டது. ஆனால் மகிந்த தரப்பு தேர்தல் என்கிற ஜனநாயக ரீதியான தீர்ப்பை மக்களிட மிருந்து பெற்றிருக்கிறது. தமிழ்க் கட்சிகள் அதைப் புறக்கணிக்க வில்லை. இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை எழுதிய இந்தியா அதை ஏன் என்றுகூடக் கேட்கவில்லை.

இனி 13க்குள் தமிழருக்கான தீர்வு என்பது இணைந்த வடக்குக் கிழக்காக இருக்கப்போவதில்லை. இந்த இணைப்புக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தமிழ்த் தலைவர்களே. வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் இனிக் கோசம் எழுப்பினால், 2008இலிருந்து கோமாவிலா கிடந்தீர்கள் என்றுதான் சிங்கள ஆட்சியாளர்கள் கிண்டலடிப்பர்.

தமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதே தமது அரசியல் என்று சிந்திக்காமல் சிங்களவரின் அரசியலைக் குழப்புவது அல்லது ஒரு பகுதிக்கு முட்டுக் கொடுப்பது என்ற நிலையை எடுத்திருந்த தமிழ்த் தலைவர்கள் போரின் பின்னரான அரசியலில் மக்களை ஏமாற்றி உழைப்புத் தேடினர் என்பதும், கடந்த தேர்தலில் அதில் ஒரு சிலர் மக்களால் ஓரங்கட்டப்பட்டனர் என்பதுமே வரலாறாகும்.

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை!

■ பேர் அறிஞன்

வளமிகு வாழ்வு எனும் பதமானது மிகமிக இனிமையானது எனினும் அதை நோக்கிய நகர்வுகள் அல்லது நகர்த்தல்கள் எவ்வாறுள்ளன? அதற்கான திட்டமிடல்கள் ஏதாவது உள்ளனவா? போன்ற வினாக்களுடன் பயணிக்க முற்படும் ஒருவரிற்கான பதில்கள் எப்படியிருக்கப்போகின்றன என்பதுதான் இப்பத்தியின் பேசுபொருளாக அமையவிருக்கிறது.

வளமிகு வாழ்வு என்பதனுள் ஒருவனது மன நிறைவு முக்கியமானது. அவ்வாறாக ஒருவன் மனநிறைவு அடைதல் என்பது முழுமையடைய அல்லது நிறைவடையக்கூடிய ஒன்றா? என்பது ஆன்மீக - உளவியல் ரீதியாக ஆய்விற்குரியதாகவே இருக்கிறது; இருக்கும். எனினும் தன் சார் வாழ்க்கைத் தேவைகளின் பெரும் பகுதியை எட்டுதல் அல்லது அவனது எதிர்பார்க்கைகளின் பகுதிகள் கிட்டுதல் எனும் நிலையை அடைதல் என்பதை மனநிறைவு என எடுத்துக் கொள்ளலாம். (இப்பத்திக்கான தேவையாக வேண்டுமெனில் கொள்க.)

இந்நிலை ஏற்பட வேண்டுமாயின் அதைத் தீர்மானிப்பதில் பெரும் பகுதியானது அவனது வருவாயியைச் சார்ந்தே இருக்கிறது. உடல் மற்றும் உள ஆரோக்கியம் என்பன அவன் சார்ந்த குடும்ப, சமூக, பொருளாதார நிலையிலேயே பெருமளவில் தங்கியுள்ளது என்பது மறுக்கமுடியாத ஒன்று. எனினும் இவ்விடயங்ககள் தொர்பான விழிப்புநிலை என்பது எந்தளவிற்குள்ளது என்பதும் கவனிக்க வேண்டியதொன்று. பொருளாதார நிலை நேரடி மற்றும் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை பல்வேறு அவதானங்கள் மூலமாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பொருளாதார பலமுடைய ஒரு ஆரோக்கியமான (உடல்-உள) வாழ்வென்பது ஒவ்வொருவருடையதும் எதிர்பார்ப்பு எனவே கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறான ஒரு வாழ்க்கையை வாழ என்னென்ன முயற்சிகளை எடுக்கவேண்டும்? எவ்வாறு எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்?

இம்முயற்சிகள் செயற்பாடுகளுக்கான மூல பலமாக இருப்பது அறிவுதான். இதனைப் பட்டறிவு, கல்வியறிவு என வேறு பிரித்தும் பார்க்க முடியும். பார்க்கவும் வேண்டும். எப்படியிருப்பினும் இன்றைய சூழலானது பட்டறிவுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அல்லது கவனிப்பு எத்தகையது? எவ்வளவு? இவை தொடர்பாக நாம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?



இன்றிருக்கும் போக்கானது அனுபவக் கல்வி (முறையில் கல்வி) என்பதற்காகக் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன? அல்லது அது தொடர்பில் கொண்டிருக்கும் புரிதல் என்ன? அவ்வா றானதொரு முறையினை ஏற்றுக் கொள்கிறதா? அனுமதிக்கிறதா? அடுத்த படிநிலையிலுள்ள முறைசாராக் கல்வி தொடர்பான கவனம் எந்தளவில் உள்ளது என்பதுகூட பெரும் கேள்விக்குரிய தாகவே உள்ளது. ஏனெனில் இது தொடர்பான விழிப்பு நிலை அல்லது புரிந்து ணர்வு திருப்திகரமான அளவில் உள்ளதா என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தொழிற்கல்வி தொழில் நுட்பக்கல்வி போன்ற சொற்தொடர் களால் விழிக்கப்படும் முறைசாராக்கல்வி என்பதிலும்கூட செயன்முறை மற்றும் செயன்முறையினூடாக அனுபவம்பெறுதல் தொடர்பான விழிப்புநிலை தொடர்பாகவும் கவனிக்க வேண்டியுள்ளது என்பதையும் மறுக்கமுடியாதுள்ளது.

எமது சூழலில் தொழில்தெரிவு முதல் வேலை வாய்ப்புகள் வரை தேவைப்படும் தகைமைகள் எதிர்பார்க்கப்படும் தகைமைகள் எவ்வாறானவை? எத்தகையன? எப்படியானவை? என்பது தொடர்பான அறிவூட்டல் அல்லது தெளிவுபடுத்துதல் தொடர்பாக வேலைத்திட்டங்களேதும் உள்ளனவா? இதற்கான பொறிமுறைகளேதும் உள்ளனவா? போன்ற கேள்விகளை யதார்த்த சூழலிலுள்ள ஒரு யதார்த்தவாதியால் எழுப்ப முடியும். நிச்சயமாக இந்தக் கேள்விகள் அவனுள் எழுந்தபடிதான் இருக்கும்.

( தொடரும் வழிதேடல்.....)

KUDIL PRODUCT
ECO-FRIENDLY

## கமுகு மடல் தட்டுக்கள் விற்பனைக்கு

12" - Rs.360 - 12 தட்டுக்கள்
10" - Rs.300 - 12 தட்டுக்கள்
08" - Rs.240 - 12 தட்டுக்கள்
06" - Rs.192 - 12 தட்டுக்கள்

மேலும் தொடர்புகளுக்கு
No. 74/1, A35, Visvamadu.
kudilproduct@gmail.com
+94 71 7777 559



# திரையிசை ஆவணம் பாலு!


சி.விமலன்

பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் மறைவு முழு உலகிற்குமே பெரும் அதிர்ச்சி. சுமார் ஒன்றரை மாத காலம் அவர் வைத்தியசாலையில் இருந்தாலும் கொரோனா தொற்றில் இருந்து விடுபட்டு உயிர்காக்கும் கருவிகளின் துணையின்றிச் சில தினங்களுக்கு முன்புவரை திருமணநாளை அங்கேயே கொண்டாடிய தருணம் உட்பட அவர் குறித்த நல்ல செய்திகளே வெளிவந்ததனால் எப்படியும் மீண்டு(ம்) வந்துவிடுவார் என்றே ரசிகர்கள் பலரும் நம்பி இருந்தார்கள். அதனால் தான் அவரது இறப்பை ரசிகர்களால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

பாலு மறைந்து வாரம் ஒன்று கடந்த நிலையில் வெளிவந்த பல அஞ்சலிக் கட்டுரைகளிலும் அவரது பாடல்களைப் பட்டியலிட்டும் பாடல்களில் அவர் வெளிப்படுத்தும் நுணுக்கங்கள், சங்கதிகள், உணர்ச்சி பாவங்கள் மற்றும் அவரது தனிமனித குணவியல்புகள் குறித்தெல்லாம் எழுதப்பட்டதனால் அவற்றைத் தவிர்த்துப் புதிதாக என்னத்தைச் சொல்லிவிட முடியும் என்று சிந்தித்த பொழுது திரையிசைப் பாடல்களின் ஆவணப்படுத்தலுக்கு அவர் வழங்கிய பங்களிப்புக் குறித்து எழுதுவது பொருத்தமெனத் தோன்றியது.

தமிழ்த் திரையிசைப் பாடல்களைப் பொறுத்தவரையில் அது குறித்துப் பல்வேறு ஆவணப்படுத்தல்களைப் பலரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொண்டிருந்தாலும் அது கடக்க வேண்டிய தூரம் இன்னமும் அதிகமாகவே உள்ளது. குறிப்பாகத் திரையிசைப் பாடல்களின் இசை நுணுக்கப் பதிவுகள்கூட தலைமுறை அடையாளங்களாக விளங்கும் நட்சத்திர இசையமைப்பாளர்களது குறிப்பிட்ட சில பாடல்கள் குறித்தே அதிகம் வெளிவந்துள்ளன. அதனை முழுமையாகச் சாத்தியப்படுத்துவது அவ்வளவு எளிதான விடயமல்ல என்றாலும் பாடலாசிரியர்கள் சிலர் பாடல்கள் பிறந்த நதிமூலத்தைக் குறிப்பிட்டுச் சில நூல்களை வெளியிட்டதைப் போல இசையமைப்பாளர்கள் எவ்வளவு தூரம் அதில் அக்கறை காட்டியுள்ளார்கள் என்பது சந்தேகமே.

சில இசையமைப்பாளர்கள் குறிப்பிட்ட சில பாடல்களின் தோற்றுவாய் குறித்தும் அந்தப் பாடலில் கையாளப்பட்டுள்ள இசைநுணுக்கங்கள் குறித்தும் காணொலிகளை வெளியிட்டாலும் அது 'ஆனைப் பசிக்குச் சோளப் பொரி' போலவே உள்ளது. அதுபோன்றே பத்தி எழுத்தாளர்கள், இசையமைப்பாளர்களதும் பாடகர்களதும் பாடல்களைப் பட்டியல்படுத்துவதிலும் இசை விமர்சகர்களில் சிலர் கவனிப்புக்குரிய விமர்சனங்களை முன்வைத்திருந்தாலும் பொத்தாம் பொதுவாகப் பாடல்களின் குறிப்பிட்ட சில கூறுகளை முதன்மைப்படுத்தியதாகவே அவர்களது ஆய்வுகள் அமைந்தமையும் உண்டு. அது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் அவற்றைக்கூடத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையிலேயே பலரும் இருந்தார்கள். அதையும் மீறித் தொடர்ந்து இயங்கியவர்களின் எழுத்துக்கள் கால ஓட்டத்தில் நீர்த்துப் போனதும் உண்டு. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் அதுதான் யதார்த்தமாக இருக்கிறது.



எனவே முறையான ஆவணப்படுத்தும் முயற்சி எதுவும் இல்லாததொரு நிலையில் உதிரிகளாகக் கிடைக்கும் அத்தகைய பதிவுகளையோ அல்லது காணொலிகளையோ நம்பி இருக்க வேண்டிய துரதிஸ்டத்திற்கு நாம் ஆளாகியுள்ளோம். அந்த வகையில் அரைநூற்றாண்டு காலமாய்த் திரையிசையோடு சங்கமித்து 40,000 இற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிய பாலு பல்வேறு நேர்காணல்களில் பாடல்களின் இசை நுணுக்கம் குறித்தும் இசைக்கலைஞர்கள் மற்றும் பாடலாசிரியர்கள் குறித்தும் வழங்கிய அபூர்வத் தகவல்கள் இணையமெங்கும் காணொலிகளாய் கொட்டிக் கிடக்கின்றன.

திரைப்படங்களில் அவரது வாய்ப்புக்கள் குறைந்த பொழுது றியாலிட்ரி இசை நிகழ்ச்சிகளிலும் மேடைக்கச்சேரிகளிலும் தனது அனுபவப் பகிர்வைக் கணிசமான அளவு சாத்தியப்படுத்தி இருந்தார். அதேவேளை கிடைக்கும் வாய்ப்பின் மூலம் தான் இளம் பாடகர்களுக்குச் சற்றும் குறைந்தவனில்லை என்பதை இந்த வருடம் அவர் பாடிய 'தர்பார்' பட 'நான் தாண்டா இனிமேலு' பாடலின் மூலமும் நிரூபித்திருந்தார். இளம் இசையமைப்பாளர்களோடு எந்தப் பாகுபாடும் இன்றிப் பழகினாலும் மூத்த பின்னணிப் பாடகர்களுக்கு உரிய அங்கீகாரத்தை அவர்களில் சிலர் அளிப்பதில்லை என்ற மனக்கவலையையும் ஒரு நிகழ்ச்சியில் அவர் வருத்தத்தோடு பதிவு செய்திருந்தார்.

றியாலிட்ரி இசை நிகழ்ச்சிகள் குறித்துச் சில விமர்சனங்கள் இருந்தாலும் போட்டியாளர்கள் பாடும் பாடல்கள் குறித்துப் பாலு என்ன புதிய தகவல்களைக் கூறப் போகின்றார் என்பதற்காகவும் தான் பாடிய பாடல்களை அப்படியே பாடாமல் எப்படி மெருகூட்டிப் பாடப் போகின்றார் என்பதை ரசிப்பதற்காகவுமே அவர் பங்குகொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளையும் ரசிகர்கள் தவறவிடாமல் பார்ப்பதுண்டு.


இவ்வாறான நிகழ்ச்சிகளில் இளையராஜாவின் பாடல்களை மெருகூட்டிப் பாடுவதை பாலு பெரும்பாலும் தவிர்த்திருந்தாலும் ஏனைய இசையமைப்பாளர்களின் பாடல்களில் அவருக்கு இயல்பாய் வரும் படைப்பூக்கம் எப்போதும் ரசிக்கும் படியாகவே அமைந்திருக்கும். இது குறித்துப் பாலுவே ஒரு தடவை "இசைத்தட்டில் உள்ளதையே அதேபோன்று திருப்பிப் பாடுவதில் என்ன இருக்கிறது. அதனாலேயே இத்தகைய நிகழ்ச்சிகளில் சற்று மெருகூட்டி ரசிகர்களை மகிழ்விப்பதுண்டு" எனக் குறிப்பிட்டும் உள்ளார்.

சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாலு, எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு கஸல் பாடல்களில் இருந்த ஈடுபாட்டை இரு வேறு தருணங்களில் போட்டியாளர்கள் பாடிய 'மெல்லத் திறந்தது கதவு' திரைப்படத்தில் இடம் பெற்ற பாலுவும் ஜானகியும் பாடிய "தேடும் கண்பார்வை தவிக்க" பாடலின் சரணத்தின் மூலமும் 'விஸ்வதுளசி' திரைப்படத்தில் இடம் பெற்ற பாலு பாடிய "கண்ணம்மா கனவில்லையா" பாடலின் மூலமும் குறிப்பிட்டதோடு அவர் இன்னும் கொஞ்சம் முயற்சி செய்திருந்தால் சிறந்த கஸல் பாடகராக விளங்கி இருப்பார் என்று சுட்டிக்காட்டியதும் நினைவுக்கு வருகின்றது.

எனவே பாடல்களுக்கு அப்பால் பாலு இத்தகைய நிகழ்ச்சிகளில் தன்னை முன்னிலைப்படுத்தாது இசையமைப்பாளர்கள், இசைக்கலைஞர்கள், பாடலாசிரியர்கள் எனப் பலரையும் முக்கியப்படுத்தி அவர் வெளிப்படுத்திய அரிய தகவல்கள் ஆவணப்படுத்தல் என்ற வகையில் முக்கிய பதிவொன்று. இந்த இடத்தில்தான் பொக்கிஷமான பாலுவை நாம் இழந்தது கவலை அளிப்பதாக உள்ளது. பாலு வெறும் பின்னணிப் பாடகராக மட்டுமல்லாமல் ஒரு இசையமைப்பாளராகவும் நடிகராகவும் திரையுலகில் மிளிர்ந்தமையினால் அவரது இழப்பின் கனதி இன்னமும் அதிகமானதே. ஆனாலும் கலைஞர்களுக்கு இறப்பில்லை என்று சொல்வார்கள். அந்த வகையில் பாலு பாடிய பாடல்கள் வாயிலாக அவர் என்றென்றும் ரசிகர்கள் மனதில் நினைவு கூரப்பட்ட வண்ணமே இருப்பார்.

தமிழ்த் திரையிசைப் பாடல்களைப் பொறுத்த வரையில் அது குறித்துப் பல்வேறு ஆவணப் படுத்தல்களையும் பலரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொண்டிருந்தாலும் அது கடக்க வேண்டிய தூரம் இன்னமும் அதிக மாகவே உள்ளது. குறிப்பாக திரையிசைப் பாடல்களின் இசை நுணுக்கப் பதிவுகள்கூட தலைமுறை அடையாளங்களாக விளங்கும் நட்சத்திர இசையமைப்பாளர்களது குறிப்பிட்ட சில பாடல்கள் குறித்தே அதிகம் வெளிவந்துள்ளன.


# 'த ஸ்ரூடென்ட்'



கடவுள் இருக்கிறாரா...? இல்லை மனிதன் தோற்றுவித்த கற்பனையா கடவுள்? கடவுள் என்பது போலியானதா? உண்மையானதா? என்கிற தத்துவச் சண்டையை விளையாட்டாக எடுத்துக்கொள்கிறவர்கள் பலர். அதைக் கடுமையாக விமர்சிப்பவர்கள் சிலர். கடவுளால் நாம் நன்மையடைந்தோம் என்று குறிப்பிடுகின்றவர்களும், கடவுள் என்கிற கொண்டாட்டக் கட்டமைப்பால் பாதிக்கப்பட்டவர்கள் நாம் என்று குறிப்பிடுகின்றவர்களுகமாக இருசாரார் இங்கு இருக்கவே செய்கிறார்கள். கடவுளின் பெயரால் இப்பொழுதும் சண்டையிடும் மனிதர்கள் பலர். இது குறித்து விவாதிக்கிறது 2016ஆம் ஆண்டில் வெளிவந்த "த ஸ்ரூடென்ற்" என்கிற ரஷ்யப் படம்.

ரஷ்யாவைச் சேர்ந்த நாடகக் கலைஞரான மரியஸ் வான் மாயன்பேர்க் என்பவர் நெறியாள்கை செய்த மார்டியரர் என்கிற நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு கிரில் செரெப்ரெனிகோவ் என்பவர் இயக்கிய இந்தப் படம் 2016ஆம் ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுப் பரிசு வென்றது. அதே ஆண்டு நடந்த ஐரோப்பிய திரைப்பட விருது விழாவில் சிறந்த இசையமைப்பாளருக்குரிய விருதை இந்தப் படத்துக்கு இசையமைத்ததன் மூலம் வென்றார் இசையமைப்பாளர் இலியா டெமுட்ஸ்கி.

**படத்தின் கதை**




பக்தி முத்திப்போன மாணவன் வென்யா. அவனுக்கு உயிரியல் பாடம் கற்பிக்கின்ற ஆசிரியை எலினா. அவள் பகுத்தறிவுவாதப் பேச்சு மிக்கவள். இவர்கள் இருவருக்கும் இடையேயான ஆத்திக - நார்த்திகச் சண்டை தான் இந்தப் படம். இருவருமே முதன்மைப் பாத்திரங்கள். ரஷ்யாவில் பழைய பொதுவுடமைச் (கொமியூனிஸ்ட்) சித்தாந்த ஆட்சியில் நாத்திகம் போதிக்கப்பட்டது போய் இப்போது அந்த நாட்டு அதிபர் புடினின் ஆட்சியில் பாடசாலைகளில் மதக்கல்வி கட்டாயம் ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பின்புலத்தில் தான் நிகழ்கிறது இந்தப் படத்தின் கதை.

பாடசாலையில் பாடத்தோடு மதக் கல்வியும் படிக்கின்ற மாணவன் வென்யா, எந்த நேரமும் தனது பையில் பைபிளை வைத்துக்கொண்டு திரிகிறான். அந்தளவுக்குத் தனது கடவுளை - மதத்தை அவன் வெறியோடு நேசிக்கிறான். நீச்சல் உடையில், மாணவிகள் நீச்சல் பயிலக்கூடாது என்று பிரச்சினை செய்கிறான். தமது குருவின் போதனைப்படி நவீன தொழில்மயமாதல் கடவுளுக்கு எதிரானது என்கிறான். "நீ உன் கணவனைப் பிரிந்ததற்காகத்தான் கடவுள் உன்னைத் தண்டிக்கிறார்" என்று தனது தாய்க்கு அவன் கூற அதனால் மன உளைச்சலுக்கு ஆளாகின்ற தாய் கண்ணீர் விடுகிறாள்.

"அவனுக்கு இருப்பது சிறிய உளவியல் பிரச்சினை தான். அதைச் சரி செய்துவிடலாம்" என்று தாய்க்கு நம்பிக்கை அளிக்கிறாள் அவனது ஆசிரியை எலினா. உயிரியல் பாடம் நடத்தும்போது எலினா பாலியல் கல்வியையும் போதிக்க, வென்யா பிரச்சினை செய்கிறான். "திருமணம் ஆனவர்கள் தான் பாலியல் பற்றிப் பேசலாம். அப்படித்தான் பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது. என்போன்ற பாடசாலைச் சிறுவர்களுக்குப் பாலியல் கல்வி தேவையில்லை" என்று வென்யா தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறான். பாடசாலை அதிபரும் அவனை ஆதரிக்கிறாள். "நாளை ஒரு மாணவன் ஒரு மாணவியைக் கர்ப்பவதி ஆக்கிவிடக்கூடாது என்று நான் பயப்படுகிறேன். நீங்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட பைபிளுக்குப் பயப்படுகிறீர்கள்" என்கிறாள் எலினா.

டார்வினின் பரிணாம வளர்ச்சிப் பாட வகுப்பின் போது இந்தப் பிரச்சினை முற்றுகிறது. "டார்வினின் கோட்பாடே தவறு. கடவுள் ஆறே நாளில் உலகத்தைப் படைத்தார். ஏழாவது நாள் ஓய்வெடுத்தார்" என்கிறான் வென்யா. வென்யாவுக்கோ மதவெறி - அவனை எப்படியாவது சாதாரண மனிதன் ஆக்கிவிட வேண்டும் என்கிற வெறி எலினாவுக்கு. வென்யாவின் மதவெறி அதிகரிக்க அதிகரிக்க அடுத்தடுத்து விபரீதங்கள் நிகழ்கின்றன. மறுபக்கத்தில் ஆசிரியை - மாணவனுக்கு இடையிலான இந்தப் போராட்டம் காரணமாக, "நீ என்னை மறந்தே விட்டாய்" என்று அவளைப் பிரிந்து போகிறான் அவளுடைய காதலன்.

அறிவியல் வெகுவாய் வளர்ந்துவிட்ட தற்காலத்திலும் முன்புபோல் மதவெறியும், அதன் விளைவாய் அழிவுகளும் நிகழ வாய்ப்பில்லை என்று இந்த விடயத்தை எவரும் சாதாரணமாகக் கடந்து போய்விடக்கூடாது. தற்காலம் வரை மதத்தாலும்



அதனதன் கடவுளர்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகள், அட்டூழியங்கள் இருக்கத்தான் செய்கின்ற என்பதை எச்சரிக்கைத் தொனியுடன் சொல்கிறது படம். அபின், கஞ்சா என்று போதைப் பொருளுக்கு அடிமையாவதுபோல் இளைய தலைமுறை மதவெறிக்கும் அடிமையாக முடியும் என்கிற பயத்தை ஏற்படுத்துகிறது இந்த ரஷ்யப் படம்.

## தகிப்பின் தமிழ்

1
அங்கே என் குருவி
இத் தனியிரவின் தனிமையிலே
ஏங்கித் துயர்ப்படுமோ
கண்கள் அழுது கவலைமிகக்கொண்டு
கனக வெளியெங்கும் எனைக் காணாதேங்கி
காற்றின் திசையெல்லாம் காத்திருந்து வாடிடுமோ
நினைவின் நெருப்பெரிந்து உயிர் கருகி உணர்விழந்து
அங்கே என் குருவி. ..என்ன இடர்ப்படுமோ.
என் இசையே ...என் துணையே என் உயிரின்
- துளி கொண்டு ஊற்று
அழியா என் காதல் நிலை சொல்லித் தேற்று.

2
மன்னவா உன் காதலின் தீயில் என்னை இடு.
அன்பில் உருகி ஓடும் இதயத்தைத் கையேந்து
குளிர் அருவி நீரெடுத்து குளிர் செய்
கல்லாய் இருந்தவளைக் காதலின் சிற்பமாய் செய்தவனே
நேசமேனும் போர்வைக்குள் மூடு.

3
இரவின் கனவுகளைக் கொண்டு
ஈர மல்லிப் பூக்களின் வாசனை கொண்டு வரும்
காற்றின் மீதேறி சூரியன் பூமியை வாசிக்கும்
காலையின் விளிம்பில் வந்து என் கை சேர் ...
பிரிவின் கதைகளைக் கண்ணிரோடு சொல்....
ம்ம் மறந்து விடாதே எனக்கான கவிதைகளைக் கொண்டுவா
இன்னும் நிறையச் சொல்லவேண்டும்
காண்கிறபோது நம்மிடம் சொற்கள் இருப்பதில்லை

- அஞ்சு.

# எந்நாளும் நலம் வாழ

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

## ஆடாதோடை - பாடாத நாவும் பண் பாடும்


ஆடாதோடைக்குக் காசம் போம்
கடும் இரைப்பிருமல் முட்டகலும்.
வாட்டுகின்ற வல்ல சுரம் நீங்கும்
வயிற்றுநோயகலும் வன்மையுண்டாம்..
தேடாதே வேறு மருந்தெல்லாம் தேன்மொழியே.
சிரங்கு சொறி நமைச்சல் உடம்பின் வலி தீரும்
பாடாத நாவும் பண் பாடும் பாவாய் நீ .
ஆடாதோடையருந்திக் களி.

**விளக்கவுரை:**

ஆடாதோடையின் இலையை எடுத்து நீர் விட்டுக் கொதிக்கவைத்து, வடித்துத் தேன் சேர்த்து அருந்தினால், காச நோய் குணமடையும். இவைகளுடன் திப்பிலி, ஏலம், அதிமதுரம், தாளிசப்பத்திரி ஆகியவற்றுடன் குடி நீரிட்டு அருந்த இருமல், இளைப்பு, ஆஸ்துமா நீங்கும் (ஆடாதோடையில் வாசிசின் என்னும் வேதிப்பொருள் இருக்கிறது. இது நுரையீரல் பாதை விரிவடைய உதவுகிறது). உடலை வாட்டுகின்ற கடுமையான கப சுரம் இதனால் தணிகிறது. ஆடாதோடை ஈர்க்கு, திப்பிலி, மிளகு, சித்தரத்தை ஓமம் என்பவை எடுத்து சித்த மருத்துவ செய்முறையில் கசாயம் செய்து அருந்த கப சுரம் என்கிற சளிக் காய்ச்சல் நீங்கும். மேலும் இது வயிறு சம்பந்தமான நோய்களுக்கும் மருந்தாகிறது. உடலுக்கு வன்மையைச் சேர்க்கிறது.

தேன் போன்ற குரலையுடையவளே!

ஏனைய நோய்களுக்கும் நீ வேறு மருந்தைத் தேட வேண்டியதில்லை, தோலில் ஏற்படும் சிரங்கு கடி என்பவற்றுக்கும் இது மருந்தாகும். இந்த இலையுடன் குப்பை மேனி சேர்த்து அரைத்துப் பூச சரும நோய்கள் விலகும். அது மட்டுமின்றி இது குரலுக்கும் இனிமை சேர்க்கிறது. என் கண்பாவை போன்றவளே! இத்தகைய சிறப்புகள் சேர்ந்த ஆடாதோடையெனும் மூலிகையை அருந்திச் சுகம் பெற்றுக் களிப்புறுவாயாக.



## பழுப்பு நிறத்தழகி!

ஹிந்தி நடிகரான சாரூக்கானின் மகள் சுகானா. அமிதாப்பச்சனுக்குப் பின்னர் ஹிந்தித் திரைப்பட உலகின் சுப்பர் ஸ்டாராகக் கணிக்கப்படுபவர் சாரூக்கான். ஒளிப்பான வெள்ளைத் தோலைக் கொண்டிருப்பவர் அவர். ஆனால் அவரது மகளான சகானாவிற்கு அத்தகைய தோல் நிறம் கிடையாது. பழுப்பு நிறமுடையவர். அவரது தோல் நிறத்தை வைத்து சமூக ஊடகங்களில் அவரைக் கிண்டல் செய்த சிலருக்கு நெற்றியடியாகப் பதிலிட்டிருக்கிறார். என்னுடைய 12 வயதிலிருந்தே எனது தோலின் நிறம் காரணமாக வளர்ந்த ஆண்களாலும் பெண்களாலும் நான் அழகற்றவள், அசிங்கமானவள் என்று சொல்லப்பட்டிருக்கின்றேன், நாம் இந்தியர்களாக இருப்பதால் இயல்பாகவே பழுப்பு நிறம் தானாகவே வருகிறது, மெலனின் (மனிதத் தோல் நிறத்திற்கான காரணி) நிறமியிலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கிறோம் என்பதைப் பொறுத்து எமது நிறங்கள் வேறுபடும், என் உயரம் 5 அடி 3 அங்குலம் என்பது குறித்தும் நான் பழுப்பு நிறமானவள் என்பது குறித்தும் எனக்குப் பெருமைதான் என்று போட்டுத் தாக்கியுள்ளார் சகானா.




லயன் காமிக்ஸ் முத்து காமிக்ஸ்
Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும் விற்பனையாகின்றன!



யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமைச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! – வெளியீட்டாளர்

UNIQUE TEES



| Sizes (in Inches) | M | L | XL |
|---|---|---|---|
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

Scan Here

https://www.facebook.com/UniqueteesSriLanka

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)

விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)




# புலிக் கலைஞன்

பகல் ஒரு மணியிலிருந்து இரண்டு வரை எங்களுக்கு டிபன் இடைவெளி. முன்பெல்லாம் இரண்டரை வரை என்றிருந்ததாகச் சொல்வார்கள். அப்போது காலையில் வேலை ஆரம்பிக்கும் நேரமும் பதினொன்றாக இருந்திருக்கிறது. பதினொரு மணி காரியாலயத்திற்கு வீட்டில் பத்தரை பத்தே முக்காலுக்குச் சாப்பிட உட்கார்ந்து காரியாலயத்திற்குப் பதினொன்றரைக்கு வந்து சேர்ந்து, உடனே ஒரு மணிக்கு டிபன் சாப்பிடப் போவது அசாத்தியமாக இருந்திருக்கிறது. அதனால்தான் காண்டீனில் எப்போதும் இரண்டு மணிக்குத்தான் நிஜமான கூட்டம் இருக்கும். இப்போது காலை பதினொரு மணி என்பதைப் பத்தரையாக்கி, அதையும் ஒரு மாதமாகப் பத்து என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். டிபனுக்காகப் பிற்பகல் ஒன்றிலிருந்து இரண்டு வரை. மாலை ஐந்து மணிக்கும் முடியும் காரியாலயம், இப்போது ஆறு மணிவரை நீட்டி வைக்கப் பட்டுவிட்டது.

வேலை எப்போதும் நடந்த வேலைதான். ஃபாக்டரி பிரிவு என்றிருந்த தச்சுவேலை செய்பவர்கள், எலக்ட்ரிகள் பிரிவைச் சேர்ந்தவர்கள், லாட்டரிக் காரர்கள் இவர்களுக்கு என்றுமே எட்டு மணி நேர வேலை. அதே போலக் கணக்குப் பிரிவு. அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட். இவர்களுக்கு எங்கே வேலை நடந்தாலும் நடக்காது போனாலும் வருடமெல்லாம் கணக்கு எழுதிக்கொண்டே இருக்க வேண்டும். அப்புறம் டெலிபோன் ஆபரேட்டர் டெலிபோனுக்கு இடைவெளி, விடுமுறை என்றிருந்ததே கிடையாது. ஆதலால் இந்தப் பிரிவுகளில் அடங்காதவர்களுக்குத்தான் அவ்வப்போது காரியாலய நேரத்திலேயே ஓய்வு கிடைக்கும். நாட்கணக்கில், வாரக் கணக்கில், மாதக் கணக்கில்.

எனக்குத் தெரிந்து ஒருமுறை எங்கள் ஸ்ருடியோ ஒன்றரை வருடம் திரைப்படமே எடுக்காமல் இருந்திருக்கிறது. ஒன்றரை வருடம் வேலையொன்றும் செய்யாமல் சம்பளம் வாங்கிக் கொண்டு, காரியாலய நேரத்தில் மேஜை மீது காலைத்தூக்கிப் போட்டுக் கொண்டு தூங்கி, தலைமயிரை நரைக்க வைத்து, அடிவயிற்றில் ஊளைச் சதை சேர்த்து, டயாபடிஸ் நோய்க்கு இடம் கொடுத்து, சிந்தனைக்கு இலக்கு இல்லாத காரணத்தால் விழிகளுக்கு அலைபாயக் கற்றுக் கொடுத்து, பேச்சில் நிறைய உளறலை வரவழைத்துக் கொள்ளலாம். ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு நிஜமாகவே வேலை வந்தபோது நிர்ப்பந்த ஓய்வு ஒரு முடிவுக்கு வந்ததில் உற்சாகக் கிளர்ச்சி கொள்ளலாம். அப்படிப்பட்ட கிளர்ச்சி கொண்டு,அதே நேரத்தில் வேலை செய்யும் பழக்கம் அறுபட்டுப் போனதால் தடுமாறலாம். அப்படிப்பட்ட கிளர்ச்சியையும் தடுமாற்றத்தையும் இன்று, நாளை என்று நாங்கள் எதிர்பார்த்திருந்த நாளில் தான் அவன் ஒரு பிற்பகல், நாங்கள் டிபன் முடித்து வெற்றிலை புகையிலை போட்டுச் சுவைத்துக் கொண்டிருந்த நேரத்தில் வந்து சேர்ந்தான்.

"என்னப்பா வேணும்?" என்று சர்மா கேட்டார். சர்மா ஒரு காலத்தில் டிரௌசர் அணிந்தவராகவேதான் காணப்படுவார். போலீஸ் சப்இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தவர். நாடகம், கதைகள் எழுதி பிரசுரம் செய்து பெயர் வாங்கி, எங்கள் ஸ்ருடியோவின் கதை இலாகாவில் ஒரு புள்ளியாகிவிட்டிருந்தார். தங்கமான பழைய நாட்களில் எங்கள் முதலாளியைத் தன்னுடைய மோட்டார் சைக்கிள் பிலியனில் ஏற்றிக் கொண்டு வெளிப்புறக் காட்சிகள் எடுக்கக்கூடிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இப்போது வேஷ்டி அணிந்து, புகையிலை போடுவதில் மிகவும் பழக்கப்பட்டுவிட்டார். அவர் எழுந்து நின்றால் கழுத்துக்குக் கீழ் இருதோள்பட்டையும் சச்சதுரமாக இறங்குவதுதான் அவர் ஒரு காலத்தில் தேகப்பயிற்சி அமைத்துக் கொடுத்த உடற்பாங்கு கொண்டவர் என்பதைக் காண்பித்தது.

சிறு அறை. சிறிதும் பெரிதுமாகப் பழங்காலத்து மேஜைகள் மூன்று. பெரிய மேஜை பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த சர்மாதான் அந்த அறைக்குச் சபாநாயகரெனக் கொள்ளவேண்டும். நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளைத் தவிர இன்னும் ஒன்று அதிகப்படியாக இருந்தது. எங்களுடையது எல்லாமே வெவ்வேறு விதமான பழங்கால நாற்காலிகள். அதிகப்படியான நாற்காலியில் ஒரு கால் குட்டை. யார் வந்து அதில் உட்கார்ந்தாலும் ஒருபுறம் சாய்ந்து, அதில் உட்கார்ந்த வரை ஒரு கணம் வயிற்றைக் கலக்கச் செய்யும். வந்தவன் அந்த நாற்காலியின் முதுகுப் புறத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த எழுத்தாளரான அசோகமித்திரன் 1973ஆம் ஆண்டு எழுதியது இந்தக் கதை. தமிழில் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாக மதிக்கப்படுவது.

"என்னப்பா வேணும்?" என்று சர்மா கேட்டார்.

"சனிக்கிழமை வீட்டுக்கு வந்தேனுங்க" என்று அவன் சொன்னான்.

"சனிக்கிழமை நான் ஊரிலேயே இல்லையே?" என்று சர்மா சொன்னார்.

"காலையிலே வந்தேனுங்க. நீங்க கூட ஒரு குடையை ரிப்பேர் பண்ணிட்டிருந்தீங்க"

"ஓ, நீயா? வேலாயுதமில்லை?"

"இல்லீங்க, காதர் டகர் பாயிட் காதர்"

"நீ வந்திருந்தயா?"

ஆமாங்க, வெள்ளை சொன்னான். ஐயாவை வீட்டிலே போய்ப்பாருன்னு"

"யாரு வெள்ளை?"

"வெள்ளைங்க. ஏஜண்ட் வெள்ளை."

இப்போ சர்மாவுக்கு விளங்குவது போலிருந்தது. வெள்ளை என்பவன்தான் எங்கள் ஸ்ருடியோவில் பெரிய கூட்டங்களைப் படம் எடுக்க வேண்டியிருந்தால் நூற்றுக் கணக்கில் ஆண்களையும், பெண்களையும் சேர்த்துக் கொண்டு வருபவன். கூட்டமாக இருப்பதைத் தவிர அவர்களிடமிருந்து நடிப்பு ஒன்றும் தேவைப்படாது. நபருக்கு ஒரு நாளைக்கு சாப்பாடு போட்டு இரண்டு ரூபாய் என்று கணக்கு, வெள்ளை ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு விடுவான்.



"இப்போ ஒண்ணும் கிரவுட் சீன் எடுக்கலையேப்பா?" என்று சர்மா சொன்னார்.

"தெரியுங்க. உங்களைப் பாத்தா ஏதாவது ரோல் தருவீங்கன்னு அவரு சொன்னாரு."

"யாரு சொன்னாரு"

"அதாங்க, வெள்ளை சாரு"

சர்மா எங்களைப் பார்த்தார். நாங்கள் இருவரும் அந்த ஆளைப் பார்த்தோம். குள்ளமாகத்தான் இருந்தான். ஒரு காலத்தில் கட்டுமஸ்தான உடம்பு இருந்திருக்க வேண்டும். இப்போது தோள்பட்டை எலும்பு தெரிய இருந்தான். நன்றாகத் தூங்கியிருந்த அவனுடைய தாடை மூட்டுக்கள் அவனுடைய கரிய கன்னங்களை அளவுக்கு மீறி ஒட்டிப் போனதாகக் காண்பித்தன. வெள்ளை கொண்டு வரும் ஆட்கள் எல்லாரும் அநேகமாக அப்படித்தான் இருப்பார்கள். ராமராஜ்யம் பற்றிப் படம் எடுத்தால் கூடப் படத்தில் வரும் பிரஜைகள் தாது வருஷத்து மக்களாகத்தான் இருப்பார்கள்.

"நான் வெள்ளைகிட்டே சொல்லியனுப்பறேன்" என்று சர்மா சொன்னார். நாங்கள் சாய்ந்து கொண்டோம். பேட்டி முடிந்துவிட்டது.

அவன் "சரிங்க" என்றான். பிறகு குரல் சன்னமடைந்து, "உடனே ஏதாவது பார்த்துக் கொடுத் தீங்கன்னா கூடத் தேவலாம் சார்" என்றான்.

"ஷூட்டிங் ஒண்ணும் இன்னும் ஆரம்பிக்கலை யேப்பா, கிரவுட் சீனெல்லாம் கடைசியிலேதான் எடுப்பாங்க"

"அதுக்கில்லீங்க. ஏதாவது ரோல் தாங்க".

"உனக்கு என்ன ரோல்பா தர முடியும்? அதோ காஸ்டிங் அசிஸ்டெண்ட் இருக்காரு. அவர்கிட்டே எல்லா விவரமும் தந்துட்டுப்போ.

நான்தான் காஸ்டிங் அசிஸ்டெண்ட். வந்தவன் மாதிரி ஆயிரக்கணக்கான நபர்களின் பெயர், வயது, உயரம், முகவரி எல்லாம் குறித்து வைத்திருந்தேன்.

அந்தக் குறிப்புகளிலிருந்து தேவைப்படும் போது நான்கு பேருக்குக் கடிதம் போட்டால் மூன்று கடிதங்கள் திரும்பி வந்துவிடும், விலாசதாரர் வீடு மாறிப் போய்விட்டார் என்ற. அப்புறம் எல்லாம் வெள்ளைதான்.

ஆனால் அவன் என் பக்கம் திரும்பவில்லை. இந்த மூவரில் சர்மாதான் மிக முக்கியமானவர் என்று அவன் தீர்மானமாக இருந்தான்.

"நீங்க பாத்துச் சொன்னாதாங்க ஏதாவது நடக்கும்" என்றான்.

"உனக்கு நீஞ்சத் தெரியுமா?" என்று சர்மா கேட்டார்.

"நீச்சலா?" என்று அந்த ஆள் திரும்பக் கேட்டான். பிறகு, "கொஞ்சம் கொஞ்சம் தெரியுங்க"என்றான்.

"கொஞ்சமெல்லாம் தெரிஞ்சாப் போறாது. ஒரு ஆளு மேலேந்து ஆத்துலே பாய்ஞ்சு நீஞ்சிப் போற மாதிரி ஒரு சீன் எடுக்க வேண்டியிருக்கும். அதுக்கு நீ போறாது."

"எனக்கு டகர் பாயிட் வரும்க. என் பேரே டகர் பாயிட் காதர்தானுங்க."

"அதென்ன டகர் பாட்?"

"டகர் பாயிட்டுங்க. டகர். டகர் இல்லே?"

இப்போது எல்லாரும் கவனமாக இருந்தோம். ஒருவருக்கும் புரியவில்லை.

அவன் சொன்னான். "புலிங்க, புலி, புலி பாயிட்"

"ஓ, டைகர் ஃபைட்டா, டைகர் ஃபைட், நீ புலியோட சண்டை போடுவியா?"

"இல்லீங்க. புலி வேஷம் போடுவேங்க. அதைத்தான் டகர் பாயிட்னுவாங்க இல்லீங்களா?"

"புலி வேஷக்காரனா நீ? புலி வேஷமெல்லாம் சினிமாவுக்கு எதுக்கப்பா? புலி வேஷமா? சரி, சரி. வெள்ளை வரட்டும். ஏதாவது சான்ஸ் இருந்தா கட்டாயம் சொல்லி அனுப்பறேன்.

"நான் ரொம்ப நல்லா டகர் பயிட் பண்ணுவேங்க. நிஜப்புலி மாதிரியே இருக்கும்"

"நிஜப்புலிக்கு நிஜப்புலியே கொண்டு வந்து விடலாமே?"

"இல்லீங்க, நான் செய்யறது அசல் புலி மாதிரியே இருக்கும். இப்ப பார்க்கிறீங்களா?"

"ஆஹாம், வேண்டாம்பா, வேண்டாம்பா,"

"சும்மா பாருங்க சார். ஐயாவெல்லாம் எங்கே புலியாட்டம் பார்த்திருப்பாங்க."

"ஏன், ஒவ்வொரு மொகரத்துக்கோ ரம்ஜானுக்கோ தெருவில் புலி வேஷம் நிறையப் போகிறதே?"

"நம்பளது வேற மாதிரிங்க. நிஜப்புலி மாதிரியே இருக்கும்."

அவன் எங்கிருந்தோ ஒரு புலித் தலையை எடுத்தான். அப்போதுதான் அவன் ஒரு துணிப் பையை எடுத்து வந்திருந்தது தெரிந்தது. புலித் தலை என்பது தலையின் வெளித்தோல் முட்டும். அதை அவன் ஒரு நொடியில் தன் தலையில் அணிந்து கொண்டு முகவாய்க்கட்டை அருகே அந்தப் புலித் தலை முகமூடியை இழுத்து விட்டுக் கொண்டான். அவன் சொந்தக் கண்களோடு ஒரு சிறுத்தையின் முகம் உடையவனாக மாறினான். அறையை ஒரு விநாடி அங்குமிங்கும் பார்த்துக் கொண்டான்.

"பேஷ்" என்று சர்மா சொன்னார். நாங்கள் அவனையே பார்த்த வண்ணம் இருந்தோம்.

அவன் கைகளை ஒரு முறை உடம்பைத் தளர்த்திக் கொண்டான். அப்படியே குனிந்து நான்கு கால்களாக நின்று முகத்தை திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"பேஷ்" என்று சர்மா மீண்டும் சொன்னார்.

அவன் பூனைபோல் முதுகை மட்டும் உயர்த்தி உடலை வளைத்துச் சிலிர்த்துக் கொண்டான். பிறகு வாயைத் திறந்தான். நாங்கள் திடுக்கிட்டோம். அவ்வளவு நெருக்கத்தில் அவ்வளவு பயங்கரமாகப் புலி கர்ஜனையை நாங்கள் கேட்டது கிடையாது.

அவன் மீண்டும் ஒரு முறை புலியாகக் கர்ஜித்துத் தன் பின்பக்கத்தை மட்டும் ஆட்டினான். அப்படியே நான்கு கால்களில் அறையில் காலியாயிருந்த நாற்காலி மீது பாய்ந்து ஒடுங்கினான். நாற்காலி தடதடவென்று ஆடியது. நான் "ஐயோ" என்றேன்.

அவன் நான்கு கால் பாய்ச்சலில் என் மேஜை மீது தாவினான். கண் இமைக்கும் நேரத்தில் சர்மா மேஜை மீதும் பாய்ந்தான். சர்மா மேஜை மீதும் தாறுமாறாகப் பல காகிதங்கள்,புத்தகங்கள், வெற்றிலைப் பொட்டலம் முதலியன சிதறி இருந் தன. ஒன்றின் மீது கூட அவன் கால்கள் பட வில்லை. அவன் சர்மா மேஜை மீது பதுங்கி சர்மாவைப் பார்த்து மீண்டுமொரு முறை குலை நடுங்க வைக்கும் முறையில் கர்ஜித்தான். அங்கிருந்து அப்படியே உயர மேலே பாய்ந்தான். நாங்கள் எல்லோரும், "ஓ" என்று கத்திவிட்டோம்.

அது பழங்காலத்துக் கட்டிடம், சுவரில் நெடுக சுமார் பத்தடி உயரத்தில் இரண்டங்குலத்திற்கு விளிம்பு மாதிரி இருந்தது. ஒரு பக்கச் சுவரில் அந்த விளிம்புக்குச் சிறிது உயரத்தில் ஒரு ஒற்றைக் கம்பி போட்ட ஜன்னல் வெண்டிலேட்டராக இருந்தது. அதில் ஏகமாகப் புழுதி,அழுக்கு ஒட்டடை படிந்து இருந்தது.

அவன் நான்கு கால்களையும் வைத்து ஆளுயரத்திற்கும் மேல் எகிறி எங்கள் தலைக்கு மேல் அந்த ஈரங்குலச் சுவர் விளிம்பில் ஒரு கணம் தன்னைப் பொருத்திக் கொண்டான். பிறகு கைகளால் வெண்டிலேட்டர் கம்பியைப் பிடித்துக் கொண்டு மீண்டும் புலிபோலக் கர்ஜித்தான்.

"பத்திரம்பா, பத்திரம்பா" என்று சர்மா கத்தினார். அந்த உயரத்தில் அவன் முகத்துக்கு நேரே கூரை மின்சார விசிறி பிசாசாகச் சுற்றிக் கொண்டிருந்தது. அவனுக்கும் அந்த விசிறிப் பட்டைகளுக்கும் நடுவே சில அங்குலங்கள் கூட இருக்காது.

அவன் அவ்வளவு உயரத்திலிருந்து அப்படியே நாற்காலி மீது தாவினான். அப்படியே எம்பித் தரையில் குதித்தான்.

நாங்கள் திகிலடங்காத அதிர்ச்சியில் இருந்தோம். சிறுத்தை முகத்திலிருந்த அவன் கண்கள் புலிக்கண்களாக மின்னின. இன்னொரு முறை சிறுத்தை பயங்கரமாக வாயைப் பிளந்து கர்ஜித்தது. அடுத்த கணம் அவன் உடல் தளர்ந்து தொங்கியது. அவன் எழுந்து நின்று கொண்டான்.

சர்மாவால் கூட பேஷ் என்று கூற முடியவில்லை. அவன் சிறுத்தை முகமூடியைக் கழற்றிவிட்டான்.

நாங்கள் எல்லோரும் பேச முடியாமல் இருந்தோம். அவன்தான் முதலில் பழைய மனிதனானான்.

"நான் கட்டாயம் ஏதாவது பார்க்கறேம்பா" என்று சர்மா சொன்னார். அவர் குரல் மிகவும் மாறியிருந்தது. அவன் கையைக் குவித்துக் கும்பிட்டான்.

"நீ எங்கேயிருக்கே?" என்று சர்மா கேட்டார். அவன் மீர்சாகிப்பேட்டை என்று சொல்லி, ஒரு எண், சந்தின் பெயர் சொன்னான். நான் குறித்துக் கொண்டேன். அவன் தயங்கி, "ஆனா, எவ்வளவு நாள் அங்கே இருப்பேன்னு தெரியாதுங்க" என்றான்.

"ஏன்?" என்று சர்மா கேட்டார்.

"இல்லீங்க..... என்று ஆரம்பித்தவன் சடாலென்று சர்மா காலில் விழுந்தான்.

"எழுந்திருப்பா எழுந்திருப்பா காதர்" என்று சர்மா பதறினார். நாங்கள் எழுந்து நின்றிருந்தோம். அவனும் எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டான். "நம்ம சம்சாரம் வீட்டுப் பக்கமே வராதேன்னு சொல்லியிருக்குங்க என்றான். அவன்தான் சில நிமிஷங்களுக்கு முன்பு புலியாக இருந்தான்.

"நான் சம்பாரிச்சு எவ்வளவோ மாசமாகுதுங்க. அது தான் என்ன பண்ணும்? நாலு குழந்தைங்க. எல்லாம் சின்னச் சின்னது. அவன் இப்போது அழுது கொண்டிருந்தான்.

சர்மாவுக்கு ஏதோ தோன்றி, "நீ இன்னிக்குச் சாப்பிட்டாயா?" என்று கேட்டார்.

அவன் "இல்லீங்க" என்றான். அவன் அன்றில்லை. எவ்வளவோ நாட்களாகச் சாப்பிடவில்லை என்பது கூடக் கேட்கத் தேவையற்றதாயிருந்தது.

சர்மா அவர் ஜேபியில கையை விட்டார். நாங்களும் உடனே எங்கள் பைகளில் துளாவினோம். சில்லறை எல்லாம் சேர்ந்து இரண்டு ரூபாயிருக்கும். சர்மா, "இந்தா இதைக் கொண்டு போய் முதல்லே காண்டீனுக்குப் போய் நன்னாச் சாப்பிடு" என்றார்.

அவன் "வேண்டாங்க" என்றான்.

"என்ன வேண்டாம்? போய்ச் சாப்பிடுப்பா முதல்லே" என்று சர்மா சொன்னார்.

"ஏதாவது ரோல் வாங்கித் தாங்க ஐயா" என்று அழுதுகொண்டே அவன் சொன்னான்.

சர்மாவுக்கு அவ்வளவு கோபம் வந்து நான் பார்த்ததில்லை. "கொடுத்த பணத்தை நீ எப்படய்யா வாங்கிக்க மாட்டேன்னு சொல்லுவே? பணத்தை மறுத்தா உனக்குப் பணம் எங்கேய்யா வரும்? ஒரு சல்லீன்னாலும் லஷ்மீய்யா, உனக்கு எங்கேய்யா லஷ்மீ வருவா?போ, வாங்கிக் கொண்டு முதல்லே சாப்பிடு" என்று கத்தினர்.

அவன் அழுகை ஓய்ந்து பணத்தை வாங்கிக் கொண்டான். சர்மா இதமாகச் சொன்னர். "ரோல்லெல்லாம் என் கையிலே இல்லேப்பா. உனக்கு முடிஞ்சது நான் செய்யறேன். போ, முதல்லே வயத்துக்கு ஏதாவது போடு," பிறகு என்னைப் பார்த்து "கொஞ்சம் இவனைக் காண்டீனுக்கு அழைச்சுண்டு போய் சாப்பிடவை" என்றார். நான் உடனே எழுந்தேன்.

அவன் "வேண்டாங்க, நான் போய்ச் சாப்பிடறேங்க. நான் போய்ச் சாப்பிடறேங்க" என்றான். பிறகு மீண்டும் எங்களுக்குக் கும்பிடு போட்டுவிட்டு வெளியே போனான்.

நாங்கள் சிறிது நேரம் பேசாமல் இருந்தோம். சர்மா அவரையறியாமல் சிறிது உரக்கப் பேசிக் கொண்டார்.

"இவனுக்கு என்ன பண்ணறது? இங்கே இப்போ எடுக்கறது ராஜா ராணிக் கதைன்னா?"

ஆனால் இவர் வெறுமனே இருந்துவிடவில்லை. இரு வாரங்கள் கழித்து மீண்டும் கதை இலாகா கூடியபோது கதாநாயகன் புலி வேஷமணிந்து எதிரிக் கோட்டைக்குள் நுழைவதாகப் படமெடுக்கலாம் என்று சம்மதம் பெற்றுவிட்டார். புலியாட்டமாகக் காண்பிக்கும்போது கதாநாயகனுக்குப் பதில் காதர் "டூப்" செய்யலாம். அவனுக்கு ஒரு நூறு ரூபாயாவது வாங்கித் தரலாம்.

நான் காதருக்குக் கடிதம் போட்டேன். நான்கு நாட்களில் வழக்கம் போல அக்கடிதம் திரும்பி வந்தது. விலாசதாரர் இல்லையென்று.

சர்மா வெள்ளையை அழைத்துக் கொண்டு காதரைத் தேடினார். நாங்களும் எங்கெங்கோ விசாரித்துத் தேடினோம். கதாநாயகன் எதிரிக் கோட்டைக்குள் நுழையும் காட்சி எடுக்கப்பட வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டே வந்தது. காதர் கிடைக்கவில்லை.

அவன் கிடைத்திருந்தாலும் அதிகம் பயன் இருந்திருக்காது. அந்த ஒரு மாதத்திற்குள் வெளியான ஒரு படத்தில் கிராமிய சங்கீதத்துடன் அந்தக் கதாநாயகன் காவடி எடுப்பதாக காட்சி வந்திருந்தது. அந்தப் படம் தமிழ்நாடெல்லாம் தாங்க முடியாத கூட்டத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது.

நாங்கள் எடுக்கும் படத்தில் கதாநாயகன் கரகம் எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

## பெண்களைக் கொடுமைப்படுத்தினால்....

■ க.குமாரதாஸன்

பிரான்ஸில் குடும்ப வன்முறைகளில் தொடர்ச்சியாக ஈடுபடும் ஆண்களின் நடமாட்டங்களைக் கண்காணிப்பதற்காக அத்தகையோருக்கு 'எலக்ரோனிக் காப்பு' (**Electronic bracelets**) அணிவிக்க அனுமதிக்கும் சட்ட விதிகள் அமுலுக்கு வந்துள்ளன.

குற்றம் இழைக்கும் ஆண் ஒருவருக்கு '**Lebracelet anti-rapprochement**' என பிரெஞ்சு மொழியில் அழைக்கப்படும் காப்பை அணிவிக்க இச்சட்டம் அனுமதிக்கின்றது.

துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண் ஒருவர் தனது துணைவருக்கு அல்லது காதலனுக்கு காப்பை அணிவிக்க குடும்ப நீதிமன்றம் ஒன்றில் ஒப்புதல் அளிக்கவேண்டியது அவசியம்.

ஸ்மார்ட் கைக்கடிகாரம் ஒன்றைவிட சற்றுப் பெரிய வடிவிலான இந்தக் காப்புகள் **GPS** தொழில் நுட்பத்தில் இயங்கக் கூடியவை.



இக் காப்பு அணிவிக்கப்பட்ட ஒருவர் சூழலில் நடமாடுகின்றபோது அவரால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இக்காப்பு எச்சரிக்கை சமிக்ஞையை அனுப்பும். அந்த சமிக்ஞையைத் தெரிந்துகொள்ள வசதியாக குறித்த பெண்ணுக்கு சிறிய **GPS** கருவி ஒன்றும் வழங்கப்படும்.

துணைவர் அல்லது, பிரிந்து வாழும் கணவன், முன்னாள் காதலர்கள் என்று ஆண்களால் பெண்கள் மீது புரியப்படும் வன்முறைகள் நாடெங்கும் அதிகரிப்பதை அடுத்தே இந்த எலக்ரோனிக் காப்புச் சட்டம் அமுலுக் குக் கொண்டுவரப்படுகிறது. நாடு முழுவதும் கடந்த ஆண்டில் மட்டும் **146** பெண்கள் தங்கள் துணைவர்களால் அல்லது காதலர்களால் துன்புறுத்திக் கொல்லப்பட்டுள்ளனர்.

பெண்கள் மீது தொடராக குற்றம் இழைப்பவர்கள் என்று பொலீஸாரால் அடையாளம் காணப்படுவோருக்கு இனிமேல் அவர் களது கையில் அல்லது கால்களில் தன்னிச்சையாக அகற்ற முடியாத வகையில் இந்த விசேட எலக்ரோனிக் காப்புகள் பொருத்தப்படும்.

இவ்வாறு காப்பு அணிவிக் கப்படுபவர் அவரால் பாதிக்கப்பட்ட பெண்ணை மீண்டும் நெருங்க முற்பட்டால் குறித்த பெண்ணை முன்னெச்சரிக்கை செய்யும் சமிக்ஞையை இந்தக் காப்புகள் தானியங்கி முறையில் அப்பெண்ணிடம் உள்ள கருவி மூலம் வெளிப்படுத்தும்.

காப்பு அணிவிக்கப்பட்ட ஒரு நபரின் நடமாட்டங்களை பொலீஸாரும் கட்டுப்பாட்டு நிலையம் (**control center**) மூலம் கண்காணிக்க முடியும்.

இந்த நடைமுறை நாட்டின் ஐந்து நீதி நிர்வாகப் பிரிவுகளில் (**Angoulme, Bobigny, Douai, Pontoise, Aix-en - Provence**) கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் **30**ஆம் திகதியில் இருந்து இச் சட்டம் நாடு முழுவதும் அமுலுக்கு வரும்.


பிரான்ஸில் கடும் குற்றங்களைப் புரிந்தவர்கள் அவர்களது தண்டனைக் காலத்துக்குப் பின்னர் தங்களது வசிப்பிடப் பிரதேசத்தை விட்டு வெளியேறாமல் இருப்பதைக் கண்காணிப்பதற்காக அவர்களது கால்களில் இத்தகைய பொலீஸ் காப்புகளை அணிவிப்பது ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மூளையைத் தின்னும் அமீபா!


அமெரிக்காவிலிருந்து சில காலங்களுக்கு முன்னர் வந்த அதிர்ச்சிச் செய்தி இது. ஒரு பக்கம் கொரோனா வைரஸ் அங்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்திவர மறுமுனையில் ஒரு வகைப் பக்ரீரியாவாலும் சில உயிரிழப்புகள் பதிவாகியிருப்பதைச் சுட்டிக்காட்டிய செய்தி அது. குடி தண்ணீர் - நன்னீரில் காணப்படுகின்ற நெய்க்லீரியா - போலெரி அந்தப் பக்ரீரியா.

மனிதர்கள் நீரை அருந்தும்போதோ அல்லது நீராடும் போதே அவர்களின் மூக்கு வழியாக மூளையை அடைந்து அங்கு தங்கியிருந்து, அவர்தம் மூளையை மெல்ல மெல்லத் தின்று தீர்க்கிறதாம் இது. இதன் முடிவில் மூளை இறப்பு ஏற்பட்டு மனிதர்கள் இறக்கிறார்கள்.

பெருமளவில் இல்லாவிடினும் அமெரிக்காவின் சில பிராந்தியங்களில் உணரப்பட்ட இந்தப் பக்ரீரியாவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் அமெரிக்கா அரசு இறங்கியது. இந்தப் பாக்ரீரியாவானது கொரோனாவைப் போல தொற்றுகின்ற வைரஸ் வகையில்லை. ஆகையால் நீரின் வழியே ஒரு மனிதருக்குள் புகுந்தாலும் அது மற்றொருவருக்குத் தொற்றாது. எனவே இதைக் கட்டுப்படுத்துவதில் பெரிய சவால்களை அமெரிக்கா எதிர் நோக்கவில்லை.




ஆனாலும் 3 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 38 வரையான இறப்புகளை இந்தப் பக்ரீரியா ஏற்படுத்தி விட்டுள்ளது. இதனால் இந்த விவகாரத்தைக் கவனத்தோடு கையாள ஆரம்பித்தது அமெரிக்கா. ஆனாலும் இந்தப் பக்ரீரியா விவகாரம் தற்போது அங்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது. அமெரிக்காவின் ரெக்சாஸ் மாகாணத்திலுள்ள லேக் ஜாக்ஷன் பகுதி இதனால் முடக்கப்பட்டுள்ளது.




லேக் ஜாக்ஷன் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பெரியதொரு நீர்த்தாங்கியிலிருந்து பொதுக் குடிதண்ணீர்க் குழாய்கள் மூலம் நீரைப் பெற்றுப் பயன்படுத்தி வந்த அந்தப் பகுதி மக்கள் பலரும் இந்தப் பக்ரீரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அந்த நீர்த் தாங்கியின் நீர் வழங்கல்கள் நிறுத்தப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்குப் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. குழாய் நீரைப் பயன்படுத்துவதாக இருந்தால் சுட்டாறிய பின்னர் அதைப் பருகுமாறும், நீராடு வாதயின் மூக்குக்குள் நீர் போய்விடாது பார்த்துக்கொள்ளு மாறும் பணிக்கப்பட்டிருக்கிறது.

நீச்சல் குளத்தில் சாதாரணமாக நீராடும்போதும் துள்ளிக் குதித்து மகிழும் போதும்கூடக் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. கொரோனா மாத்திரமல்ல கண்ணுக்குத் தெரியாத இந்தப் பக்ரீரியாவாலும்கூட அமெரிக்காதான் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



# நண்டு - முருங்கை இலை வறை

நண்டுக் குழம்பின் ருசி தனியானது. குழம்பு மாத்திரமல்ல பொரித்துண்ணும்போதும் சுவைப்பது நண்டு. குழம்பு, பொரியல் ஆகிய இரண்டு உணவுகளுமே நண்டில் தயாரிக்கப்படுகின்ற சுவை மிகு உணவுகள். ஆக, மிஞ்சிப்போனால், நண்டில் அதிகம் இவ்விரண்டு உணவுகளையும் தான் தயாரிக்க முடியும் என்று பலர் அறிந்து வைத்திருக்க, ஆங்காங்கே சில மக்கள் நண்டில் வறை வறுத்து உண்கிறார்கள். அதுவும் தனி ருசி தருகின்ற ஓர் உணவாகத்தான் இருக்கிறது. இந்த நண்டு வறையில் முருங்கை இலையும் சேரும்போது அதன் சுவை அதிகரிக்கிறது. இந்த நண்டு வறை குறித்து இந்த வாரம் பார்ப்போம்.

## என்னென்ன தேவை?


நண்டுகள் - 8, முருங்கை இலை 2கெட்டு, சின்ன வெங்காயம் 100கிராம், தேய்ங்காய்த் துருவல் அரைப் பாதியளவு, செத்தல் மிளகாய் 5, மிளகு, சின்னச் சீரகம், பெருஞ்சீரகம், கடுகு ஆகியன கால் டிஸ்பூன். கறிவேப்பிலை 1கெட்டு. உப்பு தேவையான அளவு.

## எப்படிச் செய்வது?

ஒரு சட்டிக்குள் அரைவாசி வரை நீர் ஊற்றி நண்டுகளை அதில் அமிழ்த்தி அடுப்பில் வைத்து அவற்றை அவித்தெடுக்கவும். அவித்தெடுத்த நண்டுகளை உடைத்து அவற்றின் தசைகளைத் தனியாக எடுக்கவும். மிளகு, சின்னச் சீரகம், மிளகாய், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து அம்மியில் வைத்துச் சொர சொரப்பாக அரைத்தெடுத்துக் கொள்ளுங்கள். இதை உடைத்தெடுத்த நண்டுச் சதைகளுடன் சேர்த்துப் பிசைந்து கொள்ளுங்கள்.

தேவையாயின் இப்போதும் உப்புச் சேர்த்துக் கொள்ள முடியும். பிறிதொரு பாத்திரத்தில் முருங்கை இலைகளை ஒடித்து வைத்துக் கொள்ளுங்கள். சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து எண்ணை ஊற்றி அது கொதித்ததும், வெங்காயம், பெருஞ்சீரகம், கடுகு, கறிவேப்பிலை ஆகியவற்றை இட்டு வதக்குங்கள். அவை வதங்கிவந்ததும் பிசைந்து வைத்துள்ள நண்டுச் சதையையும் முருங்கை இலைகளையும் இட்டு நன்கு வறுக்கவும். இறுதியில் தேய்ங்காய்த் துருவலையும் சேர்த்து வறுக்கவும். நன்கு வறுத்த பின்னர் இறக்கிப் பரிமாறுங்கள். நண்டு வறை தயார்!





# பதற வைக்கும் பழங்காலம்

இப்போதெல்லாம் குடும்பத்திட்டமிடல் முக்கியமானதாகிவிட்டது. குழந்தைப் பிறப்பைத் தீர்மானிக்கின்ற திடகாத்திரம் மனிதர்களுக்கு வாய்த்துவிட்டது. இதற்குத் குடும்பநல உதவியாளர்கள்கூட வீட்டுக்கு வீடு வந்து வழிகாட்டுகிறார்கள். கணவன் - மனைவியை அழைத்து அறிவுறுத்தல்களை வழங்குகிறார்கள். கருத்தடை மாத்திரைகள், ஆணுறைப் பயன்பாடு என முன்னேற்றமடைந்த தற்கால உலகில் எல்லாமே இலகு காரியங்களாக இருக்கின்றன.

பழங்காலத்தில் நிலமை இப்படியிருக்கவில்லை. கடந்த நூற்றாண்டுகளில் பொதுச் சுகாதாரத் துறையின் வளர்ச்சி அபரிமிதமாகிக் கருத்தடை முறைகள் பல்கிப் பெருகியிருக்கப் பழங்காலத்தில் கருத்தடைய என்றாலே சுத்த சூனியமாக இருந்திருக்கிறது.

ஆணுறையைப் பயன்படுத்துவதன் மூலம் பாலுறவு மூலமாகத் தொற்றும் நோய்கள் பரவாமல் தடுக்க முடிந்திக்கிறது.

பெண்களுக்கான கருத்தடை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, குழந்தைப் பிறப்பை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் வாய்ப்புப் பெண்களின் கையில் வந்தது. இந்தக் கருத்தடை சாதனங்களால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. பக்க விளைவுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இந்தக் கருத்தடைச் சாதனங்கள் இல்லாத பழங்காலத்தில் கருத்தடை எப்படிச் சாத்தியப்பட்டிருக்கும் என்பதை அறிந்துகொண்டீர்கள் என்றால், இந்தப் பக்கவிளைவுகள் பரவாயில்லை என்கிற பக்குவம் உங்களுக்குள் வரலாம். ஏனெனில் அவை அதிர்ச்சித் தகவல்கள்.

### தோப்புக் கரணமும் தும்மலும்

கருத்தரிக்காமல் தடுப்பதற்காக உடலுறவு கொண்ட பின்னர் கிரேக்கப் பெண்கள் தோப்புக் கரணம் போட்டபடி தும்மினார்களாம். இப்படிச் செய்தால் கருத்தரிக்காது என்பது பழங்கால கிரேக்கர்களின் நம்பிக்கை. உடலுறவு முடிந்தவுடன், தோப்புக்கரணம் போடுவதுபோல நேராக அமர்ந்து எழுவது, குதிப்பதன் மூலம், கருப்பையில் விந்தணு நுழைவது தடுக்கப்படும் என அவர்கள் நம்பினர். அத்துடன் கொஞ்சம் தும்மினால் பயன் உறுதி செய்யப்படும். குழந்தை உருவாகாது என்றும் அவர்கள் நம்பினர்.

### மரநாய்களின் விந்து

ஐரோப்பாவின் இருண்ட காலத்தில் தொழில் முறை மாந்திரீகர் என்று கருதப்படுகின்ற ஒருவரால், உருவாக்கப்பட்ட புனைக்கதை இது. உறவில் ஈடுபடும் பெண்ணின் கால்களுக்கு மத்தியில் மரநாய்களின் விந்தைக் கட்டி வைத்தால், விருப்பம் இல்லாத கருத்தரிப்பு நடக்காது என்று மக்களை அவர் நம்ப வைத்துள்ளார். உறவு கொள்ளும் நேரத்தில், இணையரின் கால்களுக்கு இடையில் வேறொரு விலங்கின் விதைப் பைகள் கட்டியிருப்பது, அவர்களின் உறவின் இன்பத்தைக் கெடுப்பதாக அமையும் என்பது யதார்த்தம்.

### கொல்லர் கூடத்து கந்தகம்

பழங்காலக் கிரேக்கர்களின் இன்னொரு கருத்தடைக் கலவை இது. கொல்லர்கள் பயன்படுத்திய நீரின் கசடுகளைக் குடித்தால் கருவுண்டாகாது என்று நம்பப்பட்டது. கொல்லர்கள் தங்களுடைய உபகரணங்களைக் குளிர்விப்பதற்காக இந்த நீரைப் பயன்படுத்தினர். ஒரு வகையில் அது பயன் அளித்தது என்றே சொல்லலாம்.

அந்த நீரில் கந்தகம் மிகுந்திருக்கும். அது கரு உண்டாவதைத் தடுக்கும் என்றாலும் குமட்டல், சிறுநீரகச் செயலிழப்பு, மரத்துப் போதல், கோமா மற்றும் இறப்பு போன்ற பக்கவிளைவுகள் இதில் உள்ளன. இந்த நுட்பம் முதலாவது உலகப் போர் காலம் வரை பயன்படுத்தப்பட்டது. தங்களுக்கு குழந்தை பிறக்காத நிலையை உருவாக்கும் என்ப தால் கந்தகம் சார்ந்த தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்குப் பெண்கள் தாங்களாக முன்வந்தனர்.

### முதலைச் சாணம்

பிறப்புறுப்பில் தடையை ஏற்படுத்தினால் கருத்தரிக்க முடியாது என்பது பழங்கால எகிப்தியர்களின் நம்பிக்கை. தேன் மற்றும் முதலையின் சாணத்தைக் கலந்து பிறப்புறுப்பில் பூசித் தடையை உண்டாக்கினால் கரு உண்டாகாது எனும் நம்பிக்கையே அது.


### விந்துத் தேநீர்

16ஆம் நூற்றாண்டில் கனேடியர்களின் கண்டு பிடிப்பு இது. மதுபானத்தின் மூலம் கருத்தடையை உண்டாக்குவதைப் பற்றியது. 'பீவர்' எனும் சிறு உயிரினம் ஒன்றின் விதைப் பைகளை நன்றாக அரைத்து, அதை பழங்கால மதுவில் கலந்து குடித்தால் கருத்தரிப்பது தடுக்கப்படும் என்று அவர்கள் நம்பினார்கள். விதைப் பைகளைக் கால்களுக்கிடையே கட்டிக்கொண்டு உறவு கொள்வது எந்த அளவுக்குப் பயனளித்ததோ , இதுவும் அந்த வகையில்தான் பயனளித்தது. அதாவது இதனாலும் எந்தப் பயனும் கிடையாது.

**16ஆம் நூற்றாண்டில் கனேடியர்களின் கண்டு பிடிப்பு இது. மதுபானத்தின் மூலம் கருத்தடையை உண்டாக்குவதைப் பற்றியது. 'பீவர்' எனும் சிறு உயிரினம் ஒன்றின் விதைப் பைகளை நன்றாக அரைத்து, அதை பழங்கால மதுவில் கலந்து குடித்தால் கருத்தரிப்பது தடுக்கப்படும் என்று அவர்கள் நம்பினார்கள்.**

### விலங்கு உணவுக் குடல்கள்

ஆரம்பகால ஆணுறைகள் என்று இதைச் சொல்ல முடியும். பல்வேறு பெயர்களில் ஆணுறை



கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு அவற்றின் தேவையை விலங்குகளின் குடல்களே பூர்த்தி செய்தன. ஆணுறை பற்றிய மிகவும் பழமையான பதிவு ஒன்றில், ஒரு வகை ஆணுறை பன்றியின் குடலில் இருந்து தயாரிக்கப்பட்டது என்று குறிட்டுள்ளது. அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என வழிகாட்டும் பயனாளர் கையேடும் அதனுடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆணுறையைப் பயன்படுத்துவதற்கு முன்பு மிதமான வெப்பம் உடைய பாலில் இதை நனைத்து விட்டுப் பயன்படுத்த வேண்டும் என்று அந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### எலுமிச்சம் பழக் கோது

பெண்களை வசீகரிக்கும் குணம் கொண்டவர்கள் இந்த நடைமுறையை விரும்பினர். இதற்கு வெட்டப்பட்ட பாதித்துண்டு எலுமிச்சை தேவை. அதன் உள்ளே இருக்கும் சதைப் பகுதியை நீக்கிவிட்டு, பெண்ணுறுப்பின் உள்ளே அதை வைத்துவிட வேண்டும். எலுமிச்சைத் தோல் பெண் உறுப்பில் தொப்பிபோல ஒட்டிச் செயற்படும். அதன் அமிலச்சாறு விந்தணுவைக் கொல்லக் கூடியதாக இருக்கும். எனவே இது ஒரு வகையில் வேலை செய்தது என்று சொல்லலாம்.

### பாதரசத்தில் வறுத்த தவளைக்குஞ்சு

கி.மு. 900 ஆண்டு வாக்கில், உடலுறவு முடிந்தவுடன் பெண்கள், பாதரசத்தில் வறுத்த 16 தலைப் பிரட்டைகளை (தவளைக்குஞ்சு) சாப்பிட வேண்டும் என்று சீனப் பிறப்புக் கட்டுப்பாட்டு நிபுணர்கள் கூறி வந்துள்ளனர். கொல்லர்களின் தண்ணீரைப் போல, இதுவும் தவறான வழிகாட்டுதலாக இருந்துள்ளது. இதுவே விசமாகும் ஆபத்து உள்ளது. இதை சாப்பிட்டதால் பெண்கள் கருத்தரிக்கவில்லைதான். மட்டுமில்லை, பலரும் நிரந்தரமாகவே கருத்தரிக்கும் தன்மையையும் இழந்தனர். கல்லீரல், சிறுநீரகங்களில் கோளாறு மற்றும் பிற முக்கிய உறுப்புகளில் கோளாறு ஏற்படுத்தும் பக்க விளைவுகள் இதில் உள்ளன. நிலைமை மிக மோசமாகிப் போனால் இறப்பும் ஏற்படும்.

### அபின் பூ

அபின் என்பது வெறும் பூ மட்டுமல்ல என்று சுமத்ரா தீவு மக்கள் கண்டறிந்தனர். இருபுறம் வெடித்துள்ள இந்தத் தாவரத்தின் பூவை உடலுறவின்போது ஒரு மெல்லிய திரையைப் போல பயன்படுத்துவார்கள் அல்லது அதற்கு மாற்றாகப் பெண் உறுப்புக்குள் இதன் பூக்களை நுழைத்துக் கொள்வார்கள். இது எந்த அளவுக்குப் பயன் தந்தது என்பது தெரியவில்லை.

### கொக்கக் கோலா பீய்ச்சியடித்தல்

இது 60 ஆண்டுகளுக்கு முன்பு பின்பற்றப்பட்ட நடைமுறை. கொக்கக் - கோலா பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. வோட்காவில் கலக்கலாம், கோடையில் புத்துணர்வூட்டும் பானமாகக் குடிக்கலாம், தேவை இல்லாமல் முளைத்த பற்களைக் கரைய வைக்கலாம். ஆனால் ஒரு காலத்தில் அது கருத்தடைச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது உங்களுக்குத் தெரிந்திருக்காது.

1950களில் உடலுறவு முடிந்ததும் பெண்கள் கொக்கக்-கோலாவை பெண் உறுப்பில் ஊற்றிக் கொள்வார்கள். அதில் உள்ள சீனி விந்தணுக்களைச் செயல் இழக்கச் செய்யும் என்றும் காபனேற்றம் செய்த பானம் பெண்ணுறுப்பில் வலிந்து உள்ளே போகும் என்றும் நம்பினார்கள்.

பழங்காலத்தில் இருந்த பைத்தியக்காரத்தனமான கருத்தடை நடைமுறைகளை இப்போது அறிந்து கொண்டிருக்கிறீர்கள். இவற்றில் எதையும் வீட்டில் முயற்சித்துப் பார்க்காமல் இருப்பது நல்லது.

தகவல் - பி.பி.சி



# மறக்க முடியாத மண்ணித்தலைத் தேர்!

■ பொன்வண்டு

மண்ணித்தலையை உங்களுக்குத் தெரியுமா? பூநகரிப் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதி அது. கொழும்புத்துறை, பாசையூர், அரியாலை ஆகிய பிரதேசங்களுக்கு நேர் எதிராகக் கடலால் பிரிக்கப்பட்டவாறு இருக்கிறது. கொள்ளை அழகு மிக்க வெண்ணிற மணற்றிடல்களால் இயற்கையாக அழகுற்றிருக்கும் மெலிதான நீண்ட நிலப்பரப்பு என்றும் மண்ணித் தலையைச் சொல்ல முடியும்.

மண்ணித்தலையிலுள்ள கிறிஸ்தவ ஆலயம் பிரபல்யமானது. அந்த ஆலயத்துக்குப் பாசையூர்ப் பகுதி மக்கள் அதிகளவில் சென்று வருகிறார்கள். தொழில் நிமித்தம் மண்ணித் தலையில் தங்கிச் சென்ற காலத்தில் அந்த ஆலயத்தை அமைத்தவர்கள் அவர்கள். கடல் வழியாக அங்கு செல்லும்போது, புவரம் தீவு, மான் தீவு ஆகிய தீவுகளைக் கடக்கையில், பந்தலடி என்கிற நிலப்பரப்பு வருகிறது. உள்ளாறு என்று அதை அழைக்கின்ற பாசையூரவர்கள், அதற்கடுத்துள்ள வயிறு வீங்கி ஆற்றை நீரோட்டம் நிறைந்த இடம் என்கிறார்கள். இப்படிப் பல ஆற்றோட்டங்களைக் கடந்துதான் மண்ணித்தலையை அடைய வேண்டியிருக்கிறது.


"மண் பூத்துக் குலுங்கும் இடம் அது" என்று மண்ணித்தலை மண்ணில் ஓடியாடி விளையாடிய தனது சிறுபராயத்தை நினைவுகூர்கிறார் அல்பிரட் ஐயா. இப்போது அவருக்கு 79 வயது. ஆனாலும் இதைச் சொல்லும்போது சுருங்கிய அவரது வதனத்தில் சிறுபிள்ளைத் தனமான வெட்கம் ஒன்று பளிச்சிடுகிறது.

"புட்டி... வெள்ளைப் புட்டி... மலை மாதிரிப் புட்டியள்... வெள்ளை மணல்... பால் மாதிரி மணல்... அந்தப் புட்டி வழிய ஏறுறதும்... சறுக்கிக் கொண்டு வாறதும்... (சிரிக்கிறார்) ஒரே விளையாட்டுத்தான்... தென்ன மட்டையக் கவட்டுக்க வைச்சு... பச்சை மட்டைய... அதைப் பிடிச்சுக் கொண்டு வலிக்க, அது அந்த மணல் புட்டியில வழுக்கிக் கொண்டு 'கிஸ்' செண்டு வேகமாச் சறுக்கிக் கொண்டு வருவம்... இப்பத்தயப் பிள்ளையள் சறுக்கெஸ் விளையாடுறதிலையும் பாக்க வேகமாகச் சறுக்கிக் கொண்டு வரும்... இப்பயும் அங்க மண் அந்த றோட்டு மீறுது. வழிஞ்சு வழிஞ்சு றோட்டில பரவுது. பல பெருங்கையளும் இராணுவமும் அந்த மண்ணை அள்ளிவித்தும் போட்டினம். மற்றது நாவல் பழம் புடுங்கப் போறது... நாவல் காடு அது..." மண்ணித் தலையில் வாழ்ந்ததில் மூத்தவர் என்ற அடிப்படையில் அல்பிரட் ஐயாவை அணுகியபோது அவரும் பெரு விருப்புடன் கதைபேசத் தொடங்கினார்.

"எனக்கு 12 வயசிருக்கும். அப்பா எங்களை மண்ணித்தலைக்குத் தங்கு தொழிலுக்குக் கூட்டிக்கொண்டு போனவர். முந்திப் பழைய காலத்தில... கன காலத்துக்கு முன்னரே அங்கை ஒரு கோவில். குருசார் என்று ஒரு கிழவர்தான் அந்தக் கோயிலை நடத்துறவர். அவற்றதான் அந்தக் கோவில். அவர்



செத்துப் போன பிறகு நெசத்துரை, ஓவியத்துரை எண்டு அவற்ற பிள்ளையள் ரெண்டுபேர். அதிலை நெசத்துரை எண்டவர்தான் அந்தக் கோவிலைப் பொறுப்பெடுத்தது. இந்தக் கோவிலைப் பராமரிக்கிறதுக்கு ஆசை என்டொரு கிழவி இருந்தது. அவாதான் மணி அடிக்கிறது, விளக்கு வைக்கிறது எல்லாம் செய்தவா. அங்கதான் தங்கியிருந்தவா. பிறகு நாங்க போகேக்க,...



முந்தி இஞ்சின் போட்டுகள் ஒண்டும் இல்லத் தானே... வள்ளங்கள் ஓடுறதெல்லாம் பாயில தான். நாங்கள் இஞ்சை யிருந்து தொழிலுக்குப் போகேக்க கம்புகள் கொண்டு போறது. அங்க கிடுகு வாங்கிக் கொட்டில் மாதிரிப் போட்டுட்டு இருக்கிறது. அப்ப எங்கட அப்பா கொட்டில் எல்லாம் போட்டுக் கீட்ட பிறகு எங்களக் கூட்டிக் கொண்டு போவார். நாங்க அங்க பத்துப் பதினைஞ்சு நாளிருப்பம். அங்கையிருந்து தொழில் செய்து முடிய அப்பர் இஞ்சை வந்து சமையல் சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவார். கறி நாங்க பிடிக்கிற மீன்தானே... மற்ற அரிசி, மிளகாய், தேங்காயெல்லாம் வாங்கி வருவார். அப்ப அங்க ரொய்லெற் வசதி இல்ல. பனங்காடு. பனங் காட்டுக்கதான் ரொய்லெற்றுக்குப் போறது. அப்ப ஒரு கிணறுதான் இருந்தது. அங்க கோவில் பெருநாள் வாற நாளுகளிலதான் எங்கட ஆக்கள் கூடுதலாக வருவாங்கள். லைற் ஒன்டும் இல்ல. அது கிட்டத் தட்ட 1953ஆம் ஆண்டு வரும்" தனது ஞாபகத்துக்கு எட்டியதெல்லாம் சொல்லி விட்டேன் என்பதைப்போல பெருமூச்செறிந்தார் ஐயா. ஆனாலும் அதில் திருப்தியில்லாத மாதிரியான சிந்தனையில் மூழ்கிய அவர், இன்னும் சில காலம் பின்தள்ளிப்போய்த் தனது வாழ்க்கையை மீட்டினார்.

"எங்களுக்கு முந்தின காலத்தில அங்க தொழிலுக்குப் போய் வந்த தொழிலாளியள் அந்த இடத்தில ஒரு கோயிலமைச்சுக் கும்பிட்டிருக்கினம். நாங்க போய் நிக்கேக்க அது கல்லால கட்டப்பட்டுக் கொட்டில் மாதிரிக் கூரை கிடுகால வேயப்பட்டிருந்தது. பிறகு தொழிலாளியள் அதிகம் அங்க போய்வரத் தொடங்கக் கோயிலக் கொஞ்சம் பெரிசாக்கி, ரெண்டு பக்கமும் விறாந்தை போட்டவை. ஆவணி மாதத்தில திருவிழா நடக்கும். எல்லாரும் திருவிழாவுக்குப் போய் வருவம். நாங்க தங்கி நிண்டு தொழில் செய்த இடத்துக்கு எங்கட குடும்பத்து ஆக்களைக் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டுறதும்... கடலால வள்ளத்தில போறதும் நல்ல அனுபவம். இஞ்சையிருந்து நாடகமும் பழகி, மேடையும் செய்து கொண்டுபோய்த் திருவிழாக் காலங்களில அங்க நடிக்கிறனாங்கள். அந்தக் காலம் இப்பயும் அப்பிடியே கண்ணுக்க நிக்குது. முந்தி அங்க தேரில்ல, கூடு என்று சொல்லுறது, அது தான் இருந்தது. தேளில தூக்கிக்கொண்டு போறது. ஆனாப் பிறகு தேர் செய்தவை... அது பெரும் சோகக் கதை..." தனது சிறு பராய வாழக்கையும், கடந்து வந்த வாழ்க்கையின் அனுபவங்களையும் மகிழ்வோடும், பூரிப்போடும் மீட்டிக் கொண்டிருந்தவரின் முகத்தில் இப்போது சோகம் படர்ந்தது... சிறிது நேரம் வரை அந்த இடத்தை அமைதி ஆட்கொண்டது. அல்பிரட் ஐயா தொடர்ந்தார்.

"தேர்... இந்த இயக்கங்கள் வந்த வருசங்கள்... (ஞாபகமற்றுத் திக்குமுக்காடினார்) 74ஆம் ஆண்டுவாக்கிலதான் நெசத்துரையால செய்யப்பட்டது. பிறகு பிரச்சினைகளுக்குள்ள அவர் இடம்பெயந்திருக்க, தொழிலாளியளும் அங்காலப் பக்கம் போறதில்லத்தானே, ஆலயத்த இடிச்சத், தேரை எரிச்சுப் போட்டாங்கள்... இதைக் கேள்விப்பட்ட நேசத்துரையர் அந்த ஏக்கத்திலயே செத்துப்போயிற்றார். ஆலயத்தில அவ்வளவு பற்றாயிருந்த மனிசன்... (சிறிய அமைதி).

(21 ஆம் பக்கம் பார்க்க)

## மறக்கமுடியாத...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தேர்... கிட்டத்தட்ட 70 - 73 ஆம் ஆண்டில செய்தது. பாசையூர் பெரிய கோயிலில வைச்சுச் செய்து அங்கை கொண்டுபோனது. இராசதுரை எண்டுற ஆசாரிதான் அதைச் செய்தவர். தனித் தேக்கு மரத்தால செய்யப்பட்ட வடிவான தேர். பெரிய தேர். இஞ்சையிருந்து கடலாலை அதைக் கொண்டு போறதுக்கு அதுக்கெண்டு வள்ளம் செய்து... பிறகு அதோடை இன்னொரு வள்ளமும் இணைச்சுக் கட்டித் தேரைப் பாட்ஸ் பாட்ஸாக் கொண்டு போய் அங்கை பொருத்தினது. தேரைப் பாதுகாப்பா வைக்கிறதுக்குத் தனிக் கட்டடமும் கட்டினது. பெருஞ்செலவில எல்லாத்தையும் நேசத்துரையர் பாத்துப் பாத்துச் செய்தவர். அங்கை கொண்டுபோய்க் கோவிலில கிட்டத்தட்ட 90ஆம் ஆண்டுவரைக்கும் தேர் இழுத்துத் திருவிழா நடந்தது. பிறகு பிரச்சினை பெரிசானதும் எல்லாரும் இடம்பெயர்ந்து போக அங்க இயக்கம் இருந்தது. அவங்கள் கோயில வடிவாப் பராமரிச்சவை. கூரையெல்லாம் கழட்டுப்பட்டுக் கிடந்த கோயிலை ஓலையால வேய்ஞ்சு நல்ல வடிவா வைச்சிருந்தவை. பிறகு சண்டை தொடங்கினதும் இராணுவம் போய்த் தேரை எரிச்சுப் போட்டுது... கோயிலுக்கும் பலத்த சேதம். பிறகு இப்ப கோயிலைக் கட்டியெடுத்தாச்சுது. தேர் எங்கடை ஞாபகத்திலை மாத்திரம்தான் இருக்குது. இப்ப வரைக்கும் தேரில்லை...." அல்பிரட் ஐயாவின் அமைதியின் பின்னாள் ஒளிந்து கிடந்த பெருங்கவலைக் கதை இப்போதுதான் முழுமையடைந்தது.

## தயாராகிறது அவதார் 2



ஜேம்ஸ் கெமரூன் இயக்கத்தில் வெளிவந்த அவதார் திரைப்படம் உலகையே ஒரு கலக்குக் கலக்கியது. அதுவரைக்கும் திரைப்படத் தயாரிப்பில் இருந்து வந்த தொழில்நுட்ப அறிவையெல்லாம் தூக்கிச் சாப்பிடுமளவிற்கு அசாத்தியமான வரைகலை வடிவத்துடன் வெளிவந்த அந்தப் படம் உலகம் முழுவதும் சக்கைபோடு போட்டது. அவதாரின் முதல் பாகத்தின் போதே அது 4 பாகங்களாக எடுக்கப்படும் என்று கெமரூன் அறிவித்திருந்தார். அதற்கான படப்பிடிப்புக்களும் வேகமாக நடந்துவந்தன. ஆனால், கொவிட்-19 பெருந் தொற்றுத் தாக்கத்தால் அனைத்தும் நின்று போயின.

அண்மையில்தான் மீண்டும் அவதார் அணி படப்பிடிப்புத் தளத்திற்குத் திரும்பியிருந்தது. இப்போது பாகம் 2 படப்பிடிப்பு முழுமையாக முடிவடைந்துவிட்டதாகவும் பாகம் 3 இன் பணிகளில் 5 சதவீதத்தை மட்டுமே படமாக்க வேண்டியிருப்பதாகவும், தனக்கு மிகவும் பிடித்தமான கதாநாயகன் ஆர்னல்ட் சுவாஸ்நேக்கருடன் பேசும் போது தெரிவித்திருக்கிறார். 2022ஆம் ஆண்டில் பாகம் 2ஐயும் 2024ஆம் ஆண்டில் பாகம் 3 ஐயும் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

## கார்ட்டூன்




## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 2 | | | | 8 | 4 | |
| | | | | 1 | 3 | | 2 | |
| | | 7 | | 4 | | | | |
| 3 | 2 | 4 | | | | | 6 | |
| | 7 | | 5 | | 2. | | 9 | |
| | 1 | | | | | 3 | 7 | 2 |
| | | | | 9 | | 4 | | |
| | 4 | | 8 | 6 | | | | |
| | 5 | 3 | | | | 7 | | 6 |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A,** கஸ்தூரியார் வீதி,
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 2 | 5 | 6 | 1 | 8 | 4 | 9 |
| 8 | 1 | 5 | 4 | 2 | 9 | 3 | 7 | 6 |
| 6 | 9 | 4 | 7 | 8 | 3 | 5 | 2 | 1 |
| 1 | 8 | 3 | 6 | 5 | 2 | 7 | 9 | 4 |
| 4 | 2 | 9 | 8 | 1 | 7 | 6 | 3 | 5 |
| 5 | 7 | 6 | 9 | 3 | 4 | 2 | 1 | 8 |
| 9 | 4 | 8 | 3 | 7 | 5 | 1 | 6 | 2 |
| 3 | 6 | 1 | 2 | 9 | 8 | 4 | 5 | 7 |
| 2 | 5 | 7 | 1 | 4 | 6 | 9 | 8 | 3 |

## செம்மணி

### வாரமலருக்கு...


- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.



## சம்பந்தர் கடையடிச் சமா...

வீட்டை விட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியால போயிட்டு வருவமெண்டு வெளிக்கிட்ட நேரம் வாசலிலை கனகண்ணை வந்து நிக்கவும் சரியா இருந்துச்சு.

"அண்ணை எங்கையண்ணை அவசரமாப் போறாய்? கடையடிக்கே... எடு நானும் வாறன்.. உவங்கள் பெடியள் படுற பாட்டைப் பற்றி உன்னட்டைக் கதைப்பம் எண்டு வந்தா நீ எங்கயோ அவசரமாய்ப் போறாய்...." என்று கதை போட்டார் கனகர்.

"இப்ப என்னண்ணை வேணும் உனக்கு? சைக்கிள் பெடியளைப் பற்றி நான் புகைஞ்சு தள்ளவேணும், அதைக் கேட்டுட்டு நீ போய் ஏதோ நீ கண்டுபிடிச்ச மாதிரி அப்பனுக்கும், சுப்பனுக்கும் கதை விட வேணும் அதுதானே? வா.. வா.. நானே வந்து உங்களுக்குச் சொல்லுறன்" என்று கனகரைச் செல்லமாய்க் கடிந்தபடி சைக்கிளைச் சந்தி நோக்கி மிதிக்கத் தொடங்கினேன்.

சந்தியடி ஏற்கனவே களை கட்டியிருந்தது. இந்தக் காலத்தில போனிலையே குறாப் போட்டுப் பலதையும் பத்தையும் கதைத்தாலும், சந்தியில நாலு பேர் கூடி, நல்லது கெட்டதுகளைக் கதைச்சுட்டுப் போறதைப் போல வராது பாருங்கோ எங்களுக்கு.

போன கிழமை முன்னணியில இருந்து உவன் மணியை விலக்கிறதா ஜீ.ஜியின்ற பேரன் பகிரங்கமாக அறிவிச்சதில எங்கட ஆக்களுக்கு வலு சந்தோசம். அந்தக் காலத்தில இருந்து எங்கட இடம் காங்கிரசுக்குக் கோட்டையாத் தான் இருந்து வந்தது. என்ன தான் காலம் போனாலும் காங்கிரஸ் எண்டா... அது பொன்னம்பலம் குடும்பம் தானே... பேரன் போக, குமார்.. அவருக்குப்பிறகு இப்ப கஜன். இப்பிடியே அடுத்த தலைவர் பதவிக்கும் ஆள் ரெடி. இதுக்குள்ள இப்ப வந்த மணி எப்பிடித் தலைவருக்கே சவால் விடலாம்? இது தான் இப்ப சந்தியில சூடாகப் பேசப்படுற விசியம்...

இதைப் பற்றி நான் சொல்லத் தாங்கள் கேக்க வேணும் எண்டது போல என்னைக் கண்டதும் எல்லாரும் கப் சிப். "என்ன டாப்பா எல்லாரும் பேயறைஞ்சது போல இருக்கிறியள்? என்ன பிரச்சினை உங்களுக்கு?" நானே அமைதியைக் கலைத்தேன்.

"இல்லையண்ணை! அந்தக் காலத்தில இருந்து நீங்க சொல்ற கட்சிக்குத் தானே நாங்க வாக்குப் போட்டனாங்க? எப்பவாவது மறு பேச்சுப் பேசினாங்களே? இப்ப என்ன நடக்குது உன்ரை கட்சிக்குள்ள?" எண்டு தொடங்கினார் சுப்பண்ணை.

"தம்பியவை இங்க பாருங்கோ! உங்களுக்கு மட்டுமில்ல, எனக்கும் இதே சந்தேகம் இருக்குத்தான். உந்தப் பிரச்சினை தொடங்கின நாளில் இருந்து நான் பாத்துக்கொண்டுதான் வாறன்... மொத்தத்தில பாக்கப் போனா இது கட்சிப் பிரச்சினை இல்லை. தனிப்பட்ட பிரச்சினை. இரண்டு பேருக்குள்ள தொடங்கின பிரச்சினை இப்ப இங்க வந்து நிக்குது.

இன்னுமொண்டு சொல்லட்டே? எங்கட தமிழ்க் கட்சிகளுக்குள்ள எந்தக் கட்சியில பிரச்சினை இல்லை? கூட்டமைப்புக்குள்ள பார் மாவை - சுமந்திரன் அடிதடி, மீனுக்குள்ள பார் அனந்தி - அருந்தவபாலன், சுரேஸ் - சிறீகாந்தா இங்கால சுகாஸ் - மணி எண்டு வெட்டுக்குத்து எல்லா இடமும்தான் இருக்குது.

இதுக்குள்ள குத்து வெட்டுப்படுற மெயின் ஆக்களுக்குள்ள இருக்கிற அடிபிடியைவிட ஆளாளுக்குச் செம்பு தூக்கிற ஆட்களால தான் எல்லா இடமும் இந்த அளவில வந்து நிக்குது.

முன்னணிக்குள்ளயும் பிரச்சினை இவளத்துக்கு வாறதுக்குக் காரணம் அந்த அப்புக்காத்து அரசியல்தான். சரியோ பிழையோ தெரியாது சட்டத்தரணி மணிவண்ணனுக்கும், சட்டத்தரணி சுகாசுக்கும் இடையில் ஆரம்பத்தில இருந்து சின்னக் கஜால் இருந்திருக்கு... அதுபோன வருசம் நவம்பரில நடந்த அதிபர் தேர்தலோடை சூடு பிடிச்சிட்டு.

அதிபர் தேர்தலிலை ராஜபக்சக்களை ஆதரிக்கக் கூடாது எண்டதுக்காக எண்டு சொல்லிக் கூட்டமைப்பார் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க, தாங்கள் அதிபர் தேர்தலைப் புறக்கணிக்கப் போறதா முன்னணி அறிவிச்செல்லே? அந்தக் கையோடையே அப்புக்காத்துமாரிண்டை பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமா வெளில வரத் தொடங்கிற்றுது.

அதிபர் தேர்தலைப் புறக்கணிச்சது சரியா? பிழையா? எண்டு தேர்தல் முடிஞ்ச கொஞ்ச நாளில முன்னணித் தலைமைப் பீடம் தன்னுடைய சகல உறுப்பினர்களையும் கூப்பிட்டு ஒரு கருத்தறியும் கூட்டத்தை கூட்டியிருக்குது... அந்தக் கூட்டத்தில... தேர்தலைப் புறக்கணிக்க நாங்கள் சொன்னதை மக்கள் கணக்கெடுக்கவே இல்லை. அதால இது ஒரு தவறான முடிவு எண்டு கட்சிக் கூட்டத்தில மணி முழுங்கித் தள்ள... அதைக் கேட்டுக் கொண்டிருந்த கொஞ்சச் சின்னன் சிறுசுகளும் அண்ணை சொல்லுறது சரிதானே எண்டு ஆமோதிச்சுப் போட்டுதுகள்.... அதோடை பொன்னம்பலத்தின்ரை பேரனுக்கும் கொஞ்சம் சூடு. அண்டைக்குத் தான் மணிக்குச் சனி பிடிக்கத் தொடக்கிட்டுது.

மணியில கட்சித் தலைவர் காண்ட் ஆகிட்டார் எண்டதை வச்சுக் கொண்டு காலங்காலமாகக் காட்டிக் குடுக்கிறதைத் தொழிலாச் செய்யுற ஆக்கள் குமாருக்குத் தூபம் போடத் தொடங்கிச்சினம். நேரடியாத் தாங்கள் தூபம் போடுறது மட்டுமில்லாமல், தங்களோடை நிக்கிறதுகளையும் கிண்டி விட்டிச்சினம். அதுக்குப் பிறகு வட்சப் - வைபர், பேஸ் புக் எண்டு வெளியில வராம கட்சிக்காரங்கள் அத்தனை பேருக்குள்ளும் விசியம் புகையத் தொடங்கிட்டு....


இப்பிடியே போய்க் கொண்டிருக்கேக்கதான் பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியில வந்துச்சு.... மணியை வெளியில விடவேணும் எண்டு நிண்டவை எல்லாருமா... கட்சித் தலைவரிட்டப் போய் ஒரேயடியா மணியை வெளியேத்துங்கோ எண்டு நிண்டிச்சினம். தொண்டர்களுக்கு மேலால பொதுச் செயலாளர் கொடி தூக்கினார்.

அண்ணை உவனை (மணியை) இப்பிடியே விட்டீங்க எண்டா இந்த முறை எனக்கோ, உங்களுக்கோ சீற் கிடைக்காது எண்டுகூடப் போட்டுப் பாத்திச்சினம். ஆனா தலைவர் அண்டைக்கே ஒரு கணக்குப் போட்டுட்டார்....."

நான் செல்லிக் கொண்டிருக்க... அத்தனை பேரும் ஆ... எண்டு வாயைப் பிளந்து கொண்டிருக்க நேரம் போனதே தெரியேல்ல... வீட்டில இருந்து கண்ணம்மா கோல் அடிக்கத்தான் இருட்டினது தெரிஞ்சுது. "வயசான நேரத்தில... இருட்டுக்குள்ளால அங்க இங்க முட்டுப்பட்டிராம வந்து சேருங்கோ" எண்டு ஆசைப் பொண்டாட்டி சொல்லேக்க ஆரால மீற முடியும்?

அப்ப வெளிக்கிடட்டே? தலைவர் என்ன கணக்குப் போட்டார்? அது எப்பிடிச் சொதப்பிச்சுது எண்டு பிறகு செல்லுறன்...

- ஆதிரன்




# டைனோசர்களுக்கு முடிவு !

பூமியில் வாழ்ந்த மிகப் பெரிய விலங்கினமாகக் கருதப்படுகின்ற டைனோசரைப் பற்றி இதுவரை இருந்து வந்த ஆய்வுகளும், விவாதங்களும் இத்துடன் முடிவுக்கு வருகின்றன என்று அது குறித்து ஆராய்ந்து வந்த குழு ஒன்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனிலுள்ள சேர்ந்த போர்ட்ஸ்மௌத் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அந்த ஆராய்ச்சியாளர்கள் குழு தங்களுக்குக் கிடைத்துள்ள 1,200க்கும் மேற்பட்ட டைனோசர்களின் பற்களைக் கொண்டு அவை 'மிகப் பெரிய அசுரத்தனமான' விலங்காக வாழ்ந்துள்ளன என்பதை நிரூபித்துள்ளது.

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பாய்ந்த நதியொன்றில் கண்டெடுக்கப்பட்ட இந்த எச்சங்களை ஆராய்ந்ததில் இது குறித்து தெரியவந்துள்ளதாகக் கிரெட்டேசியஸ் ரிசெர்ச் என்ற சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய மொராக்கோவின் சஹாரா பாலைவனத்தின் ஊடாக ஓடிய அந்த நதியின் படுக்கையிலேயே இந்த ஸ்பைனோசொரஸ் வகை டைனோசர்களின் புதை படிவுகள் அதிக அளவில் கண்டறியப்பட்டன. அவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் இறுதி முடிவாக, சுமார் 49 அடி நீளமும், ஆறு தொன் எடையும் கொண்ட இந்த வகை டைனோசர் நிலத்தில் வேட்டையாடும் விலங்கினமாக அல்லாமல், பெரும்பாலும் நீர்வாழ் விலங்கினமாக வாழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.



இதே ஸ்பைனோசொரஸ் வகை டைனோசரின் வால் பகுதியைக் கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் வெளிவந்த ஆராய்ச்சி முடிவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்தப் புதிய ஆய்வு முடிவு இருக்கிறது. ஸ்பைனோசரஸ், டைரனோசொரஸ் ரக டைனோசரை விட அளவில் மிகப் பெரியதாக இருந்ததுள்ளது. இதுவரை கிடைத்துள்ள ஸ்பைனோசொரஸ் ரக டைனோசர்களின் பற்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, தண்ணீர் குடிப்பதற்காக அவ்வப்போது நதிக்கரைக்கு வந்து செல்லும் டைனோசர்களை விட, தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை நீரிலேயே கழித்த ஒன்றாக அவை இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அதனால்தான் அவை குறித்த புதை படிமங்கள் வரலாற்றுக்கு முந்தைய நதிக்கரையில் கிடைத்திருக்கின்றன. ஸ்பைனோசொரஸ்களின் புதைடிமங்கள் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தில் முதன்முதலாகக் கண்டறியப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆறாவது குண்டு

நெடுங்கதை அத்தியாயம் 11

**கலியுக பித்தன்**

காதல் அவன் கண்களை கலங்க வைத்தாலும், குழப்பங்களால் கலங்கியிருந்த அவன் மனம் தெளிந்தபாடில்லை. அவள் அணைப்பு சில கணங்களுக்கு அவனைச் சாந்தமடையச் செய்த போதிலும், அவனால் தொடர்ந்தும் அவ்வாறு இருக்க முடியவில்லை. திடீரெனத் தொலைபேசி அலறவே ராகுல், ரஸ்விகாவிடம் இருந்து தன்னை விலக்கிக் கொண்டு தொலைபேசியைக் காதோடு அணைத்தான்.

"ஹலோ.. யார்.."

"நான் தமிழ்செல்வி..." அந்தப் பெயரை கேட்டதும் சற்று நிலை தடுமாறி ரஸ்விகாவை திரும்பி பார்த்தான் ராகுல். கலங்கிய கண்ணை கசக்கி கொண்டு தரையை நோக்கி தலையை குனிந்தபடி நின்றாள்.

"தமிழ்ச்செல்வியா..." காட்டி கொள்ளாமல் பதிலளித்தான்.

ராகுல் தமிழ்செல்வியா என்று பதிலளித்ததைக் கேட்ட ரஸ்விகா கண்களை துடைத்து கொண்டு ராகுலின் பக்கமாக வந்து நின்றாள்.

ராகுலின் கேள்வியைப் புறக்கணித்து விட்டு "ரஸ்விகா இருக்கிறாளா?" என்றது குரல்.

ஏமாற்றமாகப் போயிருந்தாலும் ரிசீவரை கைகளால் பொத்திக்கொண்டு "தமிழ்ச்செல்வி யாம்" தாழ்ந்த தொனியில் ரஸ்விகாவிடம் சொன்னான் ராகுல்.

அவன் சொன்னதுதான் தாமதம், அவனிடம் இருந்து ரிசீவரை ஒற்றி பறித்து தன் வலது காதருகே கொண்டு சென்றாள்.

"ஹலோ.. தமிழ்செல்வி.. நான்தான் ரஸ்விகா.. நீ எங்க இருக்கிறாய்? நான் எவ்வளவு பதறிப் போயிட்டேன் தெரியுமா..."

தமிழ்ச்செல்வியின் குரலுக்குப் பதிலாக இணைப்பு துண்டிக்கப் பட்டதை உறுதிப்படுத்தும் மூன்று சிறு ஒலிகளை எழுப்பி அமைதியானது தொலைபேசி.

ரிசீவரைக் கோபத்தோடு வைத்துவிட்டு, ராகுலை ஏமாற்றத்தோடு நோக்கினாள். அவன் முகம் முன்பைவிட அதிகமாகக் கலவரம் அடைந்திருந்தது. அவன் இருக்கும் மன நிலைக்கு ரஸ்விகாவிடம் கேட்பதற்கு எத்தனையோ ஆயிரம் கேள்விகள் இருந்தாலும் அதை எப்படிக் கேட்பது என்கின்ற கேள்வியே அவன் முன்நின்று அவனைக் கேட்க விடாது தடைப்படுத்திக் கொண்டிருந்தது.

● ● ● ● ● ●

அழைப்பு துண்டிக்கப்பட்டதன் பிற்பாடு மீண்டும் மீண்டும் முயற்சி செய்தும் தமிழ்ச்செல்வியால் அழைப்பை ஏற்படுத்த முடியவில்லை. ஏமாற்றமும், விரக்தியும் அவளை ஒருபுறம் வாட்டி எடுக்க, பலமாக அடிபட்டு ஆங்காங்கே இலேசாகக் குருதி கசியும் உடற் காயங்களும் அவளைப் புரட்டி எடுத்தது.

மனதளவில் இதைவிட எத்தனையோ காயங்களைச் சுமந்தவளுக்கு இது பெரிதாக இருக்கப்போவதில்லை என்றாலும், வெளிப்படாத மனக் காயத்தின் வலிகளும் இது மாதிரியான சந்தர்ப்பங்களில் தானே வெளிப்படுவதுண்டு.

கொலை முயற்சியில் இருந்து இந்தக் காயங்களுடன் தான் தப்பி வந்தது அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இப்படி பயங்கரமான கொலை கும்பலும் இருக்க முடியுமா என்றும் அவளை எண்ண தூண்டியது அவளுக்கு ஏற்பட்ட துர் அனுபவம். இனத்திற்காக தம்மை அர்ப்பணம் செய்யும் மாவீரர்கள் வாழ்ந்த மண்ணிலும் அர்ப்பர்களும் பிறந்துதானே இருக்கின்றனர் என்று நொந்து கொண்டாள்.

● ● ● ● ● ●

ரஸ்விகாவை தன்னுடைய அறையில் இருக்கும்படியும், தான் அவசர வேலையாக வெளியில் செல்ல வேண்டும் என்றும் அவளிடம் சொல்லி விட்டு அவசர அவசரமாக புறப்பட்டான் ராகுல். திடீரென்று அவன் புறப்படுவது ரஸ்விகாவிற்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தாலும், போகும் போது தடையாக இருக்க கூடாது என்பதற்காக சம்மதம் என்ற பாணியில் உதட்டோர சிறு புன்னகையுடன், தலை அசைத்து வழி அனுப்பி வைத்தாள்.

அங்கிருந்து புறப்பட்ட ராகுல் நேராக கவிந்தின் ஒப்பிஸுக்குச் சென்றான். தீராத யோசனையில் ஆழ்ந்து போயிருந்த கவிந்த் அறை அழைப்பு மணியின் நீண்ட நேர ஒலிப்பின் பின் தன்னைச் சுதாகரித்து கொண்டு நிதானமானான்.

"யெஸ் கம் இன்" கம்பீரமான தொனியில் கர்ஜிக்க, அவன் எதிரில் ராகுல் வந்து நின்றான். ராகுலை, அந்த நேரத்தில் அந்த இடத்தில் கவிந்த் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆச்சரியம் கண்ணை மொய்ச்சு கொண்டிருந்தாலும் சமாளித்து கொண்டு "என்ன ராகுல் திடீர்ன்னு..." இழுத்தான்.

"நாங்க இங்க வர கூடாதா சேர்" கேலி புன்னகையோடு கேட்டான்.



கவிந்த் இருந்த நிலமையில் ராகுலின் குறும்பு கேள்வி அவனை அதிகமாக இம்சைப்படுத்தியது.

"சரி சரி என்ன விஷயம்... சொல்லு" வேண்டா வெறுப்பாக இரைந்தான் கவிந்த்.

"கேஸ் என்ன நிலைல இருக்கு?" ராகுல் அப்படி கேட்டதும் கவிந்த் திடுக்கிட்டான். கேஸ் என்ன நிலையில் இருந்தால் உனக்கு என்ன என்ற பாணியில் ராகுலை பார்த்தது மட்டுமில்லாமல் "அதை பற்றி உனக்கென்ன கவலை? அது என்னோட வேலை..." என்று வாய்விட்டுச் சத்தமாக சொன்னான்.

வாய்க்குள் லேசாக புன்முறுவலை உதிர்த்துக் கொண்டு தன்னுடைய பாக்கெட்டுக்குள் இருந்து ஒரு அடையாள அட்டையை எடுத்து கவிந்தின் முகத்திற்கு நேராக காண்பித்தான் ராகுல். அதை பார்த்ததும் கவிந்தின் முகம் இருண்டு, வியர்க்கத் தொடங்கிற்று.

அடுத்த கணமே "சேர்.." என்று சொல்லி கொண்டே எழுந்து சல்யூட் அடித்து மரியாதையோடு நின்று கொண்டான் கவிந்த்.

தொடரும்...

## மீன்களும் சில நாரைகளும்



*நிர்வாணக் குளத்தில்*
*செதிலாடை கட்டிய மீன்களுக்கு*
*கற்பைப் பற்றிய கவலையுமில்லை*
*வெட்கம் பற்றிய புரிதலுமில்லை*
*கண்ட இடத்திலெல்லாம் புணர்ந்து கிடக்கிறது*
*மீன்களின் இந்திரியங்கள்*
*அங்கங்கே*
*பாறைகளுக்கிடையில் முட்டையாகிறது*
*தவளைகளுக்கென்ன*
*தண்ணியிலும் சரி*
*தரையிலும் சரி*
*வாழ்ந்துவிட்டுப் போகும்*
*மீன்களுக்கு*
*நீரின்றி அமையாது உலகு*
*யார் நினைத்தார்கள்*
*நீர் பற்றியும் மீன் பற்றியும்*
*குளத்துக்கு பாவாடை கட்ட வக்கில்லை*
*மீன்கள் கட்டிலில்தான் புணரவேண்டுமென்கின்றன*
*சில நாரைகள்*
*நீரின்றி நாரைகளாலும் வாழ்தல் முடியா*
*இது நாரைக்கும் தெரியும்*
*நீருக்கும் தெரியும்*
*ஆனாலும் அவை*
*நீர் பற்றிய கவலையின்றி*
*மீன்களின் புணர்தல் பற்றியே புலம்புகின்றன*
*இப்போதைய தேவையெல்லாம்*
*நிர்வாணம் மறைத்தலல்ல*
*கூடு கட்டி மறைவிருந்து புணர்தலுமல்ல*
*ஒரு பிடி ........*
*மண்ணோ...சோறோ....*
*கொடுங்கள்*
*தின்றுவிட்டுக் கதைப்போம்*
*நிர்வாணம் பற்றியும் புணர்தல் பற்றியும்*
*பசியால் பத்தொடு பதினொன்றாய்*
*கற்பும் பறக்கிறது*
*'யோனி' என்பது*
*வயிற்றை விட முக்கியமாய்ப் படவில்லை எனக்கு*
*உங்களுக்கு?*

**- சி.ப.வேந்தன்**

## அகராதி பிடிச்சவன் பதில்கள்



**கே: பன்னீர்செல்வம், வெள்ளவத்தை.**
போரின்போது பலவந்தமாகக் காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஆயிரம் நாள்களைத் தாண்டியும் தொடர்ந்து போராடுகிறார்களே, அவர்களுக்கு எப்போது தீர்வு கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்?

**ப:** இவர்களின் போராட்டத்தை நேரில் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை முன்பாக நடந்துவரும் ஒரு அடையாளப் போராட்டம் தான் ஞாபகத்திற்கு வரும். அணு ஆயுதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தொடங்கப்பட்ட அந்தப் போராட்டம் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. 1981ஆம் ஆண்டு வில்லியம் தோமஸ் என்பவர் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினார். ஒரு நெகிழிக் (பிளாஸ்ரிக்) கூடாரம் அதைச் சுற்றித் தொங்கவிடப்பட்டிருக்கும் வாசக அட்டைகள் என்பவற்றோடு யாராவது ஒருவர் அந்தக் கூடாரத்திற்கு உள்ளேயோ வெளியேயோ அமர்ந்திருப்பார். 4 தசாப்தங்களாக இப்படித்தான் போராட்டம் தொடர்கிறது. முடிவில்லை. இனியும் தொடரும். தோமஸ் இறந்து போன பின்னர் நீண்ட காலமாக பிக்சியோட்டோ என்கிற பெண்மணி அந்தக் கூடாரத்திலேயே தங்கியிருந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார். அவரது காலத்தின் பின்னர் இப்போது நாளொன்றுக்கு ஒருவர் என்கிற அடிப்படையில் தொண்டர்கள் அந்த இடத்தில் இருக்கிறார்கள். வோஷிங்டன் நகர சபையும் காவல் துறையினரும் இந்த இடத்தில் இருந்து ஒரேயொரு நாள் இடைவெளி கிடைத்தாலும் போராட்டத்தை அகற்றிவிடுவார்கள். அது நடக்காமல் இருப்பதற்காக தொண்டர்கள் மாறி மாறி ஒவ்வொருவராக அந்தப் போராட்டக் களத்தில் இருக்கிறார்கள். இப்போது அந்த இடத்தில் - வெள்ளை மாளிகை முன்பாக - போராட்டம் நடத்த முடியாது என்று சட்டம் கொண்டு வந்துவிட்டார்கள். ஆனால், அந்தச் சட்டத்திற்கு முற்பட்டது இந்தப் போராட்டம் என்பதாலும், அது தொடர்ந்தும் நடந்து வருகின்றது என்பதாலும் அதனை அகற்றமுடியாமல் விட்டு வைத்திருக்கிறார்கள். காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்களும் இங்கு கட்சிகளின் தேவைக்கேற்ற அரசியலாகக் கையாளப்படும் நிலையில் அதற்கும் எப்போது தீர்வு என்பது அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.




**கே: ந.பவித்திரன், கோப்பாய்.**
இப்போதெல்லாம் பெண்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்வதற்கு அதிக நேரமும் பணமும் செலவழிக்கிறார்களே! இது தேவையா?

**ப:** ஒவ்வொருவரும் தம்மை அழகுபடுத்திக் கொள்ள எண்ணுவதில் தவறில்லை. ஆனால், அழகு என்று சமூகம் வைத்திருக்கும் கற்பிதங்களின் நிர்ப்பந்தங்களுக்காகப் பெண்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்ள முயன்றார்களானால் அது தவறு. மற்றப்படி தத்தம் வசதிக்கேற்ப ஒவ்வொருவரும் தம்மை அழகுபடுத்திக் கொள்வது காலம் காலமாக நடப்பதுதான். ஆனால், இதிலும் கவனம் தேவை. 2013ஆம் ஆண்டில் சீனாவில் ஒரு விசித்திர வழக்கு நடந்தது. தனது குழந்தையை அவலட்சணமாகப் பெற்றுத் தந்தார் என்று தெரிவித்து ஒரு பெண்ணிடம் நட்டஈடு கேட்டு அவரது முன்னாள் கணவன் நீதிமன்றத்தை நாடியிருந்தார். நீதிமன்றமும் அவருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் டொலர்கள் நட்டஈடு கொடுக்கும்படி அந்தப் பெண்ணுக்குக் கட்டளையிட்டது. நடந்தது இதுதான், அந்தப் பெண் தனது கணவரைச் சந்திப்பதற்கு முன்னர் தன்னை அழகாக்கிக்கொள்ள பல தடவைகள் பிளாஸ்ரிக் அறுவைச்சிகிச்சை செய்து கொண்டுள்ளார். ஆனால் குழந்தை பிறந்தபோது அது அந்தப் பெண்ணைப் போல அழகாக இருக்கவில்லை. அவரது கணவரைப் போலவும் இருக்கவில்லை. முதலில் கணவனுக்கு குழந்தை வேறு யாருக்காவது பிறந்திருக்குமோ என்று சந்தேகம். மரபணு சோதனையில் குழந்தை அவருடையதுதான் என்று உறுதியானது. பின்னர்தான் அந்தக் குழந்தை அதன் தாயினது உண்மையான முகத்துடன் பிறந்திருக்கிறது என்பது தெரியவந்தது. எனவே தம்மை அளவுக்கதிகமாக அழகுபடுத்துபவர்கள் கொஞ்சம் கவனம்.

**கே: சி.விசித்திரன், கற்கோவளம்.**
தியாகி திலீபனின் நினைவேந்தலை இலங்கை அரசு தடுத்ததை எதிர்த்து நடத்தப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் பெரு வெற்றி என்கிறேன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**ப:** இதில் வெற்றி என்று நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்? கடைகள் பூட்டப்பட்டதையா, அல்லது அந்தப் போராட்டத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிறைவேறிவிட்டது என்பதையா? கடைகள் பூட்டப்பட்டது தான் வெற்றி என்று நீங்கள் கருதினால், அது தவறு. கடைகளை நடத்துபவர்கள் முதலாளிகள். அவர்கள் எல்லோருமே தமது உணர்வுக்கு மதிப்பளித்துத்தான் இந்தக் கடைகளைப் பூட்டினார்கள் என்று சொல்லிவிடமுடியாது. பூட்டுவதாலும் பூட்டாமல் விடுவதாலும் ஏற்படக்கூடிய இலாப நட்டக் கணக்கைப் பார்த்து அவர்கள் அதனைச் செய்வார்கள். பூட்டாமல்விடுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய துன்பங்கள், துயரங்கள், சொத்துச் சேதங்கள், வியாபாரத் தொய்வுகள் என்பவற்றைக் கணக்கிட்டு அதுவா ஒருநாள் வியாபாரமா மேலானது என்கிற அடிப்படையில் இந்தக் கணக்கு அமைந்திருக்கும். இவர்கள் சிலர் உணர்வுபூர்வமாகவும் கடைகளை அடைப்பார்கள் என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் அந்த எண்ணிக்கையினர் மிகச் சிறியளவினரே. மற்றம்படி அரச அலுவலகங்கள் வங்கிகள் எல்லாம் வெளியே மூடப்பட்டதாகக் காட்டப்பட்டாலும் உள்ளே மூடப்படவில்லை. ஆக மொத்தத்தில் முழு அடைப்பு என்பது ஒரு வெளித்தோற்ற மாயை மட்டும்தான். இந்த அடைப்பால் ஏதாவது பயன் ஏற்பட்டதா என்றால், ஒருவேளை நீண்டகால அரசியல் பயன்கள் அதற்கு இருக்கக்கூடுமாக்கும். அதைத் தவிர்த்து உடனடிப் பயன் ஏதுமில்லை. எனவே அந்த வகையில் பார்த்தாலும் அது வெற்றி எனக் கொள்ள முடியாது. ஒட்டுமொத்தத்தில் இது வெற்றி ஆனால் வெற்றியில்லை என்கிற கதைதான்.




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781